# இந்து தீபம்

## 2001



230
இந்து
SL/PR

இந்து மன்றம்

கொழும்பு பல்கலைக்கழகம்

கலைவிழா சிறப்புற

வாழ்த்துக்கள்


**K.THAVABALACHANDRAN**

Personal Classes for A/L

(WITH LAB FACILITIES)

**No. 42, Lilly Avenue**
**Colombo - 6**
**Tel : 584853**

Kumarasamy Somasundaram
President
Colombo Tamil Sangam,
7, 57th Lane, Colombo - 06.
Telephone No:- 2363759

பூமியிலங்கும்
புத்தொளிபரவி
நாமினி வாழ்வில்
நல்லவை காண
நாளைய நாளில்
நல்லவர் வெல்ல
ஏழாம் அகவையை
இனிதே காணும்

230
திரு. கு. சோமசுந்தரம்
23.07.2006

# இந்து தீபம்

## 12-08-2001

இந்து மன்றம் - கொழும்பு பல்கலைக்கழகம்

39154

வலைத்தள முகவரி
www.hindu.4t.com
மின்னஞ்சல் முகவரி
hindusociety@hindu.4t.com

# Hindu Society - University of Colombo

## OFFICE BEARERS 2000/2001

### Patron

Vice Chancellor
University of Colombo

### Senior Treasurer

(Mrs.) Prof. Y. Rasanayagam

### President

Mr. K. Kalaichelvan

### Vice President

Mr. P. Janarthanan
Ms. V. Vathsaladevi

### Secretary

Ms. S. Shamini
Ms. R. Chithrakaladevi

### Treasurer

Mr. A. Niranjan

### Editor


Mr. K. Muralitharan

### Sub Editors

Mr. K. Sairam
Mr. T. Karikalan

### Members

Mr. S. Selvaganesh
Ms. A. Komakal
Ms. P. Pathmavigi
Mr. S. Sivaruban
Mr. T. Thushianthan
Ms. S. Suthamathy
Ms. S. Sutharshni
Ms. K. Gowsala
Mr. V. Aravindhan
Ms. P. Vithuvanu



கும்பாபிடேகத்திற்கு தயாராகும் பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டை மாணிக்க விநாயகர் கோவில் கொழும்பு

கும்பாபிடேகத் திகதி : ஆவணி 24

இராஜ கோபுர நிர்மாண வேலைகள் ஸ்தபதி விஸ்வ பிரம்மசிறீ நாகலிங்கம்

கோபுரத்தின் உயரம் 91 அடி



**Seated ( L - R)**
K. Muralitharan (Editor), P. Janarthanan (Vice President), R. Chithrakaladevi (Secretary), K. Kalaichelvan (President), Prof. Mrs. Savithiri Gunasekara (Vice Chancellor), Prof. Mrs. Y. Rasanayagam (Senior treasurer), S.Shamini (Secretary), V. Vathsaladevi (Vice President), A. Niranjan (Treasurer), T. Karikalan (Sub. Editor)
**Standing (L - R)**
S. Sivaruban, T. Thushianthan, V. Aravindhan, A. Komakal, P. Vithuvanu, P. Suthamathy, P. Pathmavigi, K. Gowsala.
**Absentees**
K. Sairam (Sub. Editor), S. Sutharshni, S. Selvaganesh

කොළඹ විශ්වවිද්‍යාලය
கொழும்பு பல்கலைக்கழகம்
UNIVERSITY OF COLOMBO

තැපැල් පෙට්ටි අංකය
தபாற்பெட்டி இல
P.O. Box No: 1490

කුමාරතුංග මුනිදාස මාවත,
කොළඹ 3.
குமாரதுங்க முனிதாஸ மாவத்தை,
கொழும்பு 3
Cumaratunga Munidasa Mawatha,
Colombo 3.

## Message from the Vice-Chancellor

It is a pleasure to contribute a message to the souvenir published by the Hindu Society on the occasion of their Annual Cultural evening titled **"KALAI VIZHA 2001"**

The University of Colombo is multi-ethnic and a multi-religious community. The Hindu Society makes an important contribution in bringing students of their own community together in friendship in an environment where they learn to appreciate their culture and traditions. This dimension is very important at this time where we see an unfortunate tendency of students to engage in acts of violence and humiliation against first years of their own community. The Hindu Society can make an important contribution by enabling students to understand that this behaviour is contrary to the positive in their community and also help all students to interact with each other in an environment of understanding of their own and other cultures.

I wish the association every success in its activities and also wish this evening to be an enjoyable and a successful one.

Prof. Savitri Goonesekere
Vice Chancellor

දුරකථන අංක :
தொலைபேசி இல
Telephone Nos:

| | General | Vice-Chancellor | Registrar | Bursar |
|---|---|---|---|---|
| | 581835 | 583810 | 583818 | 586652 |
| | 584695 | | | |
| | 585509 | Fax: 583810 | Telex: 22039 | Fax. 503394 |

*With Best Wishes*

*From*

# "GREENCITY HOTEL"

No. 49,
Fourth Cross Street,
Colombo – 11.
Tele : 321770

*With Best Compliments*

*From*

# BRITE VIDEO VISION

**DVD. VCD**
**VIDEO CASSETTE**
**Lending Library**

# 31, Lauries Place,
R.A.De Mel Mawatha,
Colombo – 04.
T.P.: 503443
E-mail : brite@mail.ewisl.net

*With Best Compliments*

*From*

# UMA TRADING CENTRE

General Merchants & Commission Agents

57, Fourth Cross Street,
Colombo – 11
Tel : 327457, 074-719962
Telegrams : "UMATCO"

## பெரும் பொருளாளரிடமிருந்து......

*கொழும்புப் பல்கலைக்கழக இந்துமாணவர் மன்றத்தின் 2001 ஆம் ஆண்டு கலைவிழாவிற்கும் செய்தி அனுப்புவதில் நான் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.*

*இந்து மாணவர் மன்றம் தமிழ்க் கலைவிழா எடுப்பது ஏன் என்ற ஆசங்கை சிலர் மனதில் எழக்கூடும். இந்து என்பது இலங்கையைப் பொறுத்த மட்டில் சைவம் என்றே பொருள்படும். சைவ சித்தாந்தத்திற்கும் தமிழுக்கும் அத்துவிதப் பிணைப்பொன்று உண்டு. இதனாற் தான் 'சைவமும் தமிழும்' என்ற தொடர் பெரு வழக்கிலுள்ளது. கலையின் எல்லையைக் காண்பது தான் சைவ சித்தாந்தத்தின் நோக்கமும் பயனும் ஆகும்.*

*கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம், முகாமைத்துவம், மருத்துவம், சட்டம், கலை போன்ற நானாவித பீடங்களிலும் பயிலும் சைவத் தமிழ் மாணவர்கள் தம் எல்லோருக்கும் பொதுவான பாரம்பரியத்தை, மரபை மறவாது உவகையும் உற்சாகத்துடனும் மனவெழுச்சி கொண்டு தமது தனித்துவத்தை இடர்கள் நெருக்கங்களுக்கு மத்தியிலும் பேணிப் போற்றிக் கொண்டாடுவதையிட்டு நான் பெருமிதமடைகின்றேன்.*

*இந்தக் கலைவிழா இனிதே நடந்து நிறைவுற அலகில் கலைக்கு எல்லையாகிய ஆடுங்கழலிற் சிரம் வைத்து வேண்டுகின்றேன்.*

*பேராசிரியை*
*திருமதி யோ. இராசநாயகம்*

*With Best Compliments*

*from*

# Ideal Resort

**உங்கள் திருமணத்தேவைகள் அனைத்திற்கும், 2/3/4 அறைகளைக் கொண்ட இல்லங்களை வாடகைக்குப் பெறவும்.**

**நாடுங்கள்:**
46. International Buddhist Centre Road,
Wellawatta, Colombo - 06.
Tel : 505716, 074-519851

*For all your web solution..*

## WEB DEVELOPERS

Web Designing, Web Hosting, Web Application Developing & Domain Registration
386/10, 1/1 Galle Road,
Ratmalana.
Tele : 723653,
074-205733,
077-377856,
077-347525,
072-425974
E-mail : sales@globalsols.com
Web : www.globalsols.com

*கலைவிழா சிறக்க வாழ்த்துக்கள்*

## கொட்டாஞ்சேனையில் புதிய வகுப்புகள் ஆரம்பம்

- பாடசாலை மாணவர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கான யோகாசன வகுப்புகள்,
- பெண்களுக்கான விசேட எடை குறைப்பு வகுப்புகள் (Keep Fit Classes)
- பாலர் பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள், (தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில்)
- ஆண்டு I தொடக்கம் II வரை பாடசாலை மாணவர்களுக்கான சகல பாடங்களுக்களுக்குமான வகுப்புகள்.
- மற்றும் Sinhala, French, Spoken English ஆகிய வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

**SEEMANS**

148, Pickerings Road,
Kotahena.
Tel : 077-362624, 074-722884, 078-674508

# ஏடிட்டோன் எழுதுவது

கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது கற்றல் நிகழ்வோடு மட்டும் நின்றுவிடாது எமது கலை - கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும் - இந்து மதத்தின் அன்பு நெறியை உலகறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு நாம் ஆரம்பித்தது தான் எமது இந்து மன்றம்.

எமது மாணவர்களின் அயராத ஆக்கமும், ஊக்கமும், தொடர்ச்சியான ஒத்துழைப்பும் பக்கபலமாக அணி செய்ய எமது மன்றமானது எச்சவாலையும் முறியடித்து வீறு நடை போட்டு வருகின்றது.

அந்த வகையில் ஆண்டு தோறும் ஒளிரும் எமது 'இந்து தீபம்' இதழின் ஏழாவது மலரை உங்கள் கைகளில் தவழ விடுவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

அனைத்து மதத்தையும் சேர்ந்த பெரியார்களின் ஆசிச் செய்தி, கட்டுரை போன்றவற்றை இம் மலரில் பிரசுரித்துள்ளோம். மதம் என்பது மனிதனை மனிதநேயமுள்ளவனாக வாழ வழி காட்டுவனவாக அமைய வேண்டுமேயன்றி, மதம் பிடித்தலைபவனாக மாற்றக்கூடாது என்பது இதற்குஒரு எடுத்துக் காட்டாகும்.

மேலும் எமது மன்றத்தின் நிகழ்வுகட்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வரும் வணிகப் பெருமக்களை எமது 'இந்து தீபம்' வழிகாட்டி நிற்கின்றது.

அத்துடன் எமது மலர் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக என்னுடன் தோளோடு தோள் நின்று கைகொடுத்துதவிய என் சக நண்பர்கட்கும், ஆசிச் செய்திகளை வழங்கிய பெரியோர்க்கும் மற்றும் தரமான ஆக்கங்களைத் தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பெரியார்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இதழ் ஆசிரியர்
க. முரளிதரன்.

*With Best Compliments*

*From*

**DHANALETCHUMI & CO,**

84, JUSTICE AKBAR MAWATHA,
COLOMBO 2.
TEL : 435817

*With Best Compliments*

*From*

**Arthur Tours**

*184 A, Galle Road,*
*Colombo 06.*
*Tel: 556796 – 556797*
*Hot line: 077-222333 - 556797*
*Fax : 593926*

*With Best Compliments*

*From*

**Western Jewellers**

Jewellers & Gem Merchants

88, Sea Street,
Colombo –11
Tel : 433977
Fax : 335682

# வாழ்த்துச் செய்தி

கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றம் நடாத்த உத்தேசித்துள்ள கலைவிழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல பிள்ளையாரப்பனை பிரார்த்திக்கிறேன்.

மிருக இனத்தைப் பொறுத்தவரை, அதனின் தலை, இதயம், வயிறு, இனப்பெருக்க உறுப்பு எல்லாம் தரையிலிருந்து சமமான மட்டத்தில் அமைந்திருப்பதால் அவை இன்பத்திற்கும், இரை தேடுதலுக்கும், மற்றும் உணர்வுகளுக்கும் அடிமையாவது அதிசயமேயல்ல.

ஆனால் மனிதனுக்கு முதலில் தலை, பிறகு இதயம், அதன் கீழ் வயிறு, கடைசியாக இனப்பெருக்க உறுப்பு அமைந்திருப்பதால், முதலில் அவன் பகுத்தறிவுக்கும், அன்பு, கருணை போன்ற உன்னத உணர்வுக்குமே மதிப்பளித்தல் வேண்டும். இரை தேடுதலும், இன்பம் துய்ப்பதும் சற்று பின்னுக்கே தள்ளப்பட வேண்டும்.

ஆனால் இப்பொழுதோ மனிதன் தலை கீழாக நிற்கிறான்.

கலை, கலாசாரம் மற்றும் சமயம் அவன் நேராக நிற்பதற்கு துணை செய்யும்.

முதலில் நேராக காலில் நிற்கப் பழக வேண்டும். பின் இறைவனிடம் சரண் புகுந்து தேவனாகலாம்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே"

ஓம் தத்சத் இறைப் பணியில்
பிரம்மச்சாரி
ரமண சைதன்யா

*With Best Compliments*

*From*

**Mascons Limited**

175, Sri Sumanatissa Mawatha,
Colombo – 12.
Tel : 325561-3
Fax : 449537

# கிறிஸ்தவ மதகுருவின்
# ஆசிச் செய்தி

அருட் திரு. அ. ஜெயக்குமாரன்
தென்னிந்தியத் திருச்சபை
யாழ் பேராயம்

*இசையோடு கடவுளை வழிபடுபவர்கள் தமிழர்கள். கர்த்தருக்குப் புதுப்பாட்டை பாடுங்கள் என்பது கிறிஸ்தவ திருமறையுங்கூட கலை வளர்க்கின்ற எவரும் கலாசாரத்தை மேன்மேலும் வளர்க்கின்றவர்களாவே இருக்கின்றனர்.*

*கலை விழாக்கள் அறிவிற்கும் உணர்விற்கும் விருந்து படைக்கின்றமை மட்டுமல்லாது தமிழ்க் கலையுணர்வை மீண்டும் ஒருமுறை எம் நெஞ்சில் நிறுத்துகின்றன.*

*இந்த வகையில் பல்கலைக்கழக இந்துமன்ற மாணவர்கள் வருடந்தோறும் நடாத்தி வரும் "கலை விழா" எமக்கு மிகுந்த திருப்தியளிக்கிறது. இப்படியான நிகழ்ச்சிகட்கூடாகவே அவர்கள் தங்கள் கலையாற்றலையும், திறமைகளையும் வளர்த்துக் கொள்ள முடியும்.*

*இவர்களது கலைப்பணி மென்மேலும் வளர எமது ஆசிகள்.*

*With Best Compliments*

*From*

# Pratha Trading Co.

Suppliers to confectioners & Bakers, importers of all kinds of Food Colours, Essence, Chemicals.

64, Dam Street,
Colombo -12.
Tel : 445626, 074 - 615185

# இலங்கை ஜமா அதே இஸ்லாமியத் தலைவரின் ஆசிச் செய்தி

*பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவது என்பது இன்றைய கால கட்டத்தில் முதல் தரமான பாராட்டைப் பெற வேண்டிய அம்சமாகும்.*

*கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் இந்து சமய மாணவர்கள் இந்த வகையில் பிரதி வருடமும் நடாத்தி வரும் இந்து மன்றத்தின் கலை விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்கள்.*

*ரஷித் ஹஜ்ஜால் அக்பர்*
*தலைவர்,*
*இலங்கை ஜமா அதே இஸ்லாமி.*

*With Best Compliments*

*From*

**Gift Centre**

Dealers in fancy goods,
Stationery & Toys

No. 64/11, Dam Street,
Colombo – 12
Tel : 330254

*With Best Compliments*

*From*

AUTO CAD
ACAD

Institute of Computer Studies
07 – E.S. Fernando Mawatha,
Colombo-06,
Sri Lanka.
Tel : 581506

*With Best Compliments*

*From*

**MULTIVISION**
**Communication & Offset Printers**

K.K. Ranesh
No. 5, Kudiyiruppu,
Vavuniya.
Tel : 024-23143, 024-23669
E-mail : ranesa29@hotmail.com

## தலைவரிடமிருந்து

எமது மன்றம் இந்து சமய வளர்ச்சிக்கும் கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதற்கும் அயராது உழைத்து வருகின்றது. அவற்றினை எய்துவதற்காக பல்வேறு செயல் திட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

அவ்வகையில் இவ் வருடம் எமது கலைவிழா நிகழ்வை ஒட்டி வெளியிடப்படும் இந்து தீபம் சஞ்சிகை பல பெறுமதி மிக்க ஆக்கங்களை கொண்டுள்ளது.

இவ் வருட சஞ்சிகையில் தலைசிறந்த கல்வி மான்கள் பலரின் எழுத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் எமது மாணவர்களின் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. பல புதிய கருத்துக்களுடன் உங்கள் கைகளில் தவழும் இந்து தீபம் எமது மாணவர்களின் அயராத முயற்சியினால் உயிர் கொடுக்கப்பட்டுள்ளது. இந்து தீபம் சஞ்சிகைக்கு விளம்பர அனுசரணை வழங்கிய வள்ளல்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

தற்போதுள்ள நெருக்கடியான கால கட்டத்திலும் எமது மன்றப் பணிகள், எமது மாணவர்களின் தளராத முயற்சியினால் நடைபெற்று வருகின்றன. அப் பணிகள் இனிவரும் காலங்களிலும் குறைவுறாது தொடர வேண்டும் என்று வேண்டி முடிக்கின்றேன்.

நன்றி
க. கலைச்செல்வன்
தலைவர்
இந்துமன்றம் - கொழும்பு பல்கலைக்கழகம்.

With Best Compliments

From

# Rohan's

## Emporium (Pvt) Ltd.

*An exclusive garment shop*

73, Main Street,
Colombo 11.
Tel : 440139, 343478
Fax : 327182

3 - 14, 2nd floor,
Majestic City,
Bambalapitiya,
Colombo 4.
Tel.: 555754

## *செயலாளர்கள் செப்பியவை:*

*"மனதிலுறுதி வேண்டும்*
*வாக்கினிலே யினிமை வேண்டும்*
*நினைவு நல்லது வேண்டும்.*
*........ காரியத்திலுறுதி வேண்டும்.*
*.........உண்மை நின்றிட வேண்டும்."*

பன்மொழி பேசிடினும் தோழமையால் இணைந்து வேற்றுமை பாராட்டாது வாழ்ந்திருக்கும் நம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் இந்து மன்றத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் "இந்து தீபம்" எனும் சஞ்சிகை தமிழ் பேசும் மாணவர்களது ஆக்கங்களையும் திறமைகளையும் வெளிக்கொணர்வதற்குரிய ஒரு ஆக்கபூர்வ முயற்சியாகும்.

மண்ணிலிருந்து நீங்கி மாற்றிடம் தேடி திரியும் நம் சமுதாயம் தமது கலாசாரம், பண்பாடுகளை இழிவெனக் கருதி அந்நியர் மோகத்தில் அமிழ்கின்ற போதினில், இன்றைய சந்ததியினர் அவற்றில் சிக்கிக் கொள்ளாது சரித்திரத்தின் கௌரவம் காக்க புறப்படுவோம் என சபதம் கொள்வோம்.

"ஏவம் ப்ரஸன்ன மனஸோ பகவத் பக்தி யோகத"
"ஒருவனது இதயத்திலுள்ள அழுக்குகள் என்றைக்கு அகன்று தூய்மை பெறுகிறதோ...
அன்று தான் கடவுள் எது என அறிய முடியும்."
"மேன்மை கொள் சைவ நீதி... விளங்குக உலகமெலாம்"

இணைச் செயலாளர்கள்:
ரா. சித்திரகலாதேவி. செ. ஷாமினி

*With Best Compliments*

*From*

# KUMARAVEL COY.

**General Merchants**
**& Commission Agents**

Dealers in : Provisions
217, 5th Cross Street,
Colombo 11.
Tel : 421057

*With Best Compliments*

*From*

# Prasanna Kaluwardiniya

965/02 Pothuvarara Road,
Malabe.
Tel : 072-247607

*With Best Compliments*

*From*

# DIPLO

69-1/1A, Hewawitharana Bldg. Galle Road, Dehiwela,
Tel : 727067, 075-519426

385DD, J.T.Complex, Galle Road,
Wellawatta, Colombo-06. Tel : 074-514995

220/4c, Galle Rd,
Dehiwala.

25, Jaya Mawatha, Wattalpola,
Panadura. Tel : 074-282213

# கொழும்பின் "தமிழ் – இந்து" மதப் பயில்வுகள்

## – ஒரு மிகச் சிறிய குறிப்பு

கார்த்திகேசு சிவத்தம்பி
தகைசார் ஒய்வு நிலைப்பேராசிரியர்
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கையின் இந்துப் பாரம்பரியத்தைச் சைவப் பாரம்பரியமாகவே பார்க்கும் நோக்குமுறை நம்மிடையே உண்டு. ஆறுமுக நாவலரியக்கத்தின் பெறுபேறு அந்தக்கருத்துநிலை. அந்த நிலைபாடு கொழும்பில் "இந்துக்கள்" நன்று தம்மைத் **தமக்குள்** அடையாளப்படுத்திக் கொள்பவர்களுக்கு எத்துணை பொருந்தும் என்பது பெருத்த வாத விவாதத்துக்குரியது. இந்துமாமன்றமும், இராமகிருஷ்ணமிஷனும் ஒரு புறமாக, மறுபுறத்தில் அனுமார் கோயிலும் பத்திரகாளி கோயில்களும் முக்கியத்துவம் பெறும் ஒரு சூழலில் இந்த "இந்து"க்களைச் சைவர்கள் என்பது பிரச்சினைக்குரிய விடயமே.

கொழும்பின் இந்துசைவ வாழ்க்கையைச் சமூக நிலைநின்று பார்க்கும் பொழுது இந்த வேறுபாடுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

அண்மைக் காலத்தில், குறிப்பாக 1980 களிலிருந்து, கொழும்பில் வசிக்கின்ற இந்துத் தமிழ் மக்களிடையே, “மத முனைப்பு" அதிகரித்துள்ளது. இந்துக் கோயில்களின் தொகை அதிகரித்துள்ளது. சிறிய வழிபாட்டுத் தலங்களாக இருந்த இடங்கள், இப்பொழுது கற்றறிந்த சிவகாரியர்கள் பூசைகள் நடத்தும் வரன் முறையான கோயில்களாகியுள்ளன.இன முரண்பாட்டுப் பயமில்லாது போய் வரக்கூடிய ஒரேயொரு பொழுதுபோக்கு இடமாக இருப்பது கோயில்கள் தான். இந்தப் பொழுதுபோக்கல் மனநெருக்குவாரங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காகச் செய்யப்படுவது, "தமாஷு"க்கான பொழுது போக்கு வேறு, இந்தப் பொழுது போக்கு வேறு.

இந்து மதம் சார்ந்த விடயங்களுக்காக ஒருங்கு கூறுவது "பிரச்சினைகளை" ஏற்படுத்தாது என்பது சமகாலத்துக் கொழும்பு வாழ் சராசரித் தமிழரின் உளவியல் உண்மையாகிவிட்டது. (இந்தநிலைமை காரணமாக அடிப்படையில் மத நிலைப்பட்டோர் இலக்கியம் பேசுவது அதிகரித்துள்ளது.)

அரசு நிலையிலும், அதன் பன்முகப்பாட்டுச் சனநாயக உணர்வை வெளிப்படுத்துவதற்கு, தமிழுக்கு அளிக்கப்படும் இடத்திலும் பார்க்க, இந்து மதத்துக்கு அளிக்கப்படும் இடம் முக்கியமாக உள்ளது. இந்த தமிழ் – இந்து ஊடாட்டத்தை இந்து சமய அலுவல் அமைச்சு/திணைக்களத்தின் செயற்பாடுகளில் அவதானிக்கலாம்."தமிழ் அலுவல்களும் (Tamil Affairs), "இந்து அலுவல்களும்"(Hindu Affairs) ஒன்றுடன் ஒன்று இணைத்தும் தனித்துத் தனித்தும், இரண்டும் ஒன்றாகவும் தொழிற்படுவதை அவதானிக்கலாம்.

கொழும்பில் இன்று"இந்து" வழிபாட்டிடங்கள் அதிகரித்துள்ளன. கோயில்களின் தொகைகளும் அதிகரித்துள்ளது. 1960 – 70களிலிருந்த கோயில் தொகைக்கு, இப்பொழுது உள்ள தொகைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. (துரதிர்ஷ்ட வசமாக இது பற்றிய புள்ளி விவரம் எதுவும் இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தில் இல்லை. இந்த மௌனமே ஒரு சுவாரசியமான குறியீடு ஆகும்).

குறிப்பாக 1980 களின் நடுக் கூற்றிலிருந்து ஏற்பட்ட வட கிழக்குப் புலம்பெயர்வின் பின் கொழும்பு வந்து சேர்ந்த சராசரி இந்து மக்கள் தங்கள் மதத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு இந்த இடங்களை நாடத் தொடங்கினர். கொழும்பில் ஏற்கனவேயிருந்த கோயில்களைப் பொறுத்த வரையில் வேண்டுதல்கள், நேர்த்திக்கடன்கள் பற்றிய சிறப்பு வழிபாட்டு மரபுகள்

*With Best Compliments*

*From*

# DEVELOPMENT CONSULTANTS CONSORTIUM

**for**
**Housing and Township Development**
**Medium Rise Buildings**
**Roads and Small Bridges**
**Industrial Development**
**Engineering Survey**
**Water Engineering**

886, Point Pedro Road,
Nallur, Jaffna.
Tel : 021-2849
Fax : 021-2849

இல்லாதிருந்தமையால், புதிதாக வந்து "லொட்ஜ்" களிலும், "அனெக்ஸ்" களிலும் வரத்தொடங்கியவர்கள், தத்தம் கிராமங்கள், பிரதேசங்களில் தாங்கள் செய்த வழிபாட்டு முறைகளைப் பிரதி செய்யவிரும்பினர். அதற்கு இந்தப் புதிய வழிபாட்டிடங்கள் நகரத்தார் கோவில்களும், ஆறுநாட்டு வேளாளர், திருநெல்வேலி வேளாளர் கோவில்களும், செய்யாதனவற்றை இப்புதிய வழிபாட்டிடங்கள் செய்யத் தொடங்கின. இதனால் அத்தகைய கோயில்கள் வளரத் தொடங்கின.

இந்த வளர்ச்சியின் பொழுது, இன உணர்வுப்பயம் கூட ஓரங்கப்பட்டது. (உதாரணம் – வெள்ளவத்தை விகாரை லேனில் உள்ள அனுமார் கோயில்) யாழ்ப்பாணத்தில் வழிபாடு செய்த அதே முறையில் (பால்குடம் எடுத்தல்) வழிபாடுகள் பிரதி செய்யப்பட்டன.

இந்த வழிபாடுகளில் நியம சைவப் பாரம்பரியம் முக்கியப்படுவதில்லை. இங்கு ஒரு வைதிகக் கிரியா மரபு தான் முக்கியப்படுகிறது. நாவலர் மரபு முக்கியப்பட முடியாத ஒரு சூழல் இது.

வழிபாட்டு நிலையில் சீவியப்பாட்டின் பயங்கள், உந்துதல்கள், அபிலாசைகள் முக்கியப்பட கோயில்கள் முக்கியமானவையாகத் தொடங்கின. வாழ்க்கையின் கொடூரங்கள் கோயில்களை அத்தியாவசியமாக்கின.

இந்தநிலையில் இந்தமட்ட கோயில்களின் நிர்வாகஸ்தர்களும், பூசகர்களும் சமூக முக்கியத்துவமுடையவர்களாக மேற்கிளம்பினர். கொழும்பின் சமூக வாழ்க்கையில் தமிழர் பயமின்றித் தொழிற்படக்கூடியஒரு செயற் பரப்பாக இந்த "மத உணர்வு முகாமைத்துவம்" முக்கியப்பட்டது. கோயிற் பொறுப்பாளர்கள் அறங்காவலர்கள் ஆயினர். இவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அதிக பட்ச அரசகணிப்பு "ஜே.பி" ( சமாதான நீதவான்) பட்டம்தான். சேர் பட்டம் பெற்றவர்களும் சி. எம்.ஜி பட்டம் பெற்றவர்களும் கோயில் முகாமையாளர்களாக இருந்த நிலைபோய், இப்பொழுது ஒரு பொதுநிலைப்பரவல் ஏற்பட்டது.

இந்த முக்கியஸ்தர்களில்லாது இலக்கிய நிதழ்ச்சிகள்கூட நடைபெறமுடியாத ஒரு நிலை உருவாகியுள்ளது.

இந்நிலை ஒரு மட்டத்தில் இருக்க இன்னொரு மட்டத்தில், நிறுவன மயப்பட்ட மத சங்கங்கள், மதஸ்தாபனங்கள் முக்கியப்படுகின்றன.

கொழும்பின் பிரதான இந்து மதஸ்தாபனமாக விளங்குவது இராமகிருஷ்ணமிஷன். மதக்கருத்து நிலையில் இது வேதாந்தத்தை ஏற்றுக் கொள்வது மத சமூக நிலையில் இது பல முக்கிய பணிகளை ஆற்றுகின்றது. வார இறுதிச் சமயப் பாடசாலை, பயணிகள் விடுதி, மகளிர் இல்லம் கலைநிகழ்ச்சிக்கான மண்டபங்கள் என்பன மிக முக்கிய பணிகளைச் செய்கின்றன. இவை மூலமாக மத்தியதர வர்க்க இந்துத் தமிழர்களின் சமூக பண்பாட்டுத் தேவைகள் பல பூர்த்தி செய்யப்படுகின்றன.

இவற்றுக்கு மேலாக, அரச வைபவங்களில் இந்து சமயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணியும் பல தடவைகளில் இந்த நிறுவனத்துக்கேயுண்டு. அந்தப் பணியையும் அது மிகுந்த நிதானத்துடன் ஆற்றப் பெறுகின்றது.

பௌத்த மதச் சம்பிரதாயங்களுக்குப் பழக்கப்பட்ட அரசு, பிக்குகள் சிங்கள பௌத்த சமூக நடவடிக்கைகளில் பெறும் இடத்தை, கோயிற் பூசகர்கள் இந்து சமூக அலுவல்களில் பெறுவர் போலும் என்ற தப்பபிப்பிராயம் காரணமாக, கோயில் அர்ச்சகர்களைச் சமூக முக்கியத்துவமுடைய விடயங்களை ஆராய்வதற்கு அழைப்பதுண்டு. இது பூசகர்களை இக்கட்டான நிலைகளுக்குத் தள்ளியுள்ளது. அவர்களும் கோயில்களில் பூசை செய்யும்பொழுது தரிக்க வேண்டிய உடை, அணிகலன்களுடன் அரச கருமச் சந்திப்புகளுக்குச் செல்கின்றனர். இந்த நடைமுறையின் அசாதாரணத் தன்மை பல தமிழ் இந்துக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இந்து சமய அலுவல்கள் திணைக்களம் இவ்விடயங்களில் நமது மதப் பாரம்பரியங்களை இந்துக்களல்லாத இலங்கையருக்கு தெரிவிப்பதைத் தனதுகடமையாகக் கொள்ள வேண்டும்.

இன்னொரு மட்டத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற நிறுவனங்கள் இயங்குகின்றன. இலங்கை நிலைப்பட்ட இத்தயை நிறுவனங்கள் சைவச் சார்புடையனவாகவே இயங்குகின்றன. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இலங்கையின் இந்துப் பயில்வின் சைவ சித்தாந்த மரபின் செல்வாக்கு நிர்ணயபூர்வமானது. இதனை விவேகானந்த சபையின் நடவடிக்கைகளிலும் அவதானிக்கலாம்.

*With Best Compliments*

*From*

# றோயல் கொன்ஸ்ரக்ஷன்

கட்டிட வேலைகள்

கட்டிட பொருட்கள் விநியோகம்

என்பவற்றிற்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

323, ஏகாம்பரம் வீதி,

திருகோணமலை.

Tel : 026-21085,

026-23141

Fax : 026-21085

இந்துமதம் பற்றிய தத்துவ நிலை விளக்கத்துக்கான தேவை பற்றிய உந்துதல்கள் இந்தநிறுவனங்கள் மட்டத்தில் அதிகம் காணப்படுவதில்லை.

இந்து மதப் பயில்வின் இன்னொரு நிலையாகக் கருதப்பட வேண்டியவை சாயிபாபா வழிபாடு, சின்மயானந்த மிஷன் தொழிற்பாடு ஆகியனவாகும். ஒரு மகானின் வழிநிலைப்பட்டு, அவரை சனரஞ்சகப் படுத்தும் முறைமையைத் தங்கள் வழிபாடாகக் கொள்வதில் தமிழர்களே பெருந்தொகையினராகும். இத்தகைய நிறுவனங்களில் சிங்களவர்கள், வட இந்தியர்கள் என இனவேறுபாடுகளை ஊடறுத்துச் செல்லும் ஒருமுறைமை உண்டு. சாயிபாபா வழிபாடு மிக முக்கியமான இடத்தைப் பெறுவதாகும்.

இந் நிலைப்பட்ட வழிபாட்டு ஈடுபாடுகள் யாவும், மத்திய, உயர் வர்க்கங்களைச் சார்ந்தனவே. கட்டுரையின் முதற்பகுதியில் குறிப்பிடப் பெற்றுள்ள "விசுவாசிகள்" இந்த வட்டத்துள்வரார். ஒரு மதத்துக்குள்ளேயே பல பண்பாட்டு நிலைகள் உண்டு எனும் உண்மைக்கு இவை உதாரணங்களாகும்.

இன்றைய நிலையில் கொழும்பில், இந்துத் தமிழரிடையில் காணப்படும் மதப் பயில்வு முறைகளை நோக்கும் பொழுது, கொழும்பின் இந்து சமய வரலாறு இன்னும் எழுதப்படவில்லை என்பது புலனாகும்.

இலங்கையின் தலைநகராக ஏறத்தாழ 500 வருட காலம் கொழும்பு இருந்து வந்துள்ளது. பிரித்தானிய ஆட்சியின் பொழுது இங்கு இந்துத் தமிழ் மக்களுடைய தொழிற்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் கூற்றிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முன் நடுக்கூறு வரை(1850–1950) கொழும்பில் இந்து மதவழிபாடுகள் எத்தகைய இடம் பெற்று வந்துள்ளன என்பது பற்றி அறிவதற்கு கீழ்க்காணும் பருவரைவு சிறிது உதவலாம்.

முதலில் :– (1) கொழும்பில் இந்துக்களின் சனவேற்றம் பற்றியது

(1) இலங்கையின் மற்றைய பாகங்களிலிருந்து வந்தவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு (யாழ்ப்பாணமே அதிகம்)

(2) தமிழகத்திலிருந்து வந்த வியாபாரிகள்

அ. நாட்டுக்கோட்டைச் செட்டிமார்

ஆ. ஆறுநாட்டுவேளாளர்

இ. திருநெல்வேலி வேளாளர்

ஈ. தமிழகத்திலிருந்தும் இலங்கையின் பிற பகுதிகளிலிருந்தும் வந்த தொழிலாளர்கள்.

– துறைமுகத் தொழிலாளர்கள்

– பிற பணியாளர்கள்

2. இக் குழுவினர் ஒவ்வொருவரும் தாபித்த வழிபாடுகள் பற்றியது.

1. செட்டியார் தெருக் கோயில்கள்
2. கொட்டாஞ்சேனை, முகத்துவாரப் பகுதிக் கோயில்கள்
3. கொழும்பு தெற்கு (பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைக்) கோயில்கள்

இவை ஒவ்வொன்றினதும் வரலாறு

இவ்வாறு நோக்கும் பொழுது கொழும்பில், நிறுவனமயப்பட்ட கோயில்களைப் பொறுத்தவரையில், இரண்டு தன்மைகளைக் காணலாம்.

*With Best Compliments*

*From*

**DEVI**

**Jewellers**

50, Galle Road,
Dehiwela,
Tel : 734011

*With Best Compliments*

*from*

**CASTLE INN**

(Lodging House)
Rooms Available:
With facilities, I.D.D., Local Calls,
Available for 24 Hrs.
Van for Hire (Air condition)

No. 39, Castle Lane,
Bambalapitiya, Colombo - 4,
Tel : 503452, 583176, 500039,
074-518489
Fax : 598111
Hotline : 586022

*With Best Compliments*

*from*

**Aynkaran Communication**

NO. 626, KANDY ROAD,
ARIYALAI, JAFFNA.
TEL : 021-2794, 021-2794

1. கொழும்புக்கு வந்த தமிழக வணிகர்கள் நிறுவியகோயில்கள்
– புறக்கோட்டை செட்டியார் தெரு பம்பலப்பிட்டி, வெள்ளவத்தையிலுமுள்ளவை கப்பிதாவத்தை கோயில் முக்கியமானது

2. யாழ்ப்பாணத்தார் நிறுவிய கோயில்கள்
இதில் இரண்டு மட்டங்கள் உண்டு
அ. தொழிலாளர்களாக வந்தவர்கள் நிறுவியவை
உ–ம் – செக்கடித்தெரு சிவசுப்ரமணிய சுவாமி கோயில் போன்றவை
ஆ. அதிகாரமுடையோர் நிறுவியவை
– பொன்னம்பலவாணேசர் கோயில் போன்றவை

–இவர்கள் நிறுவிய அறக்கொடைகள் முக்கியமானவை
– தம்பையா சத்திரம் போன்றவை

3. இக்கோயில்களிடையே நிலவிய நல்லுறவு ஊடாட்டங்கள்
(இது தவிர்க்க முடியாததாகும்)
உ–ம் அ. கப்பிதாவத்தை சிவன் கோயில், பிள்ளையார் கோயில்
ஆ. வெள்ளவத்தை மாணிக்கப்பிள்ளையார் கோயில்

கொழும்பின் ஆடிவேல்விழாவுக்கு இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே இலக்கிய சான்று உண்டு.

ஆடிவேல் விழா 1960 கள் வரை அரச "கணிப்புடன்" நடந்த விழாவாகும்.தேசாதிபதி மாளிகை, அலரி மாளிகை ஆகியனவற்றின் முன்னர், "ரதங்கள்" நிறுவத்தப்பட்டு தேசாதிபதி, வேலுக்கு மரியாதை செய்யும் மரபு இருந்து வந்தது.

1950 – 80 க் காலப்பிரிவை ஒரு தனிக் கூறாகக் கொள்ளல் வேண்டும்.

1980–90 காலப் பிரிவில் குறிப்பாக 1983க் கலவரத்தின்பொழுது இந்துக் கோயில்களுக்கு ஒரு தாக்கம் இருந்தது. ஆனால் அழிபாடு இருக்கவில்லை. வெளிமாவட்டங்களில் அழிபாடு இருந்தது.

போரின் போக்குகள் காரணமாக ஏறத்தாழ 85முதல் கொழும்பு தமிழ் மக்கள் சமத்துவ உரிமை கோராது, தற்காலிகமாக வந்துதங்கும் ஒரு இடமாக கொழும்பு காணப்பட்டது.

அந்தக் காலம் முதலே இக் கட்டுரையின் தொடக்கத்திற் குறிப்பிடப்பெற்ற வழிபாட்டு முறை சனரஞ்சகப்பட்டது.

கொழும்பிலுள்ள இந்து பிரமுகர்களுக்கு ஒரு பெரும் பணி உண்டு. கொழும்பில் இந்து மதத்தின் பயில்வு பற்றிய ஓர் ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் வேண்டும்.

அதற்கு அவர்கள் இப்பொழுது அகப்பட்டுக் கொண்டுள்ள "வாய்பாடுகளில்" இருந்து விடுபட்டு வெளியே வர வேண்டும்.

With Best Compliments

From

# New Gopalan Company

**Show room : 207, Main street, Trincomalee.**

**28, Sea View Road,**
**Trincomalee**
**Tel : 026-22619, 026-22405, 026-22407**
**Fax : 026 - 22407**

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வு பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# மணிவாசகரின் தாயும் சேயும்

சைவ சமய நாயன்மார்கள் நால்வருள்ளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மாணிக்கவாசக சுவாமிகளும் இறைவன் தேடி வந்து ஆட்கொண்ட பெருமையுடையவர்கள். மாணிக்கவாசக சுவாமிகளை இறைவன் குருவடிவாக வந்து ஆட்கொண்டார். ஆனால், மணிவாசகரோ அதன் அருமையைத் தான் உணராமல் இருந்து விட்டதாக அவரே தன் பாடல்களிலே குறிப்பிடுகின்றார். சில காலம், இறை அருமையை உணராமல் இருந்த காலத்தை எண்ணி கழிவிரக்கப்படுகின்ற வேளையிலே இறையினுடைய பெருமையினையும் தன்னுடைய சிறுமையினையும் உருகிப் பாடுகின்றார். இவ்வுணர்வைப் புலப்படுத்துவதற்கு இறைவனைத் தாயாகவும் தன்னைச் சிறு குழந்தையாகவும் பாவனை பண்ணிக் காண்கின்றார்.

தான் கருவிலே இருக்கின்ற காலத்திலேயே இறைவன் தன் கருணையினாலே அக் கருவினைத் திருத்தி ஊன் புகுந்தும் உளம் நிறைந்தும் ஆண்டுகொண்டு விட்டான் என,

*"உருத் தெரியாக் காலத்தே*
*உள்புகுந்தென் உளம் மன்னி*
*கருத்திருத்தி ஊன்புகுத்து*
*கருணையினால் ஆண்டுகொண்ட"*

என்று 'கண்ட பத்து' செய்யுளிலே குறிப்பிடுகின்றார். அவ்வாறு கருவிலேயிருந்து பிறந்த பிள்ளையினைத் தாய் எவ்வாறு கண்ணுங் கருத்துமாக வளர்ப்பாளோ அது போல்; இறைவன் தன்னுடைய ஊனினை உருக்கி உள்ளத்தே பேரொளியினை ஏற்படுத்தி விட்டான் என மணிவாசகர் உருகுகின்றார் இறவைனுடைய கருணையை எண்ணுகின்ற பொழுதெல்லாம் அவருக்குத் தாயினுடைய அன்பே நினைவுக்குவருகின்றது. குழந்தை அழுத பின்னர் தான் அதற்குப் பசி என்று உணர்ந்து பாலூட்டுவது தாயின் வழக்கமல்ல. குழந்தைக்குப் பசி ஏற்படப் போகின்றது என நினைத்து பாலூட்டுவதே தாயின் வழக்கமாகும். இதனால் தான்,

*"பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்*
*பரிந்துநீ பாவியே னுடைய*
*ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த*
*செல்வமே சிவபெருமானே"*

என்று பாடுகின்றார். இவ்வாறு அன்பினாலே பாலூட்டித் தாய் குழந்தையை வளர்க்கின்றாள். பிள்ளை நடக்கும் பருவத்தை எய்துகின்றது. உணவு உண்ணும் பருவத்தை அடைகின்றது. தாய் உணவினைக்

*With Best Compliments*

*From*

# V.J.P. INTERNATIONAL BOOK SHOP

240, Galle Road,
Wellawatta,
Colombo - 06.
Tel : 074-515024

கையிலே எடுத்துக் கொண்டு குழந்தையை அழைக்கின்றாள். குழந்தையே விளையாட்டுக் குணத்தால், உணவை மறுத்து ஓடுகின்றது. உணவுள்ள கையை நீட்டி நீட்டித் தாய் பின்னாலே செல்கின்றாள். ஆனால், குழந்தையோ தாயை விலக்கி ஓடுகின்றது. அக் குழந்தை ஓடி வரும் பாதையினை இன்னொரு குறுக்குப் பாதையாலே சென்றடைந்த தாய் அப்பாதையிலே அக் குழந்தையை வழிமறித்து ஊட்டமுயல்கின்றாள். ஆனால் குழந்தையோ தாயின் அன்பையோ உணவின் அருமையையோ உணராது ஓடிவிடுகின்றது. விளையாட்டு அதற்கு முக்கியமாகத் தெரிகின்றது. தாயைப் போன்று பேரானந்தமென்னும் முத்தியை நல்குவதற்கு இறைவன் மாணிக்கவாசகரிடம் குருவடிவிலே வருகிறான். குழந்தையைப் போன்று இறைவனுடைய அன்பினையோ பேரானந்தத்தின் அருமையினையோ உணராது விட்டார் மாணிக்கவாசகர். குழந்தையை விளையாட்டு ஈர்த்ததுபோல மணிவாசகரை ஐம்புலன் இன்பங்கள் ஈர்த்தன. இத்தகைய தன் அனுபவத்தை மணிவாசகர் தன் பாடல்கள் மூலமாகப் புலப்படுத்துகிறார்.

*"வளர்கின்ற நின் கருணைக்கையில்*
*வாங்கவும் நீங்கி யிப்பால்*
*மிளிர்கின்ற என்னை"*

**(நீத்தல் விண்ணப்பம் 4)**

என்று ஓரிடத்திலே கூறுகின்றார். தாயினுடைய உணவுக் கை குழந்தையிடம் நீண்டு செல்வது போல இறைவனுடைய கருணைக்கை வளர்கின்ற நின் கருணைக்கை" எனப்படுகின்றது. அக் கையினாலே அணைத்து அருள் ஆரமுதம் கொடுக்க எண்ணும் தாயாகிய இறைவன் கையைத் தட்டி விட்டு "நீங்கி இப்பால் மிளிர்கின்ற" குழந்தையைப் போல மணிவாசகர் நிற்கின்றார்.

பக்குவப்பட்ட ஆன்மாவை பதி எப்பொழுதுமே அவாவி நிற்கும் குழந்தையை அவாவி நிற்கும் தாய்போல. இப்படி அவா நின்று வழிமறித்து அருளமுதம் ஊட்ட முனைந்தபோது மறுத்ததை,

*"வழிநின்று நின்னரு ளாரமுது*
*ஊட்ட மறுத்தனனே"*

**(நீத்தல் விண்ணப்பம் 5)**

என்று மணிவாசகர் குறிப்பிடுகிறார். தாயினுடைய அருமையை அறியாது உணவை மறுத்து விளையாட்டிலே ஈடுபட்ட குழந்தைக்குத் தாங்கொணாத பசி ஏற்படுகின்றது அப்பொழுது தான் உணவினுடைய அருமையும், தாயின் அன்பும் குழந்தைக்கு நினைவிலே வருகின்றன. இது போன்று தான் ஐம்புல இன்பங்களைப் பெரிதாக எண்ணி இறைவன் கருணையை உணராமற் போன தன் அறியாமையை எண்ணிக் கதறுகிறார் மாணிக்கவாசகர். **"மறுத்தனன் யானுன் அருளறியாமையின்"** (நீத்தல் விண்ணப்பம் 6) என்று கழிவிரக்கப்படுகிறார் குழந்தையைப் போல.

*"தாயாய் முலையைத் தருவானே*
*தாரா தொழிந்தாற் சவலையாய்*
*நாயேன் கழிந்து போவேனோ"*

*With Best Compliments*

*from*

# Seagull Property Developers (Pvt) Ltd.

*A BOI APPROVED COMPANY*

*No. 49, 4/1, Nelson Place,*
*Colombo - 06.*

*Tel : 077-874544*
*Fax : 594561*
*E-mail : n.s.indran@hotmail.com*

என்று எண்ணுகின்றார். குழந்தையினுடைய வாய்க்குள் முலைக்காம்மை வைத்துப் பாலூட்டுவாள் தாய். தாயினுடைய முலைப்பால் உண்ணாத துரதிர்ஷ்டத்தைப் பெற்ற குழந்தையைச் ***சவலைப் பிள்ளை*** என்பார்கள். இவ்வாறு, முலைக்காம்மை விரும்பித் தரவும் பாலுண்ணாப் பிள்ளை சவலைப் பிள்ளை ஆகுவது அதன் செயலாலேயே. மணிவாசகரும் தன்னுடைய கீழ்மைத் தனத்தாலே இறைவனுடைய அன்பினை உணராமல் சவலைப் பிள்ளை ஆகிவிடுவேனோ என்று துன்புறுகிறார்.

உணவை ஊட்ட, அதனை மறுத்து, விளையாட்டு விருப்பாலே குழந்தை ஓடி விட்டால், தாய் அவ்வுணவைக் கொட்டி விட்டுக் கோபம் சாதிக்க மாட்டாள். பசி வரும் போது பிள்ளை வரும் என்ற எண்ணத்திலே காத்திருப்பாள். இறைவனும் தாய் போல் தன்னைத் தேடி தன்னடியார் மனப் பக்குவம் பெற்று வருமளவும் காத்திருப்பான். அவ்வாறு காத்திருக்கும் தாய் போன்ற இறைவனிடம், பசித்தாகங் கொண்ட குழந்தையாகிய மணிவாசகர் வர அருளாரமுதம் வழங்கப்படுகின்றது. பசியினாலும் அவாவியினாலும் அக் குழந்தை அவ்வருளாரமுதத்தை மெல்லாமல், வாரி விழுங்ககின்றது. அதனாலே விக்குகின்றது. அந் நேரத்திலே கருணைத் தாய் தண்ணீர் கொடுத்து அக் கஷ்டத்தை நீக்குகின்றாள். அடைக்கலப் பத்துச் செய்யுளால்,

*"வழங்குகின்றாய்க்குன் அருளாரமுதத்தை*
*வாரிக் கொண்டு*
*விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்*
*விதியின்மையால்*
*தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்*
*தந்துய்யக் கொள்ளாய்*
*அழுங்குகின்றேன் உடையாய் அடியேனுன்*
*அடைக்கலமே"*

என்று மணிவாசகர் அவ்வனுபவத்தைப் புலப்படுத்துகின்றார். உணவுண்ணும் போது விக்கல் ஏற்பட்டால், உணவினுடைய சுவையே போய்விடும். அருளாரமுதச் சுவையை அனுபவிக்க முடியாத விதியில்லாதவனாகிய எனக்குத் தண்ணீரையாவது சுவையாகத் தந்துவிடுகிறாயே என்று இறைவனுடைய கருணையை எண்ணி "கடுந்தகையேன் உண்ணுந் தெண்ணீரமுதப் பெருங்கடலே" என்று உருகுகின்றார்.

மணிவாசகர் இறைவனுடைய உயர்ந்த கருணையுள்ளத்தினையும் தன்னுடைய கீழ்ப்பட்ட நிலையினையும் எண்ணும் போது அவருக்குத் தாயினுடைய அன்புள்ளமும் நாயினுடைய கீழ் நிலையும் நினைவுக்கு வருகின்றன. இதனால், அவருடைய மணிவாசகங்கள் பலவற்றிலே தாயும் நாயும் அருகருகே இடம்பெறுகின்றன.

"**நாயிற்** கடையாய்க் கிடந்த அடியேற்குத்
**தாயிற்** சிறந்த தயாவான தத்துவனே"
(சிவபுராணம்)

*With Best Compliments*

*From*

**POOBALASINGHAM BOOK DEPOT**

309, A 2/3, Galle Road, Wellawatte,
Colombo - 06.
Tel : 074-515775, 504266

*With Best Compliments*

*From*

**Colonial Hardware Stores**

Importers, Distributors & General Hardware Merchants

427, Old Moor Street,
Colombo 12.
Tel : 431950, 435414, 347981-83-89
Fax : 321144, 334090 Mobile : 077-760132
E-mail : colonial@slt.lk

"**தாயே** யாகி வளர்த்தனை போற்றி"
**நனவிலும் நாயேற்** கருளினை போற்றி"
(போற்றித்திருவகவல்)

**நாயிலாகிய** குலத்தினுங் கடைப்படும்
என்னை நன்னெறி காட்டி
**தாயிலாகிய** இன்னருள் புரிந்த
என்தலைவனை"
(திருச்சதகம்)

"தான் வந்து **நாயேனைத்**
தாய் பால் தலையளித்திட்டு"
(திருவம்மானை)

**நாயுற்ற** செல்வம்
நயந்தறியா வண்ணம் மெல்லாம்
**தாயுற்று** வந்தென்னை
ஆண்டுகொண்டதன்கருணை
(திருக்கோத்தும்பி)

"**நாயிற்** கடைப்பட்ட
நன்மையுமோர் பொருட்படுத்துத்
**தாயிற்** பெரிதுந்
தயாவுடைய நம்பெருமான்"
(திருப்பூவல்லி)

"மூவே முலகுக்குந் தாயே
**நாயேன்** தனையாண்ட"
(புணர்ச்சிப்பத்து)

இவ்வாறு பல சந்தர்ப்பங்களிலே 'தாய் – நாய் உவமையினை மணிவாசகர் கையாளுகின்றார். இதற்கு இரண்டு வகையான விளக்கங்கள் கொடுக்கலாம்.

(1) தாயினுடைய அன்பு தன்னலமற்றது. அதனுடைய மேன்மையினையும் உயர்வினையும் எவரும் நன்கறிவர். இறைவனும் தாய்போன்ற நற்கருணையுடையவன். குருந்தமர நிழலிலே குருவடிவாகத் தன்னை ஆட்கொள்ள வந்த இறைவனின் கருணை அவருக்குத் தாயாகப்படுகின்றது. அக் கருணையை உணராது நின்ற தன்னுடைய செய்கையைக் கீழ்த்தரமானதாக மாணிக்கவாசகர் எண்ணுகிறார். அதற்கு உவமையாக நாயைக் கூறுகிறார். விலங்குகள் நாயை ஏன் மாணிக்கவாசகர் உவமையாகக் கூறுகிறார்? எல்லா விலங்குகளுள்ளும் நாய் ஒரு செய்கையாலே வேறுபட்டு நிற்கின்றது. தானுண்ட உணவைக் கக்கிவிட்டுத் திரும்பவும் அவ்வாறு கக்கியதை உண்ணுகின்ற

*With Best Compliments*

*from*

கலைவிழா சிறக்க
வண்ணமிநிறை வாழ்த்துக்கள்

**PARTHANA'S GRAPHICS & CREATIONS**

*Type Setting, All type of Printing*
*Dealers in Wedding Cards,*
*Visiting Cards, Seasons Greeting Cards, Calendars & Diaries*

***465 1/1, Galle Road, Colombo-06. TP:588368***

**Parthana's Pictures Point**

***Wholesale & Retail Dealers in Imported Pictures, Posters and Wall Pictures.***

LG-53, Peoples Park, Colombo-11. TP: 478438

**Parthana's**

*Dealers in Indian & Local Wedding Invitation Cards, Visiting Cards, Birthday Cards, Party Items, Cake Wrappers, Calendars & Diaries.*

**LG-66, Peoples Park, Colombo-11. TP:380839**

ஒரே மிருகம் நாய்தான். அத்தகைய கீழான தன்மையுடைய நாயை மாணிக்க வாசகர் தனக்கு உவமையாகக் கூறுகின்றார். இது ஒரு வகையான விளக்கம்.

(2) தலைவனாக வந்து தன்னை ஆட்கொள்ள வந்தவன் தாய்போல் வருகின்றான். தாய் தன்பிள்ளை முன் தன் அன்பினை மறைப்பதில்லை. தன் உருவினையும் மறைப்பதில்லை. கடைப்பட்ட பிள்ளையென்றாலும், அவன் எவ்வித மாற்றுருவத்திலே வந்தாலும், பிள்ளையைத் தாய் இலகுவிலே உணர்ந்து கொள்ளுவாள். கண்டு கொள்ளுவாள். தான் பல்வகைப்பட்ட புலனுணர்வுகளாலும் பாசத்தினாலும் மறைப்புண்டிருந்த போதும், பிள்ளையை உணரும் தாய் போல இறைவன் உணர்ந்து வந்த கருணை மாணிக்க வாசகர் மனதைப் பெரிதும் உருக்குகின்றது. இதனால் தாய் என்னும் உவமையைக் கையாளுகின்றார். விலங்குகளுள் நன்றியுடையது நாய் என்பதை உலகு அறியும். யப்பான் நாட்டில் பேராசிரியர் ஒருவர் ஒரு நாய் வளர்த்தார். அது அவருக்கு மிகவும் விசுவாசமாயிருந்தது. பேராசிரியர் காலையில் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் பொழுது அது அவருடன் அண்மையிலுள்ள ரயில் நிலையத்துக்குச் செல்லும். அவர் ரயில் ஏறிச் சென்றவுடன் அந் நாய் அந் நிலையத்திலேயே படுதிருக்கும். மாலை ஐந்து மணிக்குப் பேராசிரியர் திரும்பி வர அவருடன் வீடு செல்லும். இவ்வாறு தினமும் இந்நிகழ்வு நடைபெற்று வரும்பொழுது, ஒரு நாள் பேராசிரியர் விபத்து ஒன்றிலே மரணமாகிவிட்டார். அவர்திரும்பியே வரவில்லை. ஆனால் அந்நாயோ அந்த ரயில் நிலையத்தை விட்டகலாமல் தன் எசமானுக்காய் காத்திருந்தது. இத்தகைய நன்றியுடைய நாயின் செயலைக் கண்ட மக்கள் அதிசயித்தனர். அவர்களுடைய மனதிலே அது நீங்காத இடம்பெற்றுவிட்டது. அந்த ரயில் நிலையத்தின் முன்பாக அதற்கொரு வெண்கச்சிலையும் அமைத்தனர்.ஒரு நாளைக்குப் பல லட்சக்கணக்கான மக்கள் போக்குவரத்துச் செய்யும் **ஷிபுயா** (Shibuya) என்னும் அந்த ரயில்வே நிலையத்தில் யாரையாவது சந்திப்பதற்குக் குறிப்புக் கூறவதென்றால், எல்லோரும் அந் நாயின் சிலையையே அடையாளமாகக் கூறுவர். இன்றும் அந்த வழக்கம் இருப்பதை நான் நேரிலே அனுபவ மூலமாகக் கண்டுள்ளேன். இதுபோன்று நாயின் நன்றிக் கடப்பாட்டை உணர்த்தும் கதைகளும் இலக்கியங்களும் பல்வேறு நாடுகளிலே உண்டு. யானையை எவ்வளவு காலம் உணவு கொடுத்து அன்பாக வளர்தாலும், அதற்கு மதம் ஏற்படுங் காலத்தில் அதுதன் பாகனையே கொன்றுவிடும். ஆனால் நன்றியுள்ள நாயோ தன் எசமான் வேலால் எறிந்தாற் கூடத்தன் நன்றியுணர்வை வெளிப்படுத்த வாலை ஆட்டிக் கொண்டு அவ்வேலை ஏற்றுக் கொள்ளும். தன்னுடைய எசமான் எவ்வித மாறுவேடத்திலே வந்தாலும், அவன் தன் தலைவன் என நாய் மோப்பத்தாலே உணர்ந்துவிடும். தன்னுடைய தலைவனாகிய இறைவன் நிலந்தன் மேல் வந்து நீள்கழல்கள் காட்டியருள வந்தபோது நாய்போன்ற ஒருவிலங்கு தன் தலைவனை உணர்ந்து கொள்ளும் அளவுக்குத் தான் உணரவில்லையே என மணிவாசகர் வருத்தமுறுகின்ற பொழுதுதான் "**நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்**" என்று கூறுகின்றார்.

மணிவாசகரின் '**தாய் -சேய் - நாய்**' அகவுருவம் அவருடைய பக்தியுணர்வை, ஆன்மிக அனுபவ உணர்வைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. நமக்கெல்லாம் நன்கு பரிச்சயமான இவ்வுயிர்கள் மணிவாசகரின் பாடல்களுக்கு உயிரூட்டுகின்றன. அவை உண்மை, செம்மை, அழகு என்னும் பண்புடையனவாயமையக் காலாகின்றன.

*With Best Compliments*

*From*

# M.S.C.

Year - 5- 10

**O/L**
**A/L**
**Day Class**
**Spoken English**
**Sinhala Class**

Kuruman Kadu
Vavuniya

உ

# குற்றம் குற்றமே?

உலகை மன்மதன் தன்வயப்படுத்தும்,
இளவேனிற் காலத்தின் ஓர் மாலைப் பொழுது,
வசந்தத்தின் இனிமை துய்க்க,
செண்பகப்பாண்டியன் அரசமாதேவியோடு புறப்படுகிறான்.
ஈசன் எந்தை இணையடி நீழலாய்,
இயற்கையின் எழிலோடு செயற்கையின் வனப்பும் கூடிய,
மனம் பதித்தார்க்கு மாறா இதம் தரும்,
ஓர் அற்புதக் காவினை அடைகிறான்.
நலம் மிகும் காவின் நயப்பினிற் திளைத்து,
ஏகாந்தத்தின் இனிமை உணர்ந்து,
இளவேனில் இன்பம் துய்க்கிறான்.
வசந்தம் வருட நாணித் தலைசாய்த்து மலர்ந்து நிற்கும்,
பூக்களின் நடுவில் தானும் ஓர் பூவாய்,
தன்மனங்கவர் காதலி பூரித்து ஓர் ஓரத்தில் நிற்க,
சற்றுத் தள்ளி,
தனித்தவனாய்,
ஓர் அற்புதச் சிற்பியின் கைப்பதத்தால் கவினுற்ற கற்குன்றொன்றில்,
மெய்மறந்து மேனிசிலிர்க்க அமர்ந்திருக்கிறான்.

**இவ்விள வேனிற் காலத்(து) இன்னுயிர்த் துணைவியோடும்**
**செவ்விய செங்கோள் னேமிச் செண்பக மாறன் ஓர்நாள்**
**கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில்**
**வெவ்விய வேடைநீப்பான் இருந்தனன் வேறு வைகி.**

அப்போது,
எப்போதும் அவன் நாசியறியா நாற்றம் ஒன்றை,
முதன்முதலாய் அவன் மூக்குணர்ந்தது.
அவ்வாசனையின் வகையறியத் தலைப்படுகிறது அவன் அறிவு.
இன்பத்துறையில் எளியரானார்தம் மனம் போல்,
வனப்புமிகு வனத்தின் பூக்களிலெல்லாம் புகுந்து வருடி,
அவற்றின் நாற்றம் பொருந்தி நளினமாய் வீசும்,
காற்றின் மணமோ இது? காவலன் நெஞ்சிற் கேள்வி.
ஆண்டு தோறும் இவ்வரிய வசந்தத்தை,
தீண்டி இன்பில் திளைப்பவன் ஆதலால்,
பூக்களின் மணத்தை அவன் புலன்கள் நன்கறியும்.
இப்போது வந்த இனிய நறுமணம்,
எப்போதும் காணா ஒன்றென இதயம் சொல்ல,
இந்த வாசனை எங்கிருந்துற்றது?
வந்தது காவில் காற்று வௌவிய வாசமன்று.

*With Best Compliments*

*from*

# GANESHA JEWEL HOUSE

## கணேசா நகையகம்

Buyers & sellers of Gold and Silver jewelleries

For Modern Distinctive
and
Genuine Quality
Jewels

**Main**

123, Bazzar Street,
Vavuniya
Tel : 024-22464

**Branch**

124, Sea Street,
Colombo - 11.
Tel : 01 - 336252

**Branch**

194, Kasthuriyar Rd.
Jaffna.
024 - 22464

காற்றுக்கும் வாசம் இல்லை.
அங்ஙனமாயின்?
கேள்வி பெரிதாயிற்று.

**வெவ்விய வேலான் வீசும் வாசமோந்(து) ஈது வேறு**
**திவ்விய வாச மாக இருந்தது தென்றல் காவில்**
**வெளவிய வாசமன்று காலுக்கும் வாசமில்லை**
**எவ்வியல் வாச மேயோ இதுவென எண்ணங் கொள்வான்.**

அயலையாராய்கின்றன அவன் கண்கள்.
சற்றுத் தூரத்தே தன்னைமறந்து நிற்கும் தலைவியைக் காண்கிறான்.
அவனை வாவெனக் கைநீட்டியழைப்பது போல்,
வசந்தக்காற்றில், அவள் கூந்தல் குதூகலிக்கிறது.
அவன் மனத்துள் திடீரென ஓர் ஒளி,
காற்று இவ்வாசத்தை,
தேவியின் கூந்தலில் இருந்தே திருடியது என நிச்சயம் கொள்கிறான்.
அவன் உள்ளம் இறும்பூதெய்துகிறது.
வண்டும் உணரா அவ்வாசனையை,
கண்டுணர்ந்ததாற் களிகொண்டான் பாண்டியன்.
மீண்டும் அவன் மனத்திலோர் ஐயம்.
தேவி கூந்தலின் இத்தித்திக்கும் வாசனை,
பூவினால் சேர்ந்ததோ?,
புதுமணத் தாதுகள் கூடிவந்ததோ?
குளித்தபின் சேடியர் கூட்டும் அகிற்புகை கொண்டதால் வந்ததோ? என
பலபல எண்ணிப் பாண்டியன் மயங்கினான்.
காதற்கினியவள் கருங்குழற்கற்றையின்,
ஏதமில் வாசனை இயற்கையா? செயற்கையா?
இவ்வெண்ணம் மீண்டும் அவன் அறிவை ஆராயத் தூண்டிற்று.

**திரும்பித்தன் தேவி தன்னை நோக்கினான் தேவி ஐம்பால்**
**இரும்பித்தை வாசமாகி இருந்தது கண்டுவ் வாசஞ்**
**சுரும்பிற்கும் தெரியா தென்னாச் சூழ்ந்(து)இறும் பூது கொண்டீ**
**தரும்பித்தைக்(கு) இயல்போ செய்கையோ என ஐயங் கொண்டான்.**

அவன் மனத்துள் மறுபடியும் திடீரென ஒரு மகிழ்ச்சி.
தன் அவையிலுள்ள,
சங்கச் சான்றோரின் தங்கத் தமிழுக்கு,
இவ்வினாவை விதையாக்கினால் என்ன?
ஆகா என அவன் ஆனந்தித்தான்.
தன் மனத்திற் தோன்றிய இக் கேள்வியை,
எவர்க்கும் உரைக்காமல்,
தன் ஐயுறு கருத்தை யாவராயினும்,
அறிந்து கவி தருக என ஆணையிட்டால்,
உளக்கருத்தறியும் உண்மைப்புலவனைத் தெரிந்தறிந்திடலாம்.
தேடற்கரியவோர் கவியறிந்திடலாம்.

*With Best Compliments*

*From*

**Champion Traders**

Importers & General
Hardware Merchants

No. 307, Old Moor Street,
Colombo 12.
Tel : 421893, 470025
Fax : 075 378100

*With Best Compliments*

*From*

**M. Muthiah Pillai**
(COIR DEPT.)

No. 6, Sri Kathiresan St.
Colombo - 13
Tel : 320575
Hot line: 072 - 285347

*With Best Compliments*

*from*

**S.R. CATTERING SERVICES**
**Trincomalee**

***We undertake the supply of meals to all functions***

**Lunch**

- Rice and Fish Curry
- Rice and Vegetable
- Rice and Curry Chicken
- Fried Rice

* Short Eats too could be provided when ordered
* Arrnagement could be made for Breakfast and Dinner

24, Konessapuram, Trincomalee
Tel : 026-23502

ஒரே கல்லில் இரு மாங்காய் என எண்ணி,
ஆள்பவன் மனத்தில் ஆனந்த வெள்ளம்.
அவன் ஆசை,
சங்கத்துள் ஓசையாய் ஒலித்தது.
வென்றார்க்கு இதுவென வேத்தவை வாசல்தன்னில்,
பொன்னினாற் பொழிந்த நல்ல பொற்கிழி ஒன்றமைத்து,
கவி பண்ணியே பெறுக என்று காவலர் தூங்க விட்டார்.

**ஐயுறு கருத்தை யாவராயினு(ம்) அறிந்து பாடல்**
**செய்யுந(ர்) அவர்க்கே இன்ன ஆயிரஞ் செம்பொ(ன்) என்றுக்**
**கையுறை வேலா(ன்) ஈந்த பொற்கிழி கைக்கொண்(டு) ஏகி**
**மெய்யுணர் புலவர் முன்னாத் தூக்கினார் வினைசெய் மாக்கள்.**

நக்கீரன் தலைமையில் நற் பெரும் புலவோர்,
மன்னன்தன் மனத்துறு ஐயம் யாதென,
தேடி ஆராய்ந்து தேம்பிச் சோர்ந்தனர்.
கூடி ஆராயின் குறைவுறும் பரிசு என்று,
தனித்தனித் தேடி ஆராய்ந்து தளர்ந்தனர்.
உற்றது உணரும் தன்மையிலா தம்சிற்றறிவால்,
மன்னவன் மனக்கருத்தறியாது மருண்டனர்.
அறியாததறிந்தும் அரும்பொருள் ஆசைகொண்டு,
கருத்திலாக் கவிதை செய்து கவின்றனர்.

**வங்கத்தார் பொருள் போல் வேறு வகையமை கேள்வி நோக்கிச்**
**சங்கத்தாரெல்லாம் தம்மில் தனித்தனி தேர்ந்து தேர்ந்து**
**துங்கத்தார் வேம்பன் உள்ளம் சூழ்பொருள் துழாவி உற்ற**
**பங்கத்தாராகி எய்த்துப் படர் உறு மனத்தரானார்.**

அந்த வேளையில் ஆதிசைவருள்,
தந்தைதாயிலாத் தருமி என்பவன்,
மாணவப்பருவம் நீங்கி மணம்புரி ஆசை தோன்ற,
மதுரைச் சொக்கநாதர்தம் திருவடி ஒன்றே கதியென நினைந்து,
வேண்ட முழுதும் தருகின்ற அவ்வேயிறுதோளிபங்கன் முன் சென்று,
தன் வருத்தமுரைத்து வாடினான்.
கல்வியின் முடிந்த பயன் அக்கடவுளே என்னும்,
உண்மை ஞானம் உதித்த அப்பார்ப்பனன்,
அறிவு தரும் ஆணவம் சிறிதும் இல்லாச் சிந்தையொடு,
'இல்லறம் புகுந்தாலன்றி இறைவர்க்குச் சேவை செய்யும்,
நல்லறம் வாய்க்காது ஐயா நான் என்ன செய்வேன்' என்றும்,
'பொன்னிலாக் கையனாய் நான் எவர் மனை புகுந்து,
எற்குப் பெண் கொடு என்று கேட்பேன் பேதையேற்கு உறவுமில்லை.
என் பொருட்டு ஏதும் செய்ய வேண்டும்' என்றும் இறைஞ்சி நின்றான்.
'மன்னவன் மனக்கருத்தை விளக்கி,
இறைவ ஓர் கவிதை தந்தால் ஏழையேன் உய்வேன்' என்று,

*With Best Compliments*

*from*

## UNITE & CO-OPERATE TO SERVE

# Trincomalee M.P.C.S. Limited

Inner Harbour Road, Trincomalee

Tel : 22353

**Dealers for :**

- Richard Pieris Arpico Products
- Auto Three - Wheelers & Motor Cycles.
- Lever Brothers.
- Jones Overseas Anchor
- Lanka Milk Food. (Lakspray & Vitaspray)
- Prima Poultry Food
- Nestles Products
- Sri Lanka Cement Corporation
- Ceylon Petroleum Corporation.
- National Paper Corporation.
- Sri Lanka State Trding General Corporation

**Services:**

- ☐ Distribution of Wholesale & Retail of all basic & essential items
- ☐ Transport & Auto Taxi & hearse Services.
- ☐ Supply of Eggs, Broilers, Building Contracts
- ☐ Fuel Supply & servicing of Motor Vehicles
- ☐ Sale of books for students. under graduates, and adults, imported from India.
- ☐ Accommodation facilities with attached bath rooms at the shopping complex main street, Trincomalee close to the main bus stand and railway station

***Everything Good need not be called Co-operative***
***It is enough if everything Co-operative is good.***

தன்னறிவுந்தத் தானே வழியொன்றும் கூறி,
நெற்றிக்கண்ணுளார் திருமுன் சென்று கலங்கியே நின்றான்.

**தந்தை தாயிலேன் தனிய னாகிய**
**மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்**
**சிந்தை நோய்செய்யும் செல்ல(ல்) தீர்ப்பதற்**
**கெந்தை யேயிது பதமென் றேத்தியே.**

**ஐய யாவையு அறிதி யேகொலாம்**
**வையை நாடவன் மனக்கருத் துணர்ந்(து)**
**உய்ய வோர்கவி உரைத்தெ னக்கருள்**
**செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்.**

வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் வேந்தன்,
வேதியனின் வேதனையை விலக்க உளம் கொண்டான்.
ஓதிஉணர் அறிஞரெலாம் உணரமாட்டா,
ஒப்பற்ற கவி ஒன்று உரைத்துத்தந்தான்.
வறுமையால் மனம் வாடி நின்றதோர்,
ஏழைபெற்ற நல் இனிய செல்வமாய்,
கடவுள் தந்த அக்கவியை வாங்கி,
தன்தலையிற் சூடி அத்தருமி விம்மினான்.
இறையனார் தந்த அந்த இனிய நற்கவிதை இன்றும்,
சங்கப்பாடலுள் தங்கமாய் மின்னும்.

**'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமஞ் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்**
**செறியெயிற்(று) அரிவை கூந்தலின்**
**நறியவு(ம்) உளவோநீ யறியும் பூவே.'**

தாழ்விலாத் தமிழ்ப்புலவன் ஒருவனின்,
கூற்றாய் அமைவது இக்குறுங்கவி.
அழகிய சிறகுகொண்ட வண்டொன்றை அழைத்து,
உன்தனிவிருப்புரையாது உண்மையுரை என வேண்டி,
பின் கேள்வியைத் தொடுக்கிறான் புலவன்.
தோகை போன்ற கூந்தலும்,
நெருங்கிய அழகிய பற்களும் கொண்ட,
மங்கை கூந்தலில் மணம் மிகுந்ததோர்,
நறியமணம் கொண்ட நல்ல மலரினை,
அறிவையோ நீ? என வண்டினைக் கேட்டு,
அக்கவிதை முடிகிறது.
மறைமுகமாய் மங்கையர் கூந்தலுக்கு,
வாசனை உண்டென ஈசனே இயம்பி,
கவிதையைத் தருமியின் கையிற் கொடுத்தான்.

*With Best Compliments*

*from*

**Metro Enterprises**

Ship Chandlers

A/G/4,
SANCHI ARACHCHI GARDEN,
Colombo - 12.
Sri Lanka.

Tel : 075-330582, 458739
Mobile : 071-757026
Fax : 334111
E-mail : metroshp@slt.lk

ஆண்டவன் தந்த அவ்வரிய கவிதையை,
தன்கவிதை என உரைத்து,
சங்கம் ஏறினான் தருமி.
சங்கத்தார் எல்லாரும்,
அப்பங்கமில் கவிதைகண்டு பரவசப்பட்டனர்.

**கல்வி யாளர்தம் கையில் நீட்டினான்**
**வல்லை யாவரும் வாங்கி வாசியாச்**
**சொல்லின் செல்வமும் பொருளும் தூக்கியே**
**நல்ல நல்லவென்(று) உவகை நண்ணினார்.**

பாண்டியன் முன்னால் கவிதை படிக்கப்பட்டது.
அக்கவிதை,
தன்எண்ணம் உரைத்த வண்ணம் கண்டு,
வேண்டிய கவி கிடைத்ததாய்ப் பாண்டியன் மகிழ்ந்தான்.
'போற்றி இப்புலவனுக்கே பொற்கிழி அளிக்க!'
பாண்டியனிடம் இருந்து கட்டளை பிறந்தது.

**அளக்கில் கேள்வியா(ர்) அரசன் முன்புபோய்**
**விளக்கி அக்கவி விளம்பினார் கடன்**
**உளக் கருத்து நேரொத்தலாற் சிரந்**
**துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினான்.**

**உணர்ந்த கேள்வியா(ர்) இவரொ(டு) ஒல்லைபோய்ப்**
**புணர்ந்த ஆயிரம் பொன்னும் இன்தமிழ்**
**கொணர்ந்த வேதியன் கொள்க இன்றென**
**மணந்த தாரினான் மகிழ்ந்து நல்கினான்.**

வேண்டிய பொருள்கிடைத்த மகிழ்வில் விரைந்தான் தருமி.
புலவர்க்கு எட்டா அரசனின் மனப்பொருள் போல,
எட்டா உயரத்தில் இருந்தது அப்பொற்கிழி.
பற்றி அதனைப் பறிக்க முனைந்தான்.
தருமியின் கரத்தைத் தடுத்தது ஒருகரம்.
அரச கட்டளையை,
தடுப்பது யாரெனத் தருமி திகைத்தான்.
தன்கை பற்றித் தடுத்த அக்கரத்திற்கு,
உரியரைக்காண உயர்ந்தன அவன் கண்கள்.
தன்னறிவு பெறாத தகுதியை,
இம்மண்ணில் வேறு எவரும் பெறுவதா?
கண்களில் பொறாமைத்தீ கனன்றெழ,
பங்கமுற்ற பொறாமை மனத்தொடு,
சங்கத்தலைவர் நக்கீரர் நின்றார்.
'குற்றம் உண்டு உன்கவியில்' எனக் கூறி,
பரிசினைப் பற்றவிடாது தடுத்தனர்.

*With Best Compliments*

*from*

# Uni Lanka Tea Traders

Whole sale & Retail dealers in made tea

Shop No. M/1,
Ground Mezzanine Floor,
Colombo Central Super Market Complex,
PETTAH,
COLOMBO 11.
Telephone : 341476

**வேந்த னேவலால் விபுதர் தம்மொடும்**
**போந்து மீண்(டு) அவைப் புறம்பு தூங்கிய**
**ஆய்ந்த பொற்கிழி அறுக்கு(ம்) நம்பியை**
**நேர்ந்து கீரன் நில்லென விலக்கினான்.**

**குற்ற(ம்) இக்கவிக் கென்று கூறலுங்**
**கற்றிலான் னெடுங் காலம் வெம்பசி**
**உற்ற வன்கலத்(து) உண்ணு(ம்) எல்லை கைப்**
**பற்ற வாடினான் பண்பு பற்றினான்.**

ஆற்றல்மிகு அறிவு கொண்ட அப்பெரும் புலவன்தனைக்கண்டு,
தருக்கறியாத்தருமி தன்உருச்சுருங்கி நின்றனன்.
கற்றறியமாட்டாத தருமி அக்கவிப்பொருளை,
உற்றறியமாட்டாது ஒடுங்கினன்.
இறைவன் கவியிலும் ஏதம் வருமா?
வாதம் செய்யும் வகையறியாது வாடினான் தருமி.
நெடும்பசி கொண்டான் உணவை நெருங்கிடும் வேளை,
தடுத்ததற்கொப்ப அத்தருமியின் பரிசு தடுக்கப்பட்டது.
பரிசும் மானமும் ஒருங்கே இழந்து பரிதவித்தவனாய்,
அவன் ஆண்டவன் சந்நிதி அடைந்தான்.
கதியிலேன் என்பதற்காய்,
விதியிலாப் பாடலைத் தருதல் முறையோ? என விம்மினான்.
வறுமையே சொத்தாய் இதுவரை உனை வழிபட்டவன் நான்.
பரிசிழந்த பரிதவிப்பிற் பேசவில்லை.
பேரறிவினனான பிஞ்ஞகா! உன்கவியில்,
சிற்றறிவு கொண்ட மற்றவர் பிழையுரைப்பின்,
யாருனை மதிப்பார் அதுவே என்கவலை என உரைத்து,
ஐயனே என அழுது நின்றான்.

**வறுமைநோய் பிணிப்பப் பன்னாள் வழிபடு(ம்) அடியே(ன்) நின்பாற்**
**பெறுபொருள் இழந்தேன் என்று பேசிலேன் யார்க்கும் மேலாங்**
**கறைகெழு மிடற்றோய் நின்றன் கவிக்குற்றஞ் சில்வாழ் நாட்சிற்**
**றறிவுடைப் புலவர் சொன்னால் யாருனை மதிக்க வல்லார்.**

ஏழை அழுகை இறைவனைச் சுட்டது.
அறிவினால் ஆணவம் கொண்ட நக்கீரர் தருக்கடக்க,
பேரிலா அப்பெருமான் தன்பெருமை சுருக்கி,
புலவனாய் வேடம் கொண்டு பொங்கியே வந்தான்.

**எந்தை இவ் இகழ்ச்சி நின்னதல்லதை எனக்கு யாது என்னாச்**
**சிந்தைநோயுழந்து சைவச்சிறுவன் நின்றிரங்க யார்க்கும்**
**பந்தமும் வீடும் வேதப்பனுவலும் பயனுமான**
**சுந்தரவிடங்கன் ஆங்கோர் புலவனாய்த் தோற்றம் செய்தான்.**

*With Best Compliments*

*from*

**JAYA STORES & KAVITHA TRADERS**

13, Market Street,
Negombo.
Tel : 031-33938,
33579, 39407

*With Best Compliments*

*from*

**Seematti**

**Jewellers**

(SOLID GOLD WITH VERY LATEST DESIGNS)

34 B, Kandaswamy Kovil Road,
Vavuniya.
Tel : 024-21599

*With Best*

*Wishes*

**சி. நவரத்தினம்**

அதிபர்

தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

திருகோணமலை

புலமையின் முடிவே புலவனாய்த் தோன்றி,
அறிவின் பங்கம் நீக்கச் சங்கம் புகுந்தது.
பங்கம் உரைத்தார் யார்? என் பாடலுக்கென்று இறையனார் வினவ,
ஆணவம் அறிவை மறைக்க,
வந்தவன் ஆண்டவன் என உணராது,
நானே என ஆணவமாய் எழுந்தார் நக்கீரர்.

**ஆரவைகுறுகி நேர்நின்(று) அங்கிருந்தவரை நோக்கி**
**யாரை நங்கவிக்குக் குற்றமியம்பினார் என்னா முனனங்**
**கீரன் அஞ்சாது நானே கிளத்தினேன் என்றான் நின்ற**
**சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக்கீரன்.**

சொல்லிற் பிழையா? பொருளிற் பிழையா?
சோதிவானவன் கேள்வி தொடுத்தான்.
ஆணவம் நிறைய அசையா நெஞ்சொடு,
பொருளே பிழையென புகன்றார் நக்கீரர்.
பொருளெலாமான பொருளை,
அப்பொருள்தரு கவிதைப் பொருளை,
பிழையென உரைத்துப் பேதைமை கொண்டார்.
தன்குற்றமறியா அத்தமிழ்ப்புலவன்.
என்குற்றம்? என இறைவன் கேட்டதும்,
மங்கையர் கூந்தலுக்கு இயற்கையில் மணமில்லை,
உண்டென உரைத்தது எங்ஙனம்?
படைத்தவன் தனக்கே பாடம் நடத்தினார் அப்பாவலர்.

**சொற்குற்ற மின்று வேறு பொருட்குற்றம் என்றான் தூய**
**பொற்குற்ற வேணி யண்ணல் பொருட்குற்றம் என்னை யென்றான்**
**தற்குற்றம் வருவ(து) ஓரான் புனைமலர்ச் சார்பா(ல்) அன்றி**
**அற்குற்ற குழற்கு(ம்) நாற்றம் இல்லையே என்றான் ஐயன்.**

அறிவேயான அவ்வாண்டவன்,
அறியான் போலக் கேள்வி தொடுத்தான்.
உத்தமஜாதி உயர்குலப்பெண்டிர்,
பத்மினி குழலோ என்று படைத்தவன் கேட்க,
அறியாமை அறிவாய்க் கொண்டு,
ஆங்கதும் அனைத்தே என்றார்.
தெய்வ மங்கையர்தம் திருக்குழலும் அஃதேயோ?
ஆண்டவன் கேள்வியை அடுக்கினான்.
இந்திராணி முதலிய தேவப் பெண்களுக்கும்,
கூந்தல் வாசனை தரப்பட்டதன்றி வரப்பட்டதல்ல.
அறியாப் பொருள்பற்றித் தெரியாப் புலவர் அடித்துப் பேசினார்.

*With Best Compliments*

*From*

# *Kajen Construction*

21/1, Ramalingam Road,
Thirunelvely,
Jaffna,
Tel : 021-2983
021-2984


39154

**பங்கய முகமென் கொங்கைப் பதுமினி குழலோ என்ன**
**அங்கதும் அனைத்தே என்றான் ஆலவாயுடையான் தெய்வ**
**மங்கையார் குழலோ என்ன அன்னது மந்தாரத்தின்**
**கொங்கலர் அளைந்து நாறுங் கொள்கையாற் செய்கை என்றான்.**

அவர் ஆணவத்தின் எல்லையறிய,
ஆண்டவன்,
அடுத்துத் தொடுத்தனன் கேள்வியை.
ஒருகாலத்தும் நீ மறவாது வணங்கும் திருக்காளத்தி அப்பன் தேவி,
ஞானப்பூங்கோதைதன் குழலும் நறுமணம் இலதோ?
சிந்தையும் மனமும் செல்லா அச்சிவனவன் தேவி தன்னின்,
பங்கமில் கூந்தல் பற்றிப் பகர்தற்கு நான்யார்? என்று,
சங்கத்தலைவர் சாற்றினார் அல்லர்.
அன்னைகூந்தலும் அஃதே என்றார்.

**பரவிநீ வழிபட் டேத்தும் பரஞ்சுடர் திருக்காளத்தி**
**அரவுநீர்ச் சடையார் பாகத் தமர்ந்த ஞானப்பூங்கோதை**
**இரவினீர்ங் குழலும் அற்றோ என அஃதும் அற்றே யென்னா**
**வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்.**

நக்கீரர் ஆணவத்தின் எல்லை தொட்டார்.
தமிழ்ப்புலவன் எனும் தரத்தால்,
அப்போதும் அவர்க்கு அறிவூட்ட விரும்பிய ஆண்டவன்,
நெற்றிக்கண் திறந்து சிறிது காட்ட,
அதுகண்டும் நக்கீரர் ஆணவம் அசையவில்லை.
ஞானக்கண் திறந்து இறைவன் காட்டியும்,
நக்கீரரின் ஊனக்கண் திறக்கவில்லை.
ஆண்டவன்,
தன்னை அடையாளம் காட்டிய பின்னும்,
செந்தமிழால் வந்தனை செய்யாது நிந்தனை செய்தார்.
முக்கண் உடைய முதல்வனேயானாலும்,
மொழிந்த உம்பாட்டில் குற்றம் குற்றமே என,
தன்குற்றம் அறியாது தருக்கோடு உரைத்துநின்றார்.

**கற்றைவார் சடையார் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்**
**பற்றுவான் இன்னும் அஞ்சான் உம்பரார் பதிபோல் ஆகம்**
**முற்றுநீர் கண்ணானாலும் மொழிந்த உம்பாடல் குற்றம்**
**குற்றமே என்றான் தன்பால் ஆகியகுற்றம் தேரான்.**

தமிழறிந்தும் தருக்கொழியா நக்கீரர் செருக்கால்,
சினம் கொண்டனன் சிவன்.
கண் திறந்தது.
கனல் பறந்தது.
கதை முடிந்தது.

*With Best Compliments*

*from*

**SUBHA**

**Rani Jewellers**

**சுபராணி**

For all you requirements of 22ct.
Gold Jewellery

183, Sea Street,
Colombo -11, Sri Lanka.
Phone : 447255.

*With Best Compliments*

*from*

**Goldwing Syndicate**

240 A, Kandy Road,
Vavuniya.

*With Best Compliments*

*from*

**Hom Harvery Medics & Grocery**

*Dispensing Chemists Druggists & Grocery, Whole Sale & Retail*

79, Messenger Street,
Colombo - 12.
Telephone : 422410

*இந்து மன்றத்திற்கு*
*இனிதான வாழ்த்துக்கள்*

**THILLAI Vision**

*Professional Videographers & Photographers*
*Album Makers*
*All types of Recording*

309, 1/2, Galle Road,
Colombo - 6.
Tel : 504097, 077-300317
Res : 074-517404

அனல் தாங்காது கீரர் புனல் சேர்ந்தார்.
பொற்றாமரைக்குளம் அவரைப் புதைத்துக் கொண்டது.

**தேய்ந்த நான்மதிக் கண்ணியான் நுதல்விழிச் செந்தீப்**
**பாய்ந்த வெம்மையிற் பொறாது பொற்பங்கயத் தடத்துள்**
**ஆய்ந்த நாவலன் போய்விழுந்(து) ஆழ்ந்தனன் அவனைக்**
**காய்ந்த நாவலன் இம்மெனத் திருவுருக் கரந்தான்.**

*****

திருவிளையாடற் புராணத்தின் திருஆலவாய்க்காண்டத்தில் வரும்,
தருமிக்குப் பொற்கிழி அளித்தபடலம் கூறும் கதையிது.
முதலில் வாசகர்க்குக் கதைதெரிவதற்காய்,
சற்று அழகூட்டிக் கதையுரைத்தேன்.
இனி விசயத்திற்கு வரலாம்.
திருவிளையாடற்புராணக்கதை கூறுவதல்ல இக்கட்டுரையின் நோக்கம்.
இன்று படித்தவர்கள் மட்டுமன்றிப் பாமரர்கள் கூட,
ஒருவரைக்குற்றஞ் சாட்டும் போது,
நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என,
கூறி வருகின்றனர்.
அங்ஙனமாய்க் கூறுவோர்தம் மனத்தில்,
நக்கீரன் இறைவனது பாட்டில் குற்றம்கண்டது சரியென்றும்,
இறைவன் பாடல் குற்றமுடையது என்றும்,
இறைவன் தன்னையுணர்த்திய பின்பும்,
சிவனேயாகிலும் குற்றம் குற்றமே என அஞ்சாது நக்கீரர் உரைத்தது,
அறிவின் தெளிவால்வந்த திமிர்ந்த ஞானச்செருக்கென்றும் நினைப்புண்டு.
அவர்கள்,
அதுபோலவே தாமும் உரைப்பதாயும் கூறி,
தம் வாதங்களை நியாயப்படுத்த முனைகின்றனர்.
நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே எனும் நக்கீரர் கூற்றை,
இன்று மரபுத்தொடராய்ப் பயன்படுத்துவோர்,
பெரும்பாலும் மேற்சொன்ன கருத்துடனேயே,
இத்தொடரைப்பயன்படுத்துகின்றனர்.
அக்கருத்துப் பிழையானது என்பதை உணர்த்தவே இக்கட்டுரை.
சிவன்மேற்கொண்ட பக்தியால்,
நக்கீரரைப் பழிகாணும் முயற்சியோ இதுவெனின்,
நிச்சயமில்லை.
அங்ஙனமாயின் நெற்றிக்கண்காட்டினும் குற்றம் குற்றமே என்ற,
நக்கீரர் கூற்றின் பிழைதானென்ன?
கேள்வி பிறக்கும்.
ஆராய்வாம்.

*With Best Wishes*

*From*

**K.K. Udyakumar**

Science & Tec classes for Year 9-11

SANGAM

Rudra Mawatha, Wellawatta
Tel : 556381

**BRILLIANT**

Sangamitha Mawatha,
Kotahena
Tel : 347728

இறையனார் தந்த கவிதையை,
தருமி தமிழ்ச்சங்கத்தார்க்குக் காட்டுகிறான்.
சங்கத்தில் இருந்தார் அனைவரும் தரமிக்கப்புலவர்கள்.
''அளக்கில் கேள்வியார்' என அவர்தமை குறிப்பிடுகிறார் புராணஆசிரியர்.
சங்கத்தை அமைத்த பாண்டியனும் தமிழ் வல்லவனே.
அவர்கள் அனைவரும் தருமியின் கவிதையைத் தரமென்று பாராட்டுகின்றனர்.
நக்கீரர் மட்டும் பிழையுரைக்கிறார்.
பிழையான கவிதையாயின்,
சங்கத்துப்புலவோர் அதைக்கண்டிக்காமல் விட்டது ஏன்?
இதுமுதற்கேள்வி.
தருமியின் கவிதை பிழையாயின்,
அவைக்கு அக்கவிவந்த உடனேயே பிழைசொல்லாமல்,
அரசனிடம் சென்று தருமி பாராட்டுப் பெற்று,
பொற்கிழியை எடுக்கப் போகும்போது,
கவிதையில் குற்றம் சொல்லி நக்கீரர் தடுத்தது எதற்காக?
இது இரண்டாம் கேள்வி.
இக்கேள்விகளை எழுப்பி ஆராய,
சங்கத்தலைவராயிருந்த தன்னால் இயற்றமுடியாத கவிதையை,
மற்றொரு சிறுபுலவன் இயற்றியதில்,
நக்கீரர் பொறாமை கொண்டனர் என்பது புலனாகிறது.
அப்பொறாமை மெல்லமெல்ல வளர்ந்து,
தருமியை அரசன் பாராட்ட அதிகரித்து,
பொற்கிழி வழங்கப் பொங்கி வெளிவந்தது போலும்.
அப்பொறாமைத்தீயே,
இறையனார் பாடலிற் பொருட்குற்றம்காணத் துணையாயிற்றோ?

*****

இனி,
இறையனார் அவைக்கு வந்து,
என்பாடலிற் பிழையென்ன? என்று கேட்க,
பொருட்குற்றம் என்கிறார் நக்கீரர்.
மங்கையர் கூந்தலுக்கு இயற்கையில் மணமில்லை.
இது நக்கீரர் வாதம்.
மணம் இயற்கையாய் இருப்பதாய்க் குறிப்பினாற் கூறும்,
இப்பாடற் பொருள் பிழை என்கிறார் நக்கீரர்.
இங்கும் ஓர் கேள்வி பிறக்கிறது.
பெண்ணென்பது ஓர் பிறவி வகையே எனினும்,
அதனுள் பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என வேறுபாடுண்டென்று,
இன்பநூல்கள் பேசும்.
ஆதலால் இப்பிரச்சினையில்,
சாதி ஒருமையால் நீதியுரைக்க முடியாதென்பது தெளிவு.
அப்படியிருக்க,
பெண்கள் கூந்தலுக்கு இயற்கையில் மணமில்லை என,

நக்கீரர் கூறுதல் எங்ஙனம்?
நக்கீரர் இல்லறத்தார் ஆயினும்,
ஒரு பெண்ணின் கூந்தல் பற்றி உரைக்கவே,
அவர்க்கு உரிமை உண்டு.
பலபெண்களைக்கூடி அவர்தம் இயல்பறிந்து உரைக்கும் வன்மை,
இன்பத்துறையில் எளியரானார்க்கே கைகூடும்.
கல்விச்சிறப்பாலும் ஒழுக்கத்தாலும்,
தமிழ்ச்சங்கத்தின் தலைமையேற்ற நக்கீரர்,
அங்ஙனம் இன்பத்துறையில் எளியராய் இருந்திருக்க நியாயமில்லை.
அப்படியிருக்க,
பெண்கள் கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டா? எனும் பொதுப்பிரச்சினையில்,
இல்லையென உறுதிபடக்கூற நக்கீரரால் எப்படி முடிந்தது?
இறையனார் கவியிற் குற்றம் காணும் நோக்கத்தால்,
தன் அறிவுக்கு உட்படாத விடயம் எனத்தெரிந்தும்,
நக்கீரர்,
இறையனார் பாடலிற் பிழை கண்டிருக்கிறார் என்றே கொள்ளவேண்டியுள்ளது.

*****

மேற்சொன்ன வாதத்தினைக் கடந்து,
நூலறிவால் பெண்கள் கூந்தலுக்கு இயற்கை வாசனை இல்லை என்பதை,
நக்கீரர் தெரிந்திருந்தார் எனக்கொள்ளினும்,
அம்முடிவு இவ்வுலகில் வசிக்கும் மானுடப் பெண்களைப் பற்றியதாய்த்தான்
அமைய முடியும்.
இறையனார் தெய்வப் பெண்களைப் பற்றிக் கேட்கவும்,
நக்கீரர் அவர் கூந்தலுக்கும் இயற்கை மணம் இல்லை என வாதிடுவது,
நிச்சயம் அறியாமையின்பாற்பட்ட வாதமே.
அவ்வாதமே அவர்தன் மனக்கோட்டத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

*****

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும்,
ஐந்தொழிலைச் செய்பவன் அப்பரமன்.
வரம்பில் ஆற்றலுடைமை கொண்ட அப்பரமன்,
எப்பொருளையும் எப்படியும் படைக்கவல்லான்.
தமிழைத் தெளிவுறக்கற்று தமிழ்ச்சங்கத் தலைமை ஏற்ற நக்கீரர்,
தமிழ்நூல்கள் கூறும் மேற்சொன்ன கருத்துக்களை அறியாதவர் அல்லர்.
அப்படியிருக்க,
இறைவன் நெற்றிக்கண்ணைத்திறந்து தன்னை இனங்காட்ட,
வந்தது பரமன் எனத்தெரிந்த பின்பும்,
அவனே இவ்வுலகைப்படைத்தவன் என்பதறிந்தும்,
அவன் நினைத்தால் எப்பொருளையும் எப்படியும் படைக்கமுடியும் என்பதறிந்தும்,
அவன் படைத்த உலகியல்பை,
அவனைமறுத்துத் தானுரைப்பது தவறென்றுணராது,

நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே எனக்கூறிநின்ற நக்கீரர் செயல்,
அறிவாணவத்தின் உச்சநிலை.
அறியாமையின் உச்சநிலையுமாம்.

*****

இறைவன் தன்கவிதையை,
தருமியின் கவிதையாய்க் கொடுத்தனுப்பியது குற்றம் அல்லவா?
கேள்வி பிறக்கும்.
கற்றோர் அவையில் கரவியற்றும் இச்செயல்,
மற்றோர் செய்தால் குற்றமே.
இறைவன் உலகில் எப்பொருளோடும்,
ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்பவன்.
அத்தகுதி கொண்டதால்,
தருமிவடிவிலும்,
பரமன் பதிந்தே நிற்கிறான்.
அஃதுணர,
தன்கவிதையை மாற்றானிடம் கொடுத்தனுப்பியது குற்றம். எனும் கூற்று,
இறைவற்குச் செல்லாது என்பதறியலாம்.

*****

இச்சம்பவம் நடந்தது மதுரையில்.
மதுரை முழுதாண்டு மாண்புடன் நிற்கும் மீனாட்சி அருகிருக்க,
நக்கீரரிடம் கேள்வியெழுப்பும் சிவனார்,
அவ்வன்னை கூந்தலுக்கு வாசனையுண்டோ எனக் கேளாது,
எங்கோ இருக்கும் காளத்தியான்தேவி ஞானப்பூங்கோதையின் பெயர் சொல்லி,
அவள்கூந்தலுக்கு மணம் உண்டோ எனக் கேட்பது ஏன்?
ஞானமே வடிவான செறிந்த கூந்தலைக் கொண்டவள் என்பது,
ஞானப்பூங்கோதை எனும் பெயரின் விளக்கம்.
ஞானவடிவத்தில் புறப்பொருள்கள் கலத்தல் கூடுமோ?
கூடாதென்பது திண்ணம்.
கூந்தலுக்கு மணம் உண்டு என்பதை ஒப்பும் நக்கீரர்,
அம்மணம் புறப்பொருள்களின் கலப்பால் செயற்கையாய் அமைந்தது என்றே,
வாதம் செய்கிறார்.
அது உண்மையாயின்,
புறப்பொருள்களின் கலப்பு சாத்தியமாகாத,
ஞானமேவடிவான அன்னை கூந்தலில்,
வாசனை செயற்கையால் அமைவது எங்ஙனம்?
இக்கேள்வி பிறக்க,
அன்னை கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டென்பது புலனாகும்.
அதுபுலனாக அன்னையின் வடிவான பெண்கள் கூந்தலும்,
இயற்கை மணம் கொள்ளும் என்பதுணரலாம்.
நக்கீரர் இவ்வறிவைப் பெற்றேனும்,
தன்பிழை திருந்தட்டும் எனும் கருணையினாற்தான்,
இறையனார்,

அருகிருந்த அன்னை மீனாட்சியைத் தவிர்த்து,
ஞானப்பூங்கோதையின் கூந்தலுக்கும் மணமில்லையோ எனக் கேட்டனர்போலும்.
தன்விருப்புக்குரிய மாணவன் பதில்கூறி வெற்றிகொள்ளவேண்டும் என்பதற்காய்,
விடைக்குறிப்புக் கொண்ட வினாவை ஆசிரியன் கேட்பது போன்றதாய்,
ஆண்டவன் செயல் அமைகிறது.
அவ்வருட்பெரும் கருணையுணராது நக்கீரனார்,
அன்னை கூந்தலும் செயற்கை மணமுடையதே எனச்சாதித்துப்பழிகொண்டார்.

*****

மொத்தத்தில்,
இறையனார் நெற்றிக்கண் காட்டவும் மெய்யுணராது,
குற்றம் குற்றமே என உரைத்து நிற்கும் நக்கீரனார் கூற்று,
அறிவுத்தெளிவால் விளைந்ததல்ல.
ஆணவச்செறிவால் விளைந்தது.
அ.்.துணராது,
இன்றும் குற்றம் குற்றமே எனப்பேசி,
நக்கீரர் போல் தாமுமென நினைவார்,
நக்கீரர் வார்த்தைகளின் குற்றம் உணர்தல் அவசியம்.
நக்கீரர்தம் கூற்றாய்வரும்,
குற்றம் குற்றமே! எனும் தொடரின் முடிவில்வரும் ஏகாரத்திற்கு,
தேற்றப் பொருள் கொடுப்பது தவறு.
வினாப்பொருள் கொடுப்பதே,
அறிவுடையார் கருத்துக்குப் பொருத்தமாம்.

*****

*கம்பவாரிதி இ. ஜெயராஜ்*

---

*<u>இலங்கை</u>*
*சதா ரணம்*
*இங்கு சாதாரணம்*
*தேவையில்லை இதற்கு*
*உதாரணம்.*

---


***கலை விழா சிறப்புற வாழ்த்துகிறோம்***

**R.Ragurajah** *(LLB)*
Attorney - at - Law
Commissioner for Oaths & Registered Company Secretary
No. 3 1/1, 39th Lane, Colombo - 06.
Tel : 077-341829

# மொழிபெயர்ப்பில் சமயமும் தத்துவமும்

**கலாநிதி சுபதினி ரமேஷ்**
*தலைவர்*
*மொழியியல் ஆங்கிலத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

வளர்ந்துவரும் நாடுகளில், அதுவும் குறிப்பாக பன்மொழி வழக்கு நாடுகளில் பல்துறையறிவு பல மொழிகளிலும் வேகமாகப் பரப்பப்பட்டு வருகிறது. சமுதாய வளர்ச்சிக்கும், சமுதாய மாற்றத்திற்கும் இதன் தேவை மிக அவசியமானதாகக் கருதப்படுவதால், இந் நிலையில் மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் பேணப்படுகிறது. இந்நிலையில் பிறமொழிகளிலுள்ள நூல்கள், கட்டுரைகள் போன்ற இன்னோரன்ன விடயங்களை அறிந்து கொள்ள மொழி பெயர்ப்பு நமக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

இன்று மொழியியல் இலக்கியம், அறிவியல் போன்ற துறைகள் மட்டுமல்ல சமய, தத்துவத் துறைகளிலும் இதன் அவசியம் பேசப்படுகிறது. சமயம் என்று கூறியவுடன் முதலில் நாம் நினைப்பது பைபிளின் மொழிபெயர்ப்பைத்தான், இது உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல பகவத்கீதை கூட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே போன்று உலகில் உள்ள பல சமயங்களும் தத்தம் நூல்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டன. இந்து சமய நூல்கள் பலவும் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. இவ்வகைச் சமய நூல்கள் தத்துவ நூல்களை மொழிபெயர்க்கும் போது சமயக் கருத்துக்களுக்கும், ஆன்மீக எண்ணங்களுக்கும் அதிக இடமளித்து மொழிபெயர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

தத்துவத்தையும், சமயத்தையும் பொறுத்தவரை அங்கு பேசப்படும் பொருள் ஒன்று தான். ஆனால் அதனைப் பேசும் மொழி அதாவது அப்பொருளை மற்றவர்களுக்குப் புரியவைக்கும் முறை வேறுபடுகிறது. இதனை எல்லோரும் ஒரே மாதிரியாக ஏற்றுக் கொள்வதில்லை. சமயமும், தத்துவமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருப்பினும், இரண்டும் கடவுளைப் பற்றிக் கூறுவதில் வேறுபடுகின்றன. எனவே இவ்விரண்டையும் ஒரு மொழியில் இருந்து இன்னோர் மொழிக்கு மொழிபெயர்ப்பதில் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மதச் சார்புடைய நூல்களின் மொழிபெயர்ப்பில் மொழிபெயர்ப்புக் கொள்கைகள் அவ்வளவாக உருவாக்கப்படவில்லை. அவை பின்பற்றப்படவும் இல்லை எனலாம். மொழிபெயர்ப்பு ஆசிரியர்கள் மூல நூலில் உள்ள எதுகை, மோனை, சந்த அமைப்பு, சொற் சிலம்பம், வார்த்தை ஜாலம் போன்றவற்றை இலகு மொழியிலும் அவ்வாறே படைக்க முற்பட்டனர். ஆனால் மொழி பெயர்ப்பின் புதிய கொள்கைகள் செய்தியின் வடிவத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதற்கு மாறாக, செய்தியைப் பெறுபவரின் உணர்வு வெளிப்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. அதாவது சமய நூல்களைப் பொறுத்தவரை

*With Best Compliments*

*from*

**M.S. Travels & Tours**
**&**
**Communication**

**Air Ticketing I.D.D., Local Calls, Binding, Photo Copy, Stamp, Laminating, Video & Audio Cassettes, Gift Items, Film Rolls, Fancy Goods & Stationery**
**Van for Hire**

52, Malay Street, Colombo - 2.
Tel :423513, 430223,
Fax : 94-1-433878
Direct : 430401

*With Best Compliments*

*from*

**GANESH TEXTILES (PRIVATE) LIMITED**

*Wholesale & Retails Dealers in Textiles*

81-83, Main Street,
Colombo - 11.
Tel : 325128, 343078

*With Best Compliments*

*from*

**ANOJA TEXTILES & TAILORS**

**Specialist for Ladies & Gents Tailoring & Specialist in Wedding Suits**
**Sewing Classes on Saturday & Sunday**
**Smocking and Fabric Painting**



5-1/15, Super Market complex,
Kotahena, Colombo 13.
Tel : 071-282449

மொழிபெயர்ப்பைப் படிப்பவர் அதை எவ்வாறு உணருகிறார், விளங்கிக் கொள்கிறார், என்பதற்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

சமயத்தைப் பொறுத்தவரை அங்கு கூறப்படும் கடவுளுக்கும், தத்துவத்தில் குறிப்பிடப்படும் கடவுளுக்குமிடையே முக்கியமான வேறுபாடுண்டு. இங்கு இறைவன் இன் சொற்களால் விபரிக்கப்பட்டு, துதிக்கப்பட்டு மானிடப் பிறப்பின் பிறவிப் பயனை எய்தும் முறை மிக இனிய நடையில் கூறப்படும். ஆனால் அதே இறைவன் ஹேபிறைக் (Hebraic) கருத்தின்படி நெறிமுறை தவறாத ஓர் உயர்ந்த கருத்துப் பொருளாக ஆன்மீகக் கடவுளாக கடினமான நடையில் விபரிக்கப்படுகிறான். இவ்விடத்தில் மேற்கொள்ளப்படும் மொழிபெயர்ப்பு இரு சாராரும் புரிந்து கொள்ளக்கூடியதாக அமைய வேண்டியது கட்டாயமானதாகும். இத்தகைய வேறுபாடு மிகுந்துள்ள சமுதாயக் கட்டமைப்பில் உள்ள மக்கள் அனைவரையும் ஒரு நூலின் மொழிபெயர்ப்பு போய்ச் சேர வேண்டுமெனில், அம் மக்கட்பிரிவின் புரிதிறனைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

இந்து சமய மரபு முறையானது ஏனைய சமயங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் வேறுபட்டது. தேவாரத் திருமுறைகளில் வரும் திருவாசகத்தில் திருவெம்பாவைப் பாடல்களை எடுத்து நோக்கும் போது அவற்றை மொழிபெயர்க்கும் ஒரு மொழிபெயர்ப்பாளன் அதிலுள்ள சொற்றொடர்களை சொல்லமைப்பின் காரணமாகவோ, இலக்கண அமைப்பின் காரணத்தினாலோ, மொழிபெயர்ப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டியவனாகின்றான். எனவே இந் நிலையில் அவனின் மனப்பாங்கு இலக்குமொழியில் எவ்வாறு பிரதிபலிக்கிறதோ, அவ்வாறே அம் மொழிபெயர்ப்பும் உருவாகும். உதாரணமாக பாவை நோன்பில் வரும் பதிக அடிகளைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

> "பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
> பேசும் போதெப்போது இப்போதார் அமளிக்கே......."
> (அடி 1,2,பதிகம் 2)

இவ்வரியில் வரும் பேசும் போது உரையாடும் காலம், எப்போதும் உரையாடும் பலகாலம் என்ற சொற்களுக்குக் கூறப்படும், பொருளை இலக்கு மொழியில் எவ்வாறு மொழிபெயர்ப்பது? அதுமட்டுமன்றி எப்போதும் என்பதிலுள்ள 'உம்மை', திரிபால் தொக்கி நிற்கிறது. இதனை தமிழ் மெழியின் இலக்கணங்களைத் தெரிந்தவர்கள், அல்லது இப்பதிகத்தை வாசித்துப் பயிற்சி பெற்றவர்களாலேயே உணர முடியும். ஆனால் இச் சொல்லை ஆங்கிலத்திற்கோ அல்லது வேறு பிற மொழிகளிலோ மொழிபெயர்க்கம் போது, மூலமொழியிலுள்ள அதே உணர்ச்சிகளையோ, எண்ணங்களையோ அந்த மொழியில் பிரதிபலிக்கப் பண்ணுவது மிகவும் கடினமாகும்.

> இதே போன்று நான்காவது பதிகத்தில் வரும்
> "ஒண்ணித் தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ......"
> (அடி 1, பதிகம் 4)

என வரும் அடியில் உள்ள 'புலர்ந்தின்றோ' என்பதன் பொருள் புலர்ந்ததின்ற, விடியவில்லையா? என்பதாகும் இதில் வரும் ஓகாரம், வினாவாகவும், எதிர் மறையாகவும் வருகிறது. இத்தகைய இலக்கண

அம்சங்களை இலகுமொழியில் எடுத்துக் காட்டுவதென்பது சுலபமன்று. எனவே சமய நூல்களிலுள்ள இத்தகைய சில சிறப்பம்சங்களை மொழிபெயர்க்க, மொழிபெயர்ப்பாளன் இரு மொழிகளினதும் கலை, கலாசார அம்சங்களையும் மனதில் கொள்ள வேண்டும். இவ்வாறு மேலும் பல சூழ்நிலைகள் ஒரு சிறப்பான மொழிபெயர்ப்புக்குக் காரணமாகின்றன.

"உணராய் உணராய்காண்......"
(அடி 7, பதிகம் 5)
"தென்னா என் னாமுன்னந் தீசேர்......"
(அடி 4, பதிகம் 7)
"கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப் பொருள்கள்......"
(அடி 3, 4, பதிகம் 8)

போன்ற அடிகள் மொழிபெயர்க்கப்படும் போது ஏற்படும் சிரமங்களை பார்க்கும் போது உதாரணமாக 'கேழில்' என்பதற்கு வெவ்வேறு பொருள்கள் கொடுக்கப்படுகின்றன. இதனை ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கும் போது அச் சொல் எவ்வாறு அமையும் என்பது குறிப்பிட முடியாது. ஏனெனில் இச் சொல் தமிழில் குறிக்கும் அதே பொருளையா ஆங்கிலத்திலும் குறிக்கும் என்பது சந்தேகத்திற்கிடமானது. எனவே தான் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளன் சந்தேகங்களுக்கு இடமளியாது நேர்த்தியாகத் தனது முயற்சியை மேற்கொள்ளும் போதுதான் அதன் சிறப்பு வெளிப்படும்.

சமய, தத்துவமொழிபெயர்ப்புகளில் இன்னொரு அம்சமும் குறிப்பிடத்தக்கது. மூலமொழியில் குறிப்பாக சமய நூல்களில் ஒரு பொருள் பற்றிக் குறிப்பிடும் போது, அதனோடு ஒப்பிட்டு, பல விளக்கங்களை பல்வேறு பிற சமய நூல்களிலிருந்து எடுத்துக் காட்டுவது பெரும்பாலும் நிகழ்கிறது. ஆனால் இந் நிலையில் வரும் மொழிபெயர்ப்புகள் அத்தகைய சூழலை எடுத்துக் காட்டுவதில் தோல்வியடைகின்றன. ஏனெனில் அங்குள்ள சிறப்பம்சங்களை கருத்திற் கொள்வதற்குப் போதிய பரந்த அறிவு சில வேளைகளில் மொழிபெயர்ப்பாளனுக்கு இல்லாமல் இருக்கலாம். அல்லது அத்தகைய பிற விளக்கங்களை அவனால் சேகரித்துக் கொள்ள முடியாமல் போகலாம். உதாரணமாக, திருவெம்பாவைப் பாடல்களைப் பற்றிய குறிப்புகளில், ஆழ்வார்கள் பாடிய திருப்பாசுரங்கள் பற்றியும், மற்றைய நாயன்மார்களின் விளக்கங்களும் கூட காணப்படுகின்றன. எனவே இவற்றைப் பெறுவதிலுள்ள சிரமங்கள் மொழிபெயர்ப்பாளனுக்கு சில தடைகளை ஏற்படுத்தலாம்.

பொதுவாக நோக்கினால் மூல மொழியிலுள்ள ஒரு தொடர் சரியாக புரிந்து கொள்ளப்படாமல் போவதற்கு அதில் உள்ள சொற்கள் மட்டும் காரணமாக அமையாமல் அச் சொற்கள் அமைந்துள்ள மொழி நடையும் காரணமாகிறது. மூலமொழியும், இலகு மொழியும் ஒரே மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தனவாக இருந்தால் அம் மொழிகளின் தொடரமைப்பு பெரும்பாலும் ஒரே மாதிரியானவையாக இருக்கும். ஆனால் வெவ்வேறு மொழிக் குடும்பங்களாக இருப்பின் அவற்றின் தொடரமைப்பு முறைகளில் வேறுபாடுகள் மிகுந்திருக்கலாம். சமய நூல்களைப் பொறுத்தவரை பாடல்களில் அமையும் மொழி நடை, வசன நடையில் அமையும் நடையைவிட வேறுபட்டதாகும். எனவே இச் சூழல்களில்

இலகு மொழியின் மொழி நடைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றில் எவ்வித மாற்றமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மொழிபெயர்ப்பைச் சிறப்பானதாக ஆக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக, ஒரு மொழியில் ஏற்படும் புதுமைகளை இன்னொரு மொழிக்குக் கொண்டுவருவது, பரந்த நிலையில் பார்க்கும் போது, அம்மொழி சார்ந்துள்ள சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் பயனுள்ளதாக அமையும். அது மட்டுமன்றி மொழிபெயர்ப்பை ஒரு கலையாக மட்டுமல்லாமல் அறிவியலாகவும் ஏற்று மூல நூலின் கருத்துக்களைச் சிதைக்காமல் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கூறவேண்டியது மிக அவசியமானதாகும். அறிவியல் மொழி பெயர்ப்பைப் போன்று சமய, தத்துவ நூல்களை மொழிபெயர்ப்பது மிக இலகுவான விடயமல்ல. எனினும் மூலமொழியில் காணப்படும் பொருள், சுவை, தன்மை போன்றவை சிறிதும் மாறாமல் இலக்கு மொழியில் கூறப்படும் போது இம் மொழிபெயர்ப்பும் இலகுவானதாகவும் சிறப்பானதாகவும் அமையும் என்பது திண்ணமாகும்.

# முகவுருவிற்கு முகவுரை........

நகமும் சதையுமாய்
மலரும் மணமுமாய்
ஆயகலையும் ஆத்மீகநிலையும்
சங்கமிக்கும் ஸ்தலம் எம் ஆலயங்கள்
கடந்தும் உள்ளேயும்
நடந்து திரியும் ஈசனை
அன்பால் கட்டிப்போடும்
கலைக்கோயில்கள்
நம் ஆலயங்கள்
பாட்டும் இசையும்
கூத்தின் முறையும்
காட்டும் நம் கோயில்கள்
எம் இந்துக்களின் இதயாதிபங்கள்
இந்து தீபமாய்



**1. சந்தோஷம்**

சட்டத்தை மீறும் போது சந்தோஷம் துளிர்க்கின்றது
எனக்குப் புரிந்தது
சிவப்பு சமிக்ஞையில் 'சியோலோ' ஓட்டியபோது

**2. சாலைநெரிசல்**

முகூர்த்தம் கடந்து முடிச்சிடும் புதுமாப்பிள்ளை
முதலிரவுக்கு முந்தி நிற்கும் புதுக் கணவன்
வேளை தாண்டி வேலைக்கு திரும்பும் சிற்றூழியன்
வேறுபாடின்றி

**3. புரியாமலே**

'தமிழகம் இரண்டு நாட்கள் கண்ணீர் விட்டது'
ஈழத்து செய்திதாளில் முக்கிய செய்தி
நிதமும் தான் கண்ணீர் விடவது புரியாமலே.

**4. என்னாலானது**

நேயர் நேரத்தில்
மழைப் பாடல்களாய் கேட்கின்றேன்
வெயில் வேட்டு வைக்கும் போது

**5. வெயில்**

கருவின் சிசுவுக்கும் வியர்த்துக் கொட்டும்
கல்லறைகளும் கருத்தரிக்கும்
பகலவன் பார்வை பாந்தமாய் விழும் போது.

**6. நிலவு**

காலையில் தோன்றி
மாலையில் மறைந்து விடுகிறாயே
பெண்ணே! நீ நிலவு இல்லையா????

**7. 'மெகா' ஓய்வு**

முன்னிரவில் முக்கிய சந்தில் நிழலாக உருவங்கள்
காலாற நடந்த நான் காதோடு பேசினேன்....
'மெகா' டையில் மின்(னி) வெட்டாம்.

**8. மில்லேனிய அதிசயங்கள்**

இணையத்தில் இரண்டாமிடம்
ஈழத்து யுத்த ஓய்வு
வசீகரா' பாடல்
வானத்து பொய்யா மழை.

# எமது நாட்டின் பல்கலைக்கழகங்களின் போக்கு சரியானதா?.....

மொஹமட் மஹீஸ்
விரிவுரையாளர், சமூகவியல்
கொழும்பு பல்கலைக்கழகம்

பல்கலைக்கழகமானது ஒரு சமூகத்தினை சமூக பொருளாதார அரசியல் அபிவிருத்தியை நோக்கி வழிநடத்திச் செல்லக் கூடிய மிக முக்கியமான கல்வி நிறுவனமாக செயற்பட வேண்டும் என்பதை நாம் அக் குறிப்பிட்ட சொல்லிலிருந்து புரிந்து கொள்கிறோம். ஒரு நாட்டின் சமூக பொருளாதார தேவைகளை அடைந்து கொள்ளக்கூடிய வகையிலேயே அந் நாட்டின் உயர் கல்வி, குறிப்பாக பல்கலைக்கழக கல்வி முறை அமைய வேண்டும். பல்கலைக்கழகங்கள் என்பது வெறுமனே பட்டதாரிகளை வெளியேற்றக்கூடிய நிறுவனங்களாக அல்லாமல் ஒரு சமூகத்தின் தேவைகளை, பிரச்சினைகளை உண்மையான முறையில் புரிந்து கொண்டு அவற்றுக்கு தேவையான திட்டங்களை, நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய ஒரு மாபெரும் முயற்சியில் ஈடுபட வேண்டியுள்ளது.

மேற்கத்தைய நாடுகளில் 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட பாரிய சமூக பொருளாதார மாற்றங்களுக்கு அந்த நாடுகளின் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக காணப்பட்டன என்பதனை வரலாற்று ரீதியில் அறிய முடியும். ஆனால் இன்று எமது நாட்டின் பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் தொழிலற்ற இளைஞர் பட்டதாரிகளை உற்பத்தி செய்யக்கூடிய பட்டறைக் கைத்தொழிற்சாலைகளாகவே தெரிகின்றன. அத்தோடு அரசாங்கத்தின் முதலாளித்துவ செயல்களுக்கு எதிராக செயல்படக்கூடிய அல்லது வேலைநிறுத்தங்களை மேற்கொள்ளக்கூடிய ஒரு குழுவாகவே பல்கலைக்கழக மாணவர்களை எமது நாட்டின் அநேகமான சாதாரண மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். எனவே தான் எமது நாட்டின் பல்கலைக்கழகங்கள் ஒரு தவறான முறையில் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்று பிரபல அறிஞரான எதிரிவீர சரத்சந்திர பல ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் கூறினார்.

உண்மையிலேயே எமது நாட்டுக்கு பல்கலைக்கழகங்கள் ஆங்கிலேயரின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய வகையிலேயே ஏற்படுத்தப்பட்டன. ஆங்கிலேயர்கள் அவர்களுடைய நிர்வாகத்தை இலகுபடுத்தக் கூடிய வகையில் அவர்களுக்குத் தேவையான முதலாளித்துவ நிர்வாக சமுதாயமொன்றினை உருவாக்கும் நோக்கிலேயே எமது நாட்டில் பல்கலைக்கழகங்களை ஸ்தாபித்தனர். இதனாலேயே முற்றிலும் ஆங்கில கலாசாரத்தினையும், பிரித்தானிய நிர்வாக அமைப்பினையும் அடிப்படையாகக் கொண்டதாக இன்றும் எமது பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. எமது நாட்டில் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் உயர்தர அல்லது உயர்குழாம் மக்களின் நலன் கருதி, காலனித்துவவாதிகளின் கொள்கைகளையும், திட்டங்களையும் பேணக்கூடிய ஒரு சமுதாயத்தினை உருவாக்கும் வகையிலே ஏற்படுத்தப்பட்டன. இக் காரணத்தினாலே தான் இன்று கூட அனேகமான பல்கலைக்கழக பட்டதாரிகள் தமது சுய தேவைக்கு ஏற்ப ஒரு தொழிலை புரிய முடியாமல் ஏதோ ஒரு நிறுவனத்தில் ஒரு வகையான நிர்வாக உதவியாளராக செயல்படக்கூடிய நிலை தோன்றியுள்ளது. எனவே தான் ஒரு முதலாளித்துவ சமூக அமைப்பிற்கு தேவையான நபர்களை உருவாக்கக்கூடிய நிறுவனங்களாகவே எமது நாட்டில் அநேகமான பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன. இன்றைய கலைப்பட்டதாரி மாணவர்களுக்கு ஆங்கில மொழி, கணணித்தொழில்நுட்பம் புகட்டப்படுவதற்கான முயற்சி இதற்கான சிறந்த உதாரணமாக என்னால் எடுத்துக் காட்ட முடியும். மாறாக எமது நாட்டின் கலாசாரத்திற்கு ஏற்ப ஒரு மனிதாபிமான சமூகத்தினை உருவாக்கும் வகையில் இந்த உயர் கல்வி நிறுவனங்கள் செயல்படுவதாக

புலனாவதில்லை. எனவே இத்தகைய பல்கலைக்கழகங்களிலிருந்து சுயமாக சிந்தனை செய்யக்கூடிய எமது சமூகத்தின் சமூகப் பொருளாதார வசதிகளுக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக்கூடிய ஒரு பல்கலைக்கழக மாணவர் மத்தியில் போட்டி, பொறாமை, சண்டை, வன்முறை அதிகரித்துக் கொண்டு இருக்கிறது.

எமது நாட்டில் ஒரு சில அரசியல் வாதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஆங்கிலேயர்களால் அவர்களின் தேவைகளாக இலங்கையில் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டாலும், அவை முற்றிலும் சாத்தியமற்றவை என்று நான் கூறவில்லை. ஏனென்றால் எமது நாட்டின் எத்தனையோ ஏழை மாணவர்கள் இப்பல்கலைக்கழகங்கள் மூலம் தமது கல்வி உட்பட, வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடியமை நாம் நன்கறிந்த விடயமாகும். ஆனால் உண்மையிலேயே எமது நாட்டின் பல்கலைக்கழகங்கள் எமது நாட்டின் சமூக கலாசார அடிப்படையில் எமது நாட்டின் சமூக பொருளாதார தேவைகளை அடைந்து கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டிருந்தால் இன்று எங்களுடைய பல்கலைக்கழகங்கள் எமது சமூகத்திற்கு தற்போது ஆற்றுகின்ற சேவையை விட ஒரு சிறந்த சமூக பொருளாதார சேவையை செய்து இருக்க வேண்டும்.

இன்றைய இலங்கையின் பல்கலைக்கழகங்களின் கல்விச் சூழ்நிலையை எடுத்துக் கொண்டால், அது கூட மகிழ்ச்சிகரமான நிலையில் இருப்பதாக இல்லை. அனேகமான பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பாடக் குறிப்புகளை மட்டும் தங்களுடைய விரிவுரைகளில் வழங்கும் அளவிற்கு கல்விமுறைமை வீழ்சியடைந்துள்ளது. சில நேரங்களில் இத்தகைய விரிவுரையாளர்கள் தாம் பல்கலைக்கழகங்களில் கற்கும் போது பெற்றுக் கொண்ட குறிப்புகளையே அவர்களுடைய மாணவர்களுக்கும் வழங்குகின்றனர். அது மட்டுமல்லாமல் அவர்களுடைய குறிப்புகளை கொண்ட விடைகளையே, வினாக்களுக்குரிய பதிலாக பரீட்சைகளில் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். சில நேரங்களில் குறித்த ஒரு விரிவுரையாளரின் கருத்தினை விமர்சித்து மாணவர்களால் எழுதப்படுவதை இத்தகைய ஆசிரியர்கள் விரும்ப மாட்டார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில் பல்கலைக்கழகங்களில் கல்வி வளர்ச்சி (Academic Development) எவ்வாறு ஏற்பட முடியும்? இவ்வாறான இந்தப் பாடக்குறிப்புக் கலாசாரம் சில பல்கலைக்கழக ஆசிரியர் மத்தியில் மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது, என்பது என்னை விட பல்கலைக்கழக மாணவர்களிடம் கேட்டறிந்தால் சிறப்பாகவே அறிந்து கொள்ள முடியும். பல்கலைக்கழகங்களில் பொதுவாக விரிவுரையாளர்களே கற்பித்தல், வினாத்தாள்களை தயாரித்தல், விடைகளை திருத்துதல், போன்ற விடயங்களில் ஈடுபடுவதனால் மாணவர்கள் ஆசிரியர்களை கல்விச் சர்வாதிகனாக கருதி வருகின்றனர். எனவே தான், மாணவர்கள் ஆசிரியர்களுக்கு, அளவுக்கு அதிகமாக மரியாதை செலுத்துல், அஞ்சுதல், போன்றவற்றை எம்மால் பல்கலைக்கழகங்களில் அவதானிக்க முடியும். இவையனைத்தினதும் பிரதிபலனாக மாணவர்கள் ஒரு போதுமே ஆசிரியர்களின் கருத்துக்களை விமர்சிக்காது ஆசிரியர்களின் கருத்தியல்வாதத்தையே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாக மாறுகின்றனர். எனவே இத்தகைய பல்கலைக்கழகங்கள் சில நேரங்களில் பாடசாலைபோன்று செயற்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகம் எனும் போது அனைவருக்குமே சுதந்திரமாக எந்த கருத்தியல்வாதத்தினையும் விமர்சிக்க கூடிய கல்விச் சூழ்நிலையைக் கொண்டதாகக் காணப்பட வேண்டும். அப்போது தான் எந்தவொரு கல்வித்துறையும் குறிப்பாக சமூக, அரசியல், தத்துவவியல் கருத்துக்கள் வளர்ச்சியடைய முடிகின்றன. ஆகவே பல்கலைக்கழகங்களில் கல்வி ரீதியிலான வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் மட்டுமல்லாமல், மாணவர்கள் கூட பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் இடமாக மட்டுமல்லாமல் முடிந்தளவு ஆய்வுகளைச் (Research) செய்யக்கூடிய நிறுவனமாக செயல்பட வேண்டும். அப்போதுதான் சமூகத்தில் உண்மையிலேயே நடைபெறக் கூடிய விவகாரங்கள், பிரச்சினைகள், சமூக மாற்றங்களை அறியக்கூடியதாக இருக்கின்றது. நடைமுறை சமூகத்தில் நடைபெறக்கூடிய

பிரச்சினைகள், மக்களின் அன்றாட சமூக பொருளாதார அரசியல் தேவைகளை அடிப்படையாகக் கொண்டே பல்கலைக்கழக கல்வித் திட்டம் அமைய வேண்டும். ஆனால் உண்மையிலேயே எமது நாட்டின் பல்கலைக்கழகங்கள் அனேகமாக வரலாற்று ரீதியிலான, அல்லது நூல்களை அடிப்படையாக கொண்டதாக மாணவர்களுக்குக் கல்வியை வழங்கி வருகின்றன. உதாரணமாக, குற்றங்கள், தண்டனைகள் பற்றி நூல்களின் மூலம் கல்வி கற்கும் ஒரு சில மாணவருக்கு உண்மையிலேயே நடைமுறை சமூகத்தில் எவ்வாறு குற்றம் ஏற்படுகின்றது?தண்டனைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன? எமது நாட்டின் சிறைச்சாலைகளின் நிலை என்ன? என்பதை பற்றி நேரடியாக அறியாதவர்களாக இருக்கின்றனர்.

இன்று இலங்கையில் காணக்கூடிய பல்கலைக்கழக அமைப்பு அரசியல் தாக்கத்திற்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது. ஒரு சில இடதுசாரி கட்சிகள் பல்கலைக்கழக மாணவர்களை அடிப்படையாக கொண்டே செயல்பட்டு வருகின்றன. இதே நேரத்தில் சில பல்கலைக்கழக மாணவர்கள் ஆட்சியில் உள்ள கட்சிக்கு சார்பாகவும் இன்னும் சில மாணவர்கள் எதிராகவும் செயற்பட்டு வருவதனால், சில பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தொடர்ச்சியான சண்டைகள், வன்முறைகள் நிகழ்ந்து வருகின்றன. இத்தகைய முறையில் பல்கலைக்கழக கட்டமைப்பு அரசியல் மயப்படுத்தப்படுவதனால் பல்கலைக்கழகங்களில் ஒரு சிறந்த கல்வி வளர்ச்சிக்கான ஜனநாயக சூழ்நிலை, சுதந்திரம், சமத்துவம், சுயசிந்தனை, என்பன படிப்படியாக குறைந்து கொண்டு செல்கின்றன.

இன்று அனேகமான பல்கலைக்கழகங்கள் முன்னரை விட நிதி தொடர்பான விடயங்களை மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக சில பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், உயர் நிலையில் உள்ள அதிகாரிகள், பல்கலைக்கழக சொத்துக்களை தவறான முறையில் பயன்படுத்தி நிதி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று அனேகமான பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பல அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிப்பாளர்களாக அல்லது பகுதி நேர ஊழியர்களாக செயல்படுவதன் காரணமாக பல்கலைக்கழகங்களின் மீதான இவர்களின் கரிசனை படிப்படியாகக் குறைந்து கொண்டு செல்லக்கூடிய நிலை காணப்படுகின்றது. எமது நாட்டின் பல்கலைக்கழக அமைப்பில் இத்தகைய பல பிரச்சினைகள், சிக்கல்கள் காணப்பட்டாலும் கூட ஒரு சில ஆசிரியர்கள், அதிகாரிகள், உண்மையிலேயே அவர்களுடைய மனச்சாட்சிக்கு ஏற்ப மாணவர்களினதும், நாட்டினதும் நலன்கருதி நேர்மையான முறையில் செயற்பட்டு வருவதினையும் எம்மால் அவதானிக்க முடியும். ஆனால் இத்தகைய நேர்மையானவர்களால் எந்தளவு காலம் அவர்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்ய முடியும் என்பது சந்தேகத்துக்குரிய விடயமாகும். ஏனென்றால் இவர்களுக்கு எதிராக செயற்படக்கூடிய அரசியல், பொருளாதார சவால்களை முறியடிப்பதற்கு இவர்கள் போதியளவு சக்தியற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே தான் எமது நாட்டின் கல்வியினதும் இளைஞர் சமூகத்தினதும் முதுகெலும்பாகச் செயல்படக்கூடிய பல்கலைக்கழகங்களை எமது மக்களின் சமூக பொருளாதார, தேவைகளை அடையும் வகையில் மாற்ற வேண்டுமானால் எமது நாட்டின் பல்கலைக்கழகங்கள், சாதாரண மக்களின் கருத்துக்களை மதிக்கக்கூடியதாகவும், சாதாரண மக்களால் பல்கலைக்கழக விடயங்களில் பங்கு கொள்ளக்கூடியதாகவும் அமைய வேண்டும். அவ்வாறே பல்கலைக்கழக கல்வித்திட்டங்கள் எமது நாட்டின் கலாசார பின்னணியின் அடிப்படையில், எமது சமூகத்தின் தேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலே உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறான ஒரு தேசிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தொலைத்தொடர்பு ஊடகங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்றது.

# மனிதமே....

கலைஞர்
கைதாம்...
கதறியழுதிட்ட
கண்கள்... ஆயிரம்

நடிப்பின் இமயமே
நடிகர் திலகமே..
நாடளாவ உலகளாவ
கண்ணீரஞ்சலிகள்...
எத்தனை எத்தனை

பூலான் தேவியாம்
பூவுக்குள் பூகம்பமாம்
பூபாளமெங்கும்
புகழ்மாலைகளினால் - ஒரு
கண்ணீர் பாமாலைகள்

நேபாளத்தின்
நேர்ந்திட்ட... ராஜகுடும்பத்
துயரத்திற்காய்
இரவென்ன.. பகலென்ன..
இடைவிடாத
கண்ணீர் செய்திகள்.

ஐயா..
மானிடரே...
இங்கே..
இலங்கையில்
"தமிழன்" என்றொரு
இனம்
இன்னல்கள்
இடர்கள்
இழப்புகள் கண்டு
குழிதோண்டி
மண்தோண்டி - வேரோடு
காணாமலும்
இல்லாமலும்
தேடுவாரற்று
தேய்ந்து ஒழிந்து
போகின்றதே....
தேசமே...
தேசாந்தரமே
இது...
இது மட்டும்
உன் - விழியில்
விழவில்லையா...

S. ஷாமினி
இறுதியாண்டு
சட்ட பீடம்

## THEVARA THALANGAL

These temples are referred by the thevara moovar ( the 3 saints who sang thevaram) in songs to the regular_thevara thalangal ( thevara temples).

Before we proceed to give a list of Vaipu temples , lets take a look at these statistics
Thevara Padal Petra Thalangal (Regular Temples) sung by Appar - 125
Thevara Padal Petra Thalangal (Regular Temples) sung by Sundarar - 84
Thevara Padal Petra Thalangal (Regular Temples) Sambandar - 219

Thevara Vaipu Temples sung by Appar - 98
Thevara Vaipu Temples sung by Sundarar - 54
Thevara Vaipu Temples sung by Sambandar - 12
Total number of Vaipu thalangal - 249 ( They include some regular temples too )
So Total number of Thevara thalangal = 523

Vaipu thalangal need not only refer to temples which were unvisited by the 3 saints but also the ones visited by one of them and unvisited by the other 2 and so on.
There are about 249 vaipu thalangal in total. Many of them could not be identified , many are in bad shape and some famous ones too.

***Rev. Agalakada Sirisumana***
*Lecturer*
*Department of Sinhala*
*University of Colombo*

# *What the Buddha thought*

*The Buddha:*

*Gautama Buddha is my master. The Buddha, the founder of the great religion called Buddhism, was born in north India in the 6th century before Christ. Siddhattha (Siddhartha in the Sanskrit language) was his personal name. Gotama or Gauthama was his family name. His father Suddhodana, ruled over the land of the Sakyans at Kapilavatthu in the Nepal frontier. Mahamaya, princess of the Koliyas, was king suddhodana's queen. She gave birth to her only child, prince siddhattha, in the Lumbini grove. Lumbini or rummindei, the name by which it is now locally known, is a hundred miles north of Varanasi (Benares) and within sight of the snowcapped Himalayas.*

*According to the custom of the time, at the early age of 16 prince siddhattha was married to a beautiful princess named Yasodhara who was of the same age as the prince. Lacking none of the good things of life, he lived knowing nothing of suffering and misery. But with the advancing of age and maturity, the prince began to see the suffering of the world. The more he came into contact with the world outside his palace walls, the more convinced he became that the world was lacking in true happiness.*

*Then at the age of 29, in the flower of youthful manhood and, on the day princess yasodhara gave birth to his only son, Rahula, he left the palace, giving up a crown that held the promise of power and glory, and in the guise of an ascetic retreated into forest solitude to seek a solution for the problems of life, in quest of the supreme security from bondage, "Nibbana". This was the great renunciation.*

*Dedicating himself to the noble task of discovering a remedy for life's universal ills, he wandered about the valley of the ganges seeking guidance from famous religious teachers hoping that they, masters of meditation,*

*Would show him the way to deliverance. But their range of knowledge, their ambit of spiritual experience, was insufficient to grant him what he sought. He was not satisfied with anything short of supreme enlightenment. He left them again in search of the still unknown. Five other ascetics who admired his determined effort joined him.*

*There was, and still is, a belief in India among many of her ascetics that purification and final deliverance from ills can be achieved by rigorous self-mortification, and the ascetic Gothama decided to test the truth of it. He began a determined struggle to subdue his body, in the hope that his mind, set free from the shackles of the body, might be able to soar to the heights of liberation. He lived on leaves and roots, on a steadily reduced pittance of food. He wore rags from dust- heaps, he slept among corpses, on bed of thorns. The lack of nourishment left him very weak and a physical wreck.*

*Struggling thus for six long years, he came very close to death, but found that he was not near to his goal. It was now clear to him that self-mortification was not the solution to finding the truth - his experiment for enlightenment had failed. Thus he, gave up self-mortification and extreme fasting and began taking normal food again. Finally his body returned to its former health and vigour. Now his five companions left him disappointed; for they thought that he had given up the effort and returned to a life of abundance.*

*Nevertheless with firm determination and complete faith in his own purity and strength, unaided by any teacher, accompanied by none, the Bodhisatta (as he is known before he attained enlightenment) resolved to make his final effort in complete solitude. Cross-legged, he sat under a tree, which later became known as the Bodhi tree (tree of enlightenment*

*or bo-tree), on the bank of the river Neranjana, at Gaya (now known as Buddha-gaya) a pleasant spot soothing to the senses and stimulating to the mind. Then he made the final effort with the inflexible*

*Resolution: "Though only my skin, sinews and bones remains, and my blood and flesh dry up and wither away, yet will I never stir from this seat until I attained full enlightenment". So indefatigable in effort, so unflagging in devotion was he and so resolute to realize the truth and attain full enlightenment.*

*Applying himself to "mindfulness on in-and-out breathing" **(Anapanasati)**, the bodhisatta gothama entered upon and dwelt in the four meditative Asbsorptions (Dhyana) by gradual stages.*

*While thus seated in meditation he understood as they really are the **four noble truths:***

1. *This is suffering or unsatisfatoriness (dukkha)*
2. *This is the arising of suffering (ni dukkha)*
3. *This is the cessation of suffering (gamini)*
4. *This is the path leading to the cessation of suffering (patipadawa)*

*Thus he understood as it really is: These are taints, defiling impulses (asava), this is the arising of the taints, this is the cessation of the taints, this is the path leading to the cessation of the taints.*

*Thereupon he spoke these words of victory: "Knowledge and vision arose in me; unshakable is my deliverance of mind, this is the last birth, now there is no more becoming, no more rebirth".*

*Thus did the bodisatta gothama, on a full moon day of may, at the age of 35, attained supreme enlightenment by comprehending in all their fullness the four noble truths, and become the buddha, the enlightened one.*

# இனியும் ஏறான்....

*பாரில் படுப்பதற்குத் தடுக்குக் கிடைக்கவில்லை.*
*தாயைப் பார்ப்பதற்குக் கொடுத்து வைக்கவில்லை.*
*கலைந்த குடும்பத்தில் அடுப்பும் எரியவில்லை*
*புட்டிப் பால் குடிக்கத் தவித்த நாளுமில்லை.*

*துடுக்குத் தனமடக்கித் தந்தை அணைத்ததில்லை*
*துயரம் கலைவதற்கு மனந்திறந்து சிரித்ததில்லை.*
*சேர்ந்து சிரிப்பதற்குச் சோதரரு மருகிலில்லை.*
*வயிறு நிறைப்பதற்குரிய தொழிலுமில்லை.*

*அறிவுப் பசியடங்க அரிதாய்க் கற்றதில்லை.*
*அதிகம் வருந்தியதால் உடலில் ஆற்றலில்லை*
*உடலின் பசியடங்கிப் பெச்சை அடித்ததில்லை*
*மானம் காப்பதற்கு முழுத்திற் கதிகமில்லை.*

*பிச்சை எடுத்ததனால் வயிறு நிறையவில்லை*
*வயிறு நிரப்பிடவே வழியும் தெரியவில்லை.*
*வழியில் பறிப்பதற்குத் துணிவும் இருக்கவில்லை*
*களைத்து நலிந்ததனால் காலில் உரமுமில்லை.*

*தவழ்ந்து செல்வதற்குத் தரையும் நேர்த்தியில்லை*
*தரையில் வீழ்ந்த பின்னே மீண்டும் எழுந்ததில்லை.*
*மீண்டும் எழுவதற்கு விதியும் இருக்கவில்லை*
*காடு செல்வதற்குப் பாடை இவனுக்கில்லை.*

அநாமி
மருத்துவபீடம்

---

## ஒன்றைத் தவிர –

*அன்பும் பிரிவும் இரண்டு*
*அம்மை அப்பா இரண்டு*
*இன்பம் துன்பம் இரண்டு*
*இறைவன் மனிதன் இரண்டு*
*இடையில் தரகர்க ளிரண்டு*

*கூடல் பிரிதல் இரண்டு*
*களவும் பொய்யும் இரண்டு*
*சூதும் வாதும் இரண்டு*
*பதரும் நெல்லும் இரண்டு*
*பொக்கை வாயு மிரண்டு.*

*போற்றல் தூற்றல் இரண்டு*
*உலோபி வள்ளல் இரண்டு*
*வானம் பூமி இரண்டு*
*பிறப்பும் இறப்பும் இரண்டு - பின்*
*செல்லும் இடமு மிரண்டு.*

சேது
மருத்துவபீடம்

# தலப் பெருமை

**வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்**
**வண்ணார் பண்ணை**
**யாழ்ப்பாணம்**

இலங்கையில் வழங்கும் சமய நெறிகளிற் சைவ சமயமே மிகப் புராதனமானது என்பதும், ஆதிகாலந்தொட்டே இங்கு சிவாலயங்களும், வைணவக் கோவில்கள் சிலவும், அக்கிரகாரங்கள் பலவும் நிலைபெற்று வந்துள்ளன என்பதைக் குறிப்பாக மகாவம்சத்தினாலும், நாட்டில் வழங்கும் தமிழ், சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளிலுமுள்ள நூல்களினாலும், சாசனங்களினாலும் அறிய முடிகிறது. போர்த்துக்கேய மொழியிலும், ஒல்லாந்தர் பாஷையிலும் எழுதப் பெற்ற வரலாற்று நூல்களிலும், தேசாதிபதிகளும், நிர்வாக அதிகாரிகளான பிறரும் எழுதிய அறிக்கைகளிலும் இந்துக் கோயில்கள் பற்றிய வர்ணனைகள் காணப்படுகின்றன.

சைவ இலக்கியங்களிலே தல புராணங்களும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வகையினவாகும். தமிழ் மொழியிலே தல புராணங்கள் பல நூற்றுக்கணக்கிலுள்ளன. திருத்தலங்கள் பற்றிய புராணக் கதைகள், ஐதீகங்கள், வரலாற்றுச் செய்திகள், சமய சிந்தனைகள், சித்தாந்தங்கள் முதலியவற்றையே தலபுராணங்கள் இலக்கிய நயத்துடன் தொகுத்துக் கூறுகின்றன.

ஆலயங்களின் வரலாறுகளை ஆதாரபூர்வமானவையாக அமைத்துக் கொள்வதற்கு ஆதாரமாயுள்ளவை கோயிற் சாசனங்களாகும். இந்துக் கோயில்களைப் பற்றிய சாசனங்கள் பெரும்பான்மையும் அனுராதபுரம், பொலனறுவை ஆகிய புராதன நகரங்களின் அழிபாடுகளிலிருந்தும், கிழக்கிலங்கையிலும், தென்னிலங்கையிலும் கிடைத்துள்ளன.

இலங்கையின் வடபாகத்திலுள்ள வீணாகான புரமென்னும் யாழ்ப்பாண நகரம் சைவ சமயத்திற்கு உறைவிடமாய் இருந்தது. போர்த்துக்கேய அரசினரும், ஒல்லாந்த அரசினரும் தங்கள்ஆட்சிக் காலத்தில் சைவாலயங்களை இடித்தும், சைவ சமயத்தினரைத் துன்புறுத்தியும் தங்கள் சமயத்தைப்பரப்பி வந்தனர். இத் தருணத்தில் இற்றைக்கு 210 வருடங்களுக்கு முன் (கி.பி.1790) ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த வைத்திலிங்கச் செட்டியாரால் கட்டப்பட்ட பெருமை வாய்ந்தது இவ் வைத்தீஸ்வரன் கோவிலாகும். இதனை வண்ணார் பண்ணை சிவன் கோவில், வண்ணை வைத்தீஸ்வரன்கோவில், செட்டியார் சிவன் கோவில் எனப் பலவாறாகப் பெயரிட்டு மக்கள் அழைக்கின்றனர்.

இலங்கையிலுள்ள புராதன சிவாலயங்களுள் வண்ணார் பண்ணை சிவன்கோயிலும் ஒன்றாகும். யாழ்ப்பாணத்துச் சிவன் கோவில்களில் இதுவே மிகப் பழமையானது. சைவத்திற்கும் தமிழுக்கும் நிலைக்களனாக விளங்கிவரும் இச் சிவன் கோவில் ஆகம விதிமுறையிலமைந்து, சிறந்த முறையில் ஆகம வழி பூசைகளமையப் பெற்று ஆகமவல்லுனர்களாகிய சிறந்த சிவாச்சாரியர்களால் பூஜிக்கப்பட்டு வந்த ஸ்தலம் இதுவாகும். விரத கால நிர்ணயங்களைப் பற்றியோ, நவராத்திரி, சிவராத்திரி, ஸ்கந்தசஷ்டி ஆகியவற்றைப் பற்றியோ சந்தேகம் வரும் காலங்களில் இவ்வாலய நடைமுறையைக் கொண்டு, அக் காலத்தில் இவற்றை நிர்ணயித்து வந்தனர். வடமொழியும், தென் தமிழும் ஆக இரண்டையும் இரு கண்ணாகக் கொண்டு விளங்கிய சிறப்பு வாய்ந்தது இவ்வலயமாகும்.

இத்தகைய புராதனச் சிறப்பும், பெருமையும் வாய்ந்த இத் தலத்தின் தலவரலாறு மிகவும் சுவையானதும் இரசிக்கக் கூடியதுமாகும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் பிரமான் கோபாலச் செட்டியார் என்பவர் தனது மனைவியாரோடு சோழ நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்து குடியேறினார்.

இவர் ஒல்லாந்த அரசனிடத்தில் துவிபாஷகர் (மொழிபெயர்ப்பாளர்) ஆக இருந்த பிரம்ம ஸ்ரீ கொச்சிக் கணேசையர் அவர்களிடம் உத்தியோகம் பார்த்து வந்தார். ஒரு நாள் ஐயரவர்கள் காரணமில்லாமல் கோபாலச் செட்டியாரைக் கண்டித்த போது, செட்டியார் உத்தியோகத்திலிருந்து விலகி வியாபாரம் செய்து வந்தார். இக்காலத்தில் ஒல்லாந்த தேசாதிபதி வீட்டிற்கு வியாபார நிமித்தம் செல்லவேண்டியேற்பட்டது. இதனால் இருவருக்கும் வர்த்தக மூலம் தொடர்பு உண்டாகியது. இவருடைய நேர்மை, ஒழுக்கம், விசுவாசம், நற்குணம் முதலியவற்றால் கவரப்பட்ட தேசாதிபதியின் மனைவி அவரிடத்தில் பேரபிமானம் வைத்தார்.

இந் நாட்களில் இந்தியாவிலிருந்து ஈழம் வந்த கூழங்கைத் தம்பிரான் செட்டியாரிடம் நட்புக் கொண்டு அவருடன் வசித்து வந்தார். அவர் தமிழ் இலக்கண, இலக்கியங்களிலும், சித்தாந்த சாஸ்திரத்திலும் மிக்க பாண்டித்தியம் உடையவர், சிறந்த பக்தர். அவர் அங்கு இருக்கும் போது தான் செட்டியாருக்கு ஒரு மகன் பிறந்தான். புதல்வனைப் பார்த்த தம்பிரான் ஆசீர்வதித்து "இவன் பெரும் கருமங்கள் செய்யப் பிறந்துள்ளான், இவனுக்கு வைத்தியலிங்கம்" என்று பேரிடுக என்றார். அவ்வண்ணமே பெயரிட்டனர்.

பன்னிரண்டு வயதான மிக்க அழகும், திடகாத்திரமும், நற்குண, நற்செய்கைகளும் உடைய வைத்தியலிங்கனை ஒரு நாள் கடையில் இருத்திவிட்டுச் செட்டியார் சாப்பிடச் சென்றார். அவ்வமயம் தேசாதிதயின் மனைவி, செட்டியாரின் கடைக்கு முன்னே வண்டியை நிறுத்தி "செட்டியார் எங்கே?" என வினாவினார். வைத்தியலிங்கன் எழுந்து போய் ஒரு மாதுளங்கனியை அந்த அம்மையிடம் கொடுத்து ஏற்கவேண்டினார். அம்மாது உளங்கனிந்து அதனை ஏற்றுக் கொண்டார். அவ்வமயம் அங்கு வந்த செட்டியாரிடம் "இச்சிறுவன் யார்?" எனக் கேட்க செட்டியார் "சிறியேன் புத்திரன்" என்றார். தேசாதிபதியின் மனைவி மகிழ்ந்து சிறுவனைத்தமது வண்டியிலேற்றிக்கொண்டு வீட்டுக்கேகினார். அவர்களுக்கு பிள்ளையில்லாமையால், வைத்தியலிங்கம் அவர்களது அரண்மனையில் சுவீகாரப் புதல்வனாய் வளர்ந்தார். அங்கு ஒல்லாந்த பாஷை பயின்றார். பதினெட்டு வயது வரை அரண்மனையிலேயே வசித்து வந்தார்.

ஒரு நாள் தேசாதிபதி முத்துச் சலாபத்தைக் குத்தகைக்கு விடப் போவதைக் கேள்விப்பட்ட சிறுவன் தன் வளர்ப்புத் தாயாரான அம்மையாரிடம் "அக்குத்தகையை நான் வாங்க விருப்பமுடையேன்" என்றான். அதற்கு உதவிபுரிய அம்மையாரை வேண்டினார். அவரும் ஒரு கடிதம் வரைந்து சிறுவனிடம் கொடுத்து தேசாதிபதியிடம் கொடுக்கும்படி கூறினார். தேசாதிபதி முகமலர்ச்சியுடன் "முத்துக் குத்தகை வாங்கப் போகிறாயா என வினவினார். பக்கத்தே பிரதான மந்திரியாகிய கொச்சிக் கணேசையர், "நீயும் குத்தகை வாங்கப்போகிறாயா?" என ஏளனமாக வினவினார். ஐயரின் மனோபாவத்தை அறிந்த தேசாதிபதி கோபித்து, ஐயரைப் பார்த்து, 'குத்தகையை இச்சிறுவன் பேருக்கு எழுதிப் பிணையாக என் பெயரை எழுதுக" என்று பணித்தார். ஐயரும் அவ்வண்ணமே செய்தார். எத்தகைய ஏற்றுச்சிரமமாக நடாத்தி பெருந்தொகைப் பணத்தை லாபமாகப் பெற்றார். இப்படி மூன்று முறை குத்தகை வாங்கி லாபமடைந்தார். இவரது குணத்தாலும், கொடையாலும், நல்லொழுக்கத்தாலும், ஈஸ்வர பக்தியாலும் சிறந்த பெரும் புகழ் படைத்தார்.

முத்து வியாபாரத்தில் பெரும் தனவந்தரான வைத்தியலிங்கத்தைத் தம்பிரான் சிவப் பணியில் ஈடுபடத் தூண்டினார். அவ்வேளை தம்பிரானவர்கள் "உன்னை இந்நிலைக்குத் கொண்டு வந்த பரமபிதாவாகிய வைத்தியலிங்கக் கடவுளுக்கும் உலக மாதாவாகிய தையல் நாயகி தேவியாருக்கும் ஆலயம் அமைக்க வேண்டும்" என்று கூறி அருள செட்டியாரும் சம்மதித்து தம்பிரான் குறித்த நிலத்தை 1787ம் ஆண்டு வாங்கி அத்திபாரம் இட்டு மூன்று வருடங்களுக்குள்ளே

ஆலயத்தைக் கட்டி பூர்த்திபண்ணினார். சாதாரணவருசம் (1790) சித்திரை மாதம் பூர்வ பட்ச சப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திர சுபதினத்தன்று ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானையும், ஸ்ரீ வாலாம்பிகை (தையல் நாயகி) அம்மையாரையும் பிரதிஷ்டைசெய்துவைத்தார்.

இந்த வைத்திலிங்கச் செட்டியாரவர்களே இக் கோவிலுக்கான பரிவாரத்தெய்வங்களுக்குரிய கோவில்களையும் ஆகம முறைப்படி அடைத்துள்ளார். வேம்படிப் பிள்ளையார் கோவில் (கோபாலச் செட்டியார் யாழ்ப்பாணம் வந்தநாள் முதலாக விநாயகரை வேம்பின் கீழ் வைத்துப் பூசித்து வந்தார். அவ்விநாயகர் கோவிலே இப்போது வேம்படிப் பிள்ளையார்கோவில் எனப்படுகிறது) பண்ணை முற்றவெளியில் முத்துமாரியம்மன் கோவில், வண்ணார்பண்ணை வடமேற்கிலுள்ள ஐயனார் கோவில், பிடாரி (காளி) கோவில் கற்கட்டு வைரவர் கோவில் ஆகிய ஐந்து பரிவார கோவில்களும் அமைக்கப்பட்டு நித்திய, நைமித்தியங்கள் சிரமமாக நடைபெற்று வரச்செய்தார்.

இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றது. இத்தலத்தின் தீர்த்தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். நல்லைநகர். ஆறுமுகநாவலர் தமது முதற்பிரசங்கத்தை முதன் முதல் இவ்வாலய மண்டபத்திலேயே செய்தார். தன்முதல் பிரசங்கத்தை "ஆயத்தமில்லை" என்ற தலைப்பில் ஆரம்பித்தது இவ்வாலய வஸந்த மண்டபத்தில்தான் என்றால் மிகையாகாது. அதுமட்டுமன்றி பல சைவபிரசங்கங்களையும், கண்டனக் கூட்டங்களையும் இங்கு நடாத்தினார். அவர்களுக்குப் பின் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை புராணப் பிரசங்கம் செய்தார். தம்பிரான் வைத்தீஸ்வரப் பெருமான் மீது ஒரு தனிக்கவி பாடியுள்ளார். இன்னும் கொச்சிக் கணேசையர், தையல் நாயகி மீதுஊஞ்சலும் அராலி விஸ்வநாத சாஸ்திரியார் வண்ணைக் குறவஞ்சியும், வட்டுக்கோட்டை கணபதி ஐயர் வைத்தியலிங்கக் குறவஞ்சியும் பாடியுள்ளார்கள். சிவதரும சீலரும் பெருந்தனவந்தருமானவைத்தியலிங்கச் செட்டியார் மேல் செந்திக் கவி என்ற ஒரு தமிழ் நாட்டுப் புலவர், ஒருபிரபந்தம் பாடி, கோவில் வசந்தமண்டபத்திலேயே அரங்கேற்றிப் பரிசிலாகப் பெரும் பொருள் பெற்றுச் சென்றுள்ளார். இத்தகைய பேரும் சிறப்பும் வாய்ந்த இக் கோவிலை வைத்திலிங்கச் செட்டியாரின் வழித்தோன்றல்களே தொடர்ந்தும் பரிபாலித்து வருகிறார்கள். தற்போது வைத்தியலிங்கச் செட்டியார் கந்தப்பச் செட்டியாரவர்கள் இக் கோவிலின் பரம்பரைத் தர்மகர்த்தாவாக பரிபாலனம் செய்து வருகிறார்.

சைவத்திற்கும், தமிழுக்கும் பெரு நிலைக்களனாக விளங்கும் இவ் வைத்தீஸ்வரன் கோவிலின் பெருமை நாளெல்லாம் போற்றப்படுகிறது. இலங்கையின் ஏனைய பாகங்களிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள சைவத் தலங்களெல்லாம் இவ்வாலயத்தைப் பின்பற்றி நித்திய நைமித்தியங்கள் நடத்துவதற்கு இக் கோயிலே ஆதாரமாக விளங்கி வருகிறது. ஆகவே பல தலைமுறைகளாக வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன்கோவில் சைவம் வளர்த்த சிவன் கோவிலாய்த் திகழ்கின்றது என்பதில் ஐயமுண்டோ!

## Sethalapathi ( Thilathaippathi )



Thilatharppanapuri became sethalapathi. Located near poonthottam which is in Mayiladuthurai - Thiuruvaaroor road. It is told that lord Rama and Lakshmana did the rituals for their father Dasaratha here and thats how the village got its name.

## கவிதைச் செண்டு

1. கலையழகு கலைஞனின் அழகு
சிலையழகு சிற்பியின் அழகு
உலக அழகு உலகோன் அழகு
உனது அழகு எதனழகோ.

2. வெண்மனமும் தண்ணழியும்
உன்னிடத்தில் குடி கொண்டால்
பொன்னெதற்கு பொருளெதற்கு
பூலோகம் தானெதற்கு

3. நீலக்கடலும் நீளமலையும்
எத்தனை அழகு - ஆகா
இவ்வானவெளியும் வண்ண உடுவும்
கற்பனை உலகு.
ஊனக் கண்ணே உன்னில் ஆயிரம் வேண்டும்.
ஆசை தீர ஆயிரம் ஆண்டுகள் இவ்வழகை ரசிக்க வேண்டும்
ஆயிரம் கோடி தொன்மிய மொழியால்
பாயிரம் வடிக்க வேண்டும்.

4. வில்லில் சொல்லும் வரும் அம்பும் வரும்
கல்லில் காயும் வரும் காயமும் வரும்
புல்லில் பனியும் வரும் பாயும் வரும்
கள்ளில் வெறியும் வரும் மருந்தும் வரும்
உன்னில் உலகே வரும்.

5. உயிரின்றி உடலொன்று
நடந்து வருகின்றது
கொழும்பு வீதியில் ஓர் தமிழன்
அடையாள அட்டையின்றி.


6. மனம் உரைத்தது அது முடியுமென்று
உடல் உரைத்தது அது முடியாதென்று
மன வைராக்கியம் முடித்தது செயலை
உடலோ சிரித்து வெற்றி விழாக் கொண்டாடியது
மௌனமாய் நின்றது மனம்.

7. <u>மனிதனும் குரங்கும்</u>
டாவினே நீ ஒரு பொய்யன்
குரங்கிலிருந்து மனிதன் வரவில்லை
மனிதனில் இருந்து தான் குரங்கு வந்தது.

8. <u>நிலவுப்பாட்டு</u>
காதலைத் தூண்டும் கார்நிலவே
மோதல் நடக்கும் எம்மண் மேல்
மோகம் கொண்டு மேகத்திரை விலக்கி
முகம் நீட்டினாயோ, எட்டி உதைப்பேன் உன்னை
எமது உடனடித் தேவை
குளிர் நிலவுகளல்ல
பற்றி எரியும் சூரியன்கள்

- யோ. ருத்ரா
மருத்துவ பீடம்

# TIRUMALA - TIRUPATI



***A temple that has its origins in Vaishnavism an ancient religion which advocates the principles of equality and love, and prohibits animal sacrifice.***

The town of Tirupati is one of the most ancient and spectacular places of pilgrimage in India. It is situated in the Chittoor district in southern Andhra Pradesh. The town owes its existence to the sacred temple of Lord Sri Venkateswara situated on the Tirumala Hill adjoining it. With a history that dates back to over twelve centuries, the temple is the jewel in the crown of ancient places of worship in southern India.

There is ample literary and epigraphic testimony to the antiquity of the temple of Lord Sri Venkateswara.

All the great dynasties of rulers of the southern peninsula have paid homage to Lord Sri Venkateswara in this ancient shrine. The Pallavas of Kancheepuram (9th century AD), the Cholas of Thanjavur (a century later), the Pandyas of Madurai, and the kings and chieftains of Vijayanagar (14th - 15th century AD) were devotees of the Lord and they competed with one another in endowing the temple with rich offerings and contributions.



*Statues of Krishnadevaraya and his consorts*

It was during the rule of the Vijayanagar dynasty that the contributions to the temple increased. Krishnadevaraya had statues of himself and his consorts installed at the portals of the temple, and these statues can be seen to this day. There is also a statue of Venkatapati Raya in the main temple.

After the decline of the Vijayanagar dynasty, nobles and chieftains from all parts of the country continued to pay their homage and offer gifts to the temple. The Maratha general, Raghoji Bhonsle, visited the temple and set up a permanent endowment for the conduct of worship in the temple. He also presented valuable jewels to the Lord, including a large emerald which is still preserved in a box named after the General. Among the later rulers who have endowed large amounts are the rulers of Mysore and Gadwal.

In 1933, the Madras Legislature passed a special act, which empowered the Tirumala Tirupati Devasthanams (TTD) Committee to control and administer a fixed group of temples in the Tirumala-Tirupati area, through a Commissioner appointed by the Government of Madras.

In 1951, the Act of 1933 was replaced by an enactment whereby the administration of TTD was entrusted to a Board of Trustees, and an Executive Officer was appointed by the Government

The provisions of the Act of 1951 were retained by Charitable and Religious Endowments Act, 1966.

The Tirumala Hill is 3200 ft above sea level, and is about 10.33 sq miles in area. It comprises seven peaks, representing the seven hoods of Adisesha, thus earning the name, Seshachalam. The seven peaks are called Seshadri, Neeladri, Garudadri, Anjanadri, Vrishabhadri, Narayanadri and Venkatadri.

The sacred temple of Sri Venkateswara is located on the seventh peak, Venkatadri (Venkata Hill), and lies on the southern banks of Sri Swami Pushkarini. There are several legends associated with the manifestation of the Lord in Tirumala.

The name Tirupati, meaning the 'the Lord of Lakshmi' should have been appropriately applied to the village on the Venkata Hill, the abode of the Lord. However, it has been popularly assigned to the Municipal town at the foot of the Hill, while the village around the Hill near His temple is called Tirumala (the Sacred Hill).

The temple of Sri Venkateswara has acquired unique sanctity in Indian religious lore. The Sastras, Puranas, Sthala Mahatyams and Alwar hymns unequivocally declare that, in the Kali Yuga, one can attain *mukti*, only by worshipping Venkata Nayaka or Sri Venkateswara.

The benefits acquired by a piligrimage to Venkatachala are mentioned in *Rig veda and Asthadasa Puranas*. In these epics, Sri Venkateswara is described as the great bestower of boons. There are several legends associated with the manifestation of the Lord at Tirumala.

---

**தஞ்சைப்பெரிய கோயில்**



இராஜ ராஜச் சோழனால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயம்.



சோழர் கால கட்டடக் கலையின்சிறப்புத் தன்மையை இன்னும் விளம்பி நிற்கின்றது.



மிகப்பெரிய இலிங்கம், நந்தி உயரமான விமானம் என்பவற்றுக்காக பிரசித்தமானது.

# மனித்தப் பிறவியும் வேண்டுவதே!

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது; மானிடராயினும் கூன்குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தலரிது, பேடுநீங்கிப்பிறந்த காலையும் ஞானமும் கல்வியும் நயத்தலரிது; ஞானமும் கல்வியும் நயத்த காலையும் தானமும் தவமும் தான் செய்தல் அரிது: தானமும் தவமும் தான் செய்வராயின் வானவர் நாடும் வழிதிறந்திடுமே என்று ஔவைக் கிழவியார் அறுதியிடுகின்றார்.

**"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்"**

என்று கூறும் வள்ளுவனார் பிறவியின் பயன் கடவுளை அடைதல் என்ற வாழ்க்கைத் தத்துவத்தை இரண்டே அடிகளில் எடுத்தியம்பி விடுகிறார். புல்லாய் பூடாய் புழுவாய் மரமாகி, பல்விருகமாகி பறவையாய் பாம்பாய்ப் பிறப்பெடுத்த உயிரிகள் ஈற்றில் கடவுளை அடைய இலகுவான மனிதப் பிறவியை அடைகின்றன என்பது திருவாசகம் தந்த மணிவாசகரின் வாக்கு.

"அன்பே சிவம்" என்பது திருமந்திரம். ஆதியும் அந்தமும் இல்லாத அந்த அரும்பெருஞ்சோதி அன்புக் கடலாக உலகை ஆட்சி புரிகின்றான் என்றால் அந்த அன்பை அனுபவிக்கும் நாங்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். எங்கும் நிறைந்த இறைவன் பக்தர்களுக்காக அருவம், உருவம், அருவுருவம் ஆகிய நிலைகளை எடுக்கிறான் என்று ஞானிகள் கூறுவார்கள். இந்த வகையில் நடராஜத் திருக்கோலத்தை கண்ட தாண்டக வேந்தர் அந்தக் தாண்டவக்கோனை பாடுவார்,

**"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே"**

இறை இன்பத்தில் திளைத்தல் என்பது தெவிட்டாத அனுபவம். பேரின்பப் பெருங்கடலில் நீந்தி மகிழ்தல் வேண்டி நிற்கும் போது பிறவிப் பெருங்கடலை நீந்தி முடிப்பதற்குப்பதிலாக நீந்திக் கொண்டே அனுபவித்தலை வேண்டி நிற்கிறார்கள் இறையடியார்கள். இதனாலன்றோ இறவாத இன்ப அன்பு வேண்டி நின்ற காரைக்கால் அம்மையார், "மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும் மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி, அறவா நீ ஆடும் போது நின் அடியின் கீழ் இருக்க வேண்டும்" என்று இறைவனைச் சுவைக்கும் வரத்தை வேண்டி நிற்கிறார்.

இறைவனை தாயாக, தந்தையாக, குழந்தையாகத் தோழனாக உறவு கொண்டாடி மகிழ்ந்த அடியவர்களை எண்ணும் போது பெருவியப்பேற்படுவது கண்கூடு. மோகம் அறுத்துவிடின் முத்தி கொடுக்கின்ற இறைவனையே தனதுமனைவியால் தூதாக அனுப்பிவைத்த சுந்தரரை

நினைக்கும்போது இறைவன் அடியார்க்கு எளியனாக அமைவது தெட்டத் தெளிவாகிறது.கண்ணப்பர் கண் இடர்ந்து அப்பும் வரை சோதித்த இறைவனால், பாலறாவாயரான திருஞானசம்பந்தர் "அம்மே, அப்பா" என்று அழுதது பொறுக்க முடியவில்லை. இளகிய நெஞ்சம் படைத்தவன் இறைவன்.

இன்று கூட நம்மில் பலர் சமய வாழ்வு வாழ்வதாக கூறிக் கொண்டு வெறுமனே போலி வாழ்வு வாழ்வதனையும், இறைவனிடம் இன்பத்தை வேண்டி அலைவதனையும் காண்கின்றோம். இறைவனிடம் நேரடியாகத் தொடர்பு ஏற்படுத்தித்தருவதாக கூறி பலர் மதமாற்றங்கள் செய்ய முனைவதனையும் காணும்போது, மனிதப் பிறவி ஈனமான பிறவி என்கின்ற தவறான முடிவு கூடத் தோன்ற முடியும். ஆயினும் உண்மையான வாழ்வு வாழ்ந்து இனிய இறை இன்பத்தை அனுபவிக்கும் ஆன்மீக வாதிகளும் நம்மிடை இல்லாமலில்லை.

வெளிவேடம் மட்டும் இறைவனை அடைவதற்கு போதுமானதன்று. இன்னமும் சொல்லப் போனால், தூயமனமுடையவர்களுக்கு, உலகம் இழித்துரைக்கும் பழிகள் யாவும் வென்றுநின்றவர்களுக்கு சமயவேடமே தேவையில்லை என்கிறார் வள்ளுவர்.

"**மதித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒறுத்துவிடின்**" என்பது அவர் முடிவு.
தவிரவும்,
"**வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்**"

என்று கூறும் பொய்யாமொழியார் மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்பதனை அன்றே தெட்டத்தெளிவாக்கிவிட்டார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகியவற்றை நீக்கி வாழும் வாழ்வு அறவாழ்வு ஆகிறது. கொல்லாமை என்னும் கொள்கையுடையானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழுதல் கண்கூடு.

மொத்தத்தில் மனம் வெளுக்கும் மார்க்கத்தை கண்டறிந்தால் எம் வாழ்வும் சுவைத்து வளம் கொழிக்கும். மனிதக் குழந்தைகளை போஷிப்பதற்கு தாயினும் சாலப் பரிந்துருகும் தன்னிகரற்ற தலைவன் உள்ளான். பின்னர் அவன்பால் கொண்ட காதலினால் கிளர்ச்சியடைந்த அன்பு உள்ளங்கள் மீண்டும் மீண்டும் மனிதப் பிறவி வேண்டி நிற்பதில் வியப்புக்கு இடமேது? ஆகவே, ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியின் அருட்கடாட்சம் பெற்ற மனிதவுயிர்கள் கொடுத்துவைத்தவை. தெவிட்டாத தேனமுதின் தித்திப்பை உணர்வதற்கு எம் வாழ்வை வழிப்படுத்துவோமாக.

**கி.குருபரன்**
இரண்டாம் வருடம்
மருத்துவ பீடம்.

# ஆனந்த தாண்டவ நாயகனின் கலையழகு

கலைகளின் வளர்ச்சிக்கு இந்து ஆலயங்கள் தொன்று தொட்டு வழங்கி வரும் பங்கு அளப்பரியது. பண்டைக் காலம் தொட்டு இசை, நடனம், சிற்பம், ஓவியம், கட்டடம் ஆகிய கலைகள் ஆலயங்களிலே வளர்ந்து வருகின்றன. கலைகளில் நுண்கலைகள் தெய்வீகமும் புனித தத்துவமும் வாய்ந்தன. எனவே இக் கலைகள் ஆலயங்களில் வளர்ந்து வருதல் சாலப் பொருத்தமானதாகும்.

கலைகளின் தத்துவத்தை விளக்கி நிற்கும் நடராஜர் திருவுருவத்தில் ஆன்மீகச் சிறப்புக்களை அழகுறக் காணலாம். இத்திருவுருவம் அன்று விளங்கிய நாட்டிய அம்சத்தையும் சிற்பக் கலையின் எழிலையும் இவ்வுலகிற்கு எடுத்தியம்புகின்றது. இத்தகைய பஞ்ச கிருத்திய தத்துவத்தை விளக்கி நிற்கும் நடராஜர் திருவுருவச் சிலை இல்லாத சிவன் ஆலயமே இல்லையெனக் கூறலாம். சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற பண்டைய தமிழ் இலக்கியங்களில் எல்லாம் நடராஜர் திருவுருவச் சிறப்புப் பற்றிக் கூறப்படுகிறது.

அன்று அப்பர் சுவாமிகள் இத் திருவுருவத்தின் அழகை தேவாரப் பதிகங்களில்

*"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ் வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்*
*இனித்தமுடைய வெடுத்த பொற் பாதமுங் காணப் பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே"*

எனக் கூறியுள்ளார்

ஆலயத்தில் சிற்பக் கலையின் உயர்நிலையாக அமையும் நடராஜர் திருவுருவ தத்துவச் சிறப்பை எடுத்து நோக்கினால் சைவ சமயத்தின் தத்துவக் கருத்தின் தொகுப்பாக இது அமைகின்றது. ஒவ்வொரு சிறிய அம்சத்திலும் சமயம் தழுவிய பல சிறப்புக்களைக் காண முடிகின்றது.

நடராஜர் **திருமுகமானது** பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் எல்லையற்ற அழகுசேர்ந்த கருணை வடிவமாகத் திகழ்கின்றது. சாந்தமும், மலர்ச்சியும், தவழும் அந்தத் திருமுகம் இறைவனின் கருணை உள்ளத்துக்கான விளக்கமாக அமைந்துள்ளது.

**நடராஜர் பெருமானின் பனித்த சடை முடி** ஞானச் சிறப்பையும் சிவநெறிக்குரிய தவ ஒழுக்கச் சிறப்பையும் குறிக்கின்றது.

**கங்கை தாங்கிய திருமுடி** பரமனின் பேராற்றலுக்கான விளக்கமாக அமைந்திருக்கிறது.

**பிறை அணிந்த பெம்மான்** தம்மைச் சரணடைந்தவர்களை அரவணைத்து அவர் தம் துயர் நீக்கும் இயல்பினுக்கு நடராஜப் பெருமானின் முடியில் காட்சி தரும் பிறை ஒரு சான்றாக அமைந்திருக்கிறது.

**வளைந்த புருவங்கள்** பார்வையை கூர்மையாக்கி உற்றுக் கவனிக்கும் போது புருவம் தானாக வளைந்து கொடுப்பது இயல்பு. தமது அடியார்களின் துயரங்களைத் தெளிவாக உணர்ந்து கொள்ள பரமன் கூரிய பார்வையை உயிரினங்கள் மீது ஒட்டும் தன்மைக்குப் பெருமானின் வளைந்த புருவங்கள் சான்று ஆகும்.

நடராஜ பெருமானின் உதடுகளில் தவழும் **இனிய குறுநகை,** தம்மை அண்டியவர்கள் செய்த பாவங்களை மன்னித்து அருள் பாலிக்கும் கருணையின் சின்னமாகும்.

பெருமானின் **சிவந்த பவளம் போன்ற திருமேனி** தீப்பிழம்புக்குச் சமனானதாகும். தீயானது தம்பால் வந்து சேரும் பொருட்களில் உள்ள மாசினை எரித்து அகற்றி தூய்மைப்படுத்தும். அது போன்று தம்மை அண்டித் தம்முடன் இரண்டறக் கலக்கும் ஆன்மாக்களின் வல்வினை என்ற அழுக்கைப் பரமன் சுட்டெரித்து ஆன்மாக்களை பரிசுத்தப்படுத்துகிறார் என்பதுஅதன் உள்ளார்ந்த பொருளாம்.

ஆன்மாக்களின் கர்மவினைகள், தவறுகள், குற்றங்களை தமது கருணை உள்ளத்தினால் களைந்து அகற்றி அவர்களை தமது வசம் இழுத்து, உயிர்களைக் கடைத்தேற்றும் தத்துவம் **பரமனின் நீலகண்டமாகும்.**

**பரமனின் கரத்திலிருந்து ஒலிக்கும் தமருகம்** எனப்படும் உடுக்கையின் நாதம் அணிதிரள்களைத் திரட்டி உலகத்தை, உலகம் சார்ந்த பொருட்களைப் படைக்கும் தத்துவத்தின் அடையாளமாகும்.

நடராஜரின் **இடக்கை ஒன்றிற் காணப்படும் நெருப்பு** பரமனின் அழித்தல் தொழிலின் சின்னமாகும்.

நடராஜப் பெருமானின் **அமைந்த கரத்தை** அபயகரம் என்று கூறுவர். எதற்கும் அஞ்சற்க, நாம் என்றும் துணையிருப்போம் என்று உயிர்களுக்கு இறைவன் அளிக்கும் உறுதிமொழியின் அடையாளம் அது.

**எடுத்த திருவடியாக** காட்சி தரும் இடது திருவடி பரமனின் மறுகூறான அம்மைக்கு உரியதாகும். நம்மை ஆட்கொள்ளவரும் திருப்பாதம் என அப்பர் பெருமானின் வர்ணனையே இதற்கான அர்த்தமாகும்.

**நடராஜரின் ஊன்றிய திருவடி** பரமனின் ஆண்கூறுக்கு உரியதாகும். அந்தத் திருவடி முயலகன் மீது ஊன்றிய நிலையில் உள்ளது. முயலகனை மிதித்து நின்றாலும் ஒரேயடியாக அவனை நசுக்கிவிடாமல் மென்மையாக பாதத்தை வைத்திருக்கும் பான்மையிலும் ஓர் அர்த்தம் உண்டு. முயலகன் ஆன்மாக்களை அலைக்கழிக்கும் மும்மலங்களை குறிக்கும் அடையாளம் என்பர். மும்மலங்களை விளக்கியருளும் பணியினைச் செய்யும் இறைவன் இந்தப் பணியில் ஆன்மாக்களுக்கு ஒரு ஊறும் விளைவிக்காத நிலையில் தன் பணியினை ஆற்றுகின்றான் என்பது தத்துவம்.

நடராஜ பெருமானின் திருவுருவம் எந்தத் தவத்திலும் தெற்கு நோக்கியே அமைந்திருப்பதைக் காணலாம். தென்திசை எமன் திசையாகும். தம்மை நம்பி அண்டியவர் யாரையும் தென் திசைக்கு அதிபதியாம் எமனின் அச்சத்திலிருந்து காத்தருளுவார் என்பது இதன் பொருளாகும்.

நடராஜ வடிவத்தினை வருங்காலத்தில் இதன் பழைய சிறப்புடன் எந்த கலைஞனாலும் சமைத்தளிக்க முடியுமா என்பது ஐயப்பாடே! இத்திருவுருவம் பக்தர்களுக்கும் பாமரர்களுக்கும் மட்டுமன்றி விஞ்ஞானிகளுக்கும், மெய்ஞ்ஞானிகளுக்கும் கூட பெரும் வியப்பையும் பெரும் ஈடுபாட்டையும் தோற்றுவித்து வருகின்றது எனப் புகழ் பெற்ற கலையியல் பேரறிஞர் திரு. ஆனந்த குமாரசாமி கூறியிருக்கிறார். எனவே நடராஜப் பெருமானின் திருவுருவத்தை வழிபடுவோர், பூரண இறை வழிபாட்டை சிறப்பாக மேற்கொண்டோராவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**சிவாய நம**

கோபிகா – பஞ்சாட்சரம்
2ம் வருடம் வர்த்தகம்
முகாமைத்துவ நிதிப்பீடம்

# வாழ்க்கையில் சைவநெறி

"அன்பே சிவம்" என்றார் திருமூலர். அன்பு வேறு சிவம் வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. அன்புதான் சிவம் ஆகவும், சிவம் தான் அன்பு ஆகவும் விளங்குகின்ற உண்மையை உணர்த்துகிறது. திருமந்திரம்.

அன்பு தான் சிவம் அதனால் அன்பினை உள்ளத்தில் இருத்தி அதனை எப்பொழுதும் நினைத்து செயற்படுதல் நம் கடமையாகும். அன்பை, சிவத்தியனமாக சிவ வழிபாடாகக் கருதி ஒவ்வொரு வரும் தினந்தோறும் பிற உயிர்களுக்கு அன்பு செய்து வரவேண்டும். அப்போதுதான் அது மாபெரும் சக்தியாக அமையும். அன்பினால் ஆகாதது வேறொன்றும் இல்லை. அன்பு வாழ்வு தான் சைவ சமய வாழ்வு. அன்பு நெறியே சைவநெறி. அது அன்புச் சமயமாகும்.

மனிதனில் மறைந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவது சமயம் என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். சைவ சமயம் ஒரு வாழ்க்கை நெறியாகும். மனிதர்களை, வையத்தில், வாழ்வாங்கு வாழ வழிசமைத்துத்தருவது சமயம். சமயம் என்றால் வழி, பாதைநெறி, மார்க்கம் என்று பொருள்படும்.

வாழ்க்கையில் சைவம் என்னும் போது சிவத்தை சார்ந்து நின்று தெய்வீகப் பண்புகளை வாழ்க்கையோடு இணைத்து வாழ்தலாகும். உண்மை, அன்பு, நீதி, தர்மம், சாந்தம், அழகு, நன்மை இன்னா செய்யாமை முதலியன சிவம் சார்ந்த பண்புகள். மனிதன் மனித பிறவியை எடுத்ததனால் மட்டுமே மனிதனாகி விட முடியாது, சிவம் சார்ந்த மனிதப் பண்புகளை வாழ்க்கையில் பேணி நடந்து கொள்ளும் போதே மனிதனாகின்றான். சடங்குகள், கிரியைகள், வேள்விகள், விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், பூசை வழிபாடுகள் முதலியன நமது சமய வாழ்க்கையில் பெரிதும் இடம்பெறுகின்றன. அவை சமய வாழ்விற்கு உதவும் சாதனங்களாகும். அவை மனிதத் தன்மைகளைப் பெற்று மனிதராக வாழ்வதற்கு உதவுகின்றன.

தனியாள், நல்லொழுக்கம் உடையவராக மாற்றம் பெறும் அளவுக்குச் சமூகம் ஒழுக்க நிலையில் உயரும். சமயம் காட்டும் நெறியில் செல்பவர்களே நல்லொழுக்கம் உடையோராகத் திகழ்கின்றனர்.

ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்பவர்களே இறைவனை அடைய முடியும் எனச் சைவம் வலியுறுத்துகிறது. அறம், பொருள், இன்பம், ஆகியவற்றை அடைவதற்குச் சைவநெறி காட்டும் பாதையில் நாம் வாழ வேண்டியது அவசியமாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவை பற்றிய நூலறிவு மட்டும் போதாது அந்த மார்க்கங்களில் நின்று நாம் ஒழுகுதல் வேண்டும். கல்விப் பயன் கற்றபடி ஒழுகுதலாலேயே அடையப்படுகிறது. "கற்றாங்கு ஒழுகு" என்பது ஆன்றோர் கூற்று. அறநெறியில் நின்று தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்தல் ஆன்ம விடுதலைக்கு வழி எனச் சமயம் வழிகாட்டுகின்றது. பொறுப்புக்களை அலட்சியம் செய்யாது, அகமும் புறமும் தூய்மையாக விளங்கும் போதேவாழ்வு சிறக்கும். அதனால் மனத் தூய்மை, மொழித் தூய்மை, மெய்த் தூய்மையுயைடவராய் வாழ முயல வேண்டும்.

பொறாமை, ஆசை, கோபம், செருக்கு, பகைமை உணர்வு என்பவற்றை மனத்திலிருந்து அகற்றிவிடுவதன் மூலம் மனம் தூய்மை பெறுகிறது. தூய்மையான மனத்தில் தோன்றுவன நல்ல எண்ணங்கள், நல்ல உணர்வுகளாகவே அமையும். அவை எல்லோரையும் வாழ்விக்கும் தன்மையனவாகும். பண்பாகவும், பணிவாகவும் இனிய சொற்களைப் பேசுவதால் கேட்போர் மன மகிழ்ச்சியடையடைவர். நல்லுறவு ஏற்படவும் வழியேற்படும். அப்பேச்சு தமக்கும் பிறர்க்கும் நல்ல பயனைத்தரும்.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப்பிற" என்பது வள்ளுவர் வாக்கு

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் பிறர்க்கு நன்மை பயப்பதாய் விளங்க வேண்டும். ஒரு சிறு செயல் கூடப் பிறர்க்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது. எந்த ஒரு பணியிலும் சுயநலம் புகுந்துவிடல்

ஆகாது. கடமைகளைச் செய்வதில் அசிரத்தையும், பலனைப் பெறுவதில் சிரத்தையும் கொள்ளல் சமய வாழ்விற்குப் புறம்பானது. சைவம், செயல்களில் தூய்மை மிளிர வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

மனித வாழ்கையில் உலகியல் தேவைகளுடன் ஆன்மிகத் தேவைகளும் உண்டு. சைவ சமய வாழ்வில் இந்த இரண்டு வகைத்தேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன. வாழ்க்கையில் ஆன்மீகம் இல்லையேல் முழுமை வாழ்வு ஆகாது. ஆன்மீகமானது இறை சிந்தையுடன் நேர்மையான மானுடப் பண்புகள் உள்ள வாழ்க்கையில் மிளிர்கிறது. இறைவழிபாடு, சமய அனுட்டானம், தியானம், இறைதொண்டுகள், சமய நூல்களைக் கற்றல், பெரியோரை கனம் பண்ணுதல் என்பவற்றில் ஈடுபாடு கொள்வதால், வீண் விவகாரங்களில் எம் மனங்களையோ, புலன்களையோ செலுத்தாது தவிர்த்துக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு கருமத்தையும் செய்யத் தொடங்கும் முன்னரும், செய்யும் போதும் எங்கும் நிறைந்த இறைவன் அவற்றைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். எதையும் மறைக்க முடியாது என்னும் உண்மையைக் கருத்திற் கொள்ள வேண்டும். அதனால் தீவினைகள் பிறவிகள் தோறும் நம்மைத் தொடர்கின்றன. அவற்றைச் செய்தவர்கள் அனுபவித்தே தீர்க்க முடியும். தீவினைகளால் துன்பங்களால் துன்பங்களே எமக்கு நேரிடுகின்றன. அதனால் பாவச் செயல்களைச் செய்யாது தவிர்க்கும்படி சைவம் கூறுகிறது. எனவே நாம் நற்குண, நற்செய்கைகளிலேயே ஈடுபடுதல் வேண்டும்.

சமயம் வேறு, வாழ்க்கை வேறு அல்ல. சமயமே வாழ்க்கை. வாழ்க்கையே சமயம் என்பது சைவத்தின் நிலைப்பாடு. மனிதர்கள் சமூகமாக வாழவேண்டியவர்கள். பிறரில் தங்கியும் பிறரைத் தாங்கியும் வாழ்பவர்களாக மனிதர்கள் உள்ளனர். சமூகத்தவருடன் இசைந்தும் இணங்கியும், முரண்படாமலும் நல்லுறவு பேணியும் வாழ்தல் அவசியமாகின்றது. அந்த நிலையில் பண்பாடு தேவைப்படுகின்றது. மனம் தான் பண்பாடு உருவாவதற்கு முக்கியமான இடம். மனத்தைப் பண்படுத்துவதற்கும் பக்குவப்படுத்துவதற்கும் உறுதுணையாக வருவது சமயம்.

சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரிய புராணம் என்னும் நூல் சைவ சமயப் பண்பாட்டினைப் பேணி வாழ்ந்த நாயன்மார்களின் உண்மைச் சரித்திரங்களையும் அவர்களின் தன்னலமற்ற தொண்டுகளையும் எடுத்துக் கூறும் ஒரு சமய வாழ்வியல் நூல் ஆகும். அந் நூலில் சேக்கிழார் பல்வேறு நற்பண்புகளை எடுத்துக் காட்டியுள்ளார். அதில் தொண்டுள்ளங் கொண்டு தொண்டு செய்து வாழ்ந்த சிவனடியார்களின் வரலாறுகள் கலங்கரை விளக்கங்களாக நின்று நம்மை நன்னெறிப்படுத்துகின்றன.

எல்லாம் வல்ல எம் பெருமானின் நினைப்பு எம்மிடம் நீங்காது நிலைபெற வேண்டும் நின்றும், இருந்தும் நடந்தும் கிடந்தும் என்றும் இறைவனின் திருத்தாள்களை எண்ணிக் கொண்டிருப்பதால் நாம் நல்லவற்றையே சிந்தித்து பேசி நற்செயல்களையே செய்ய வழியேற்படும்.

செல்வப்பிரியா சதாசிவம்
1ம் வருடம்
முகாமைத்துவ நிதிப்பீடம்.

**பஞ்ச பூதக் கோயில்கள்....** சமய குரவரால் பாடப்பெற்றவை

சிதம்பரம் (ஆகாயம்)

திருவண்ணாமலை (அக்கினி)

திருவானைக்கால் (நீர்)

காளஹஸ்தி (வாயு)

திருவாரூர் / காஞ்சிபுரம் (பூமி)

# மாணவர்களே...! ஒரு நிமிடம் !!
# சிந்தியுங்கள்!....... செயற்படுங்கள் !!

| | | |
|---|---|---|
| பெரியப்பா | :- | தம்பி நிரோ வாறியே இண்டைக்குப் பின்னேரம் அஞ்சரைமணிக்கு பஜனைக்குப் போவம். |
| நிரோ | :- | இல்லை பெரியப்பா, எனக்கு தமிழ் வகுப்பு இருக்கு. |
| பெரியப்பா | :- | சரி பரவாயில்லை... நாளைக்குப் பின்னேரம் பொழுதுபட்டாப்போல ஏழு மணிக்கு சமயப் பேச்சு இருக்காம். அதுக்காவது வாவனடா. |
| நிரோ | :- | வகுப்பெண்டா இல்லைத்தான்.... ஆனா நாடகம் ஒன்று இருக்கு. தொடர்ந்து பார்த்துக் கொண்டு வாறன். அதனால நான் வரேல.... |
| பெரியப்பா | :- | சரியடா தம்பி. இந்த வகுப்பும், ரீ.வி. நாடகமும் இல்லாத நேரமொண்டு சொல்லு பார்ப்போம். |
| நிரோ | :- | என்ன பெரியப்பா....விடியக்காலமை வகுப்பு, பிறகு பள்ளிக்கூடம் பிறகென்ன பின்னேரமும் வகுப்பு, இரவு ரீ.வி. எண்டு நேரமே இல்லை. |
| நிரோவின் அப்பா | :- | அண்ணை! அவனை இப்ப போட்டுக்குழப்ப வேண்டாம். அவன் இப்ப வகுப்புக்குப்போய் நல்லா படிக்கட்டும். உங்கட கதைகளையெல்லாம் நல்லா வளர விட்டு யோசிப்பம். இப்ப என்ன அவசரம்? |

இதுதான் மாணவர்களே எமது பொதுவான நிலை. ஏன் நன்றாகப் படிக்கவேண்டும் என்றால் அப்போதுதான் பெறுபேறுகளைப் பெற்று நல்ல ஒரு வைத்தியராகவோ அல்லது ஒரு பொறியியலாளராகவோ வரமுடியும் என்போம். அவ்வாறு எதற்காக வரவேண்டும் என்பதற்கு அப்போதுதான் பட்டம் பெற்று பதவியிலேறி நன்றாகப் பணம் சம்பாதிக்கமுடியும். அப்போது தானே சமுதாயம் எம்மை மதிக்கும் என்று உடனே அளந்து விடுவோம்.

சரி, அப்படியென்றால், இன்று பரவலாக பல்கலைக்கழகங்களில் இடம்றெும் படிப்பு நிறுத்த போராட்டங்கள், பகிஷ்கரிப்புக்களையோ அல்லது எமது நாட்டில் இடம் பெற்ற வைத்தியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தையோ மக்கள்தான் வரவேற்றார்களா? இன்றைய இளைஞர்களின் கைகளில் தான் நாளைய எதிர்காலம் தங்கியிருக்கிறது என்கிறார்கள். அவ்வகையில் நேற்றைய இளைஞர்கள் அன்று வித்திட்டு இன்று வளர்கின்ற சமுதாய சீர்கேட்டை மக்கள் தோரணம் கட்டியா வரவேற்கிறார்கள்?

பொதுவாகத் தான் மட்டுமே நன்றாக முன்னேறி, சந்தோஷமாக இருக்கவேண்டும் என்ற மனிதனது சுயநலத்தின் விளைவுகள் தாம் இவை. மாணவப் பருவத்திலே பண்பு வளர்ச்சியைப் பறக்கவிட்டு அறிவு விருத்தியில் முழுமூச்சுடன் இறங்கியதன் பிரதிபலிப்புகள் தாம் இவை. பண்டைய பெரியவர்கள் வகுத்த பொறுமையை, அன்பை, கீழ்ப்படிவை, பொதுநலத்தை அதனுடன் கூடிய அபிவிருத்தியை தன்னகத்தே கொண்ட குருகுல முறையைப் பின்பற்றாமையின் விளைவுகள் தாம் இவை.

எந்நேரம் பார்த்தாலும் அறிவைமட்டும் விருத்தி செய்வதில் தான் மாணவர் சமுதாயம் வரிந்துகட்டி நிற்கிறது. எங்கு பார்த்தாலும் போட்டி! போட்டி!! போட்டி!!! இதற்குஅவ்வப்போது உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், போட்டி பொறாமையை வளர்க்க, அது ஒற்றுமையைச் சீர்குலைத்து, அன்பை அறுத்து சுயநலத்தை வளர்க்கிறது. இதற்கான களைகள் எங்கே விதைக்கப்பட்டன? எங்கே சரியான விதைகள் களைநீக்கி விதைக்கப்படவில்லை? சற்று சிந்தியுங்கள்! ஆக மொத்தத்தில் அறிவை விருத்தி செய்யத் தெரிந்த மாணவர்கள், உயிரினும் ஓம்பப்படும் ஒழுக்கத்தை விருத்தி செய்யாமையே இதற்குக் காரணம்.

பண்பை சரியான முறையில் இளவயதிலேயே நிர்மாணம் செய்ய வேண்டும்!.... என்று தொடங்கியதுமே இவையெல்லாம் தற்போது எதற்கு. அறிவு வளர்ச்சி தான் தற்போது தேவை, மற்றபவைபைப் பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்பார்கள். என்ன! ஐந்தில் வளைக்கத் தவறியதை ஐம்பதில் வளைத்துத் தோற்கும் நோக்கமா?, அல்லது உடைக்கும் நோக்கமா?, தொட்டிலிலே படிக்காததை, சுடுகாடு போகும் வழியில் படிக்க உத்தேசமா?. முடிவாக, கண்கெட்ட பின் தான் சூரிய நமஸ்காரம் செய்வதைப் பற்றி சிந்திக்கப் போகிறோமா? ... சற்று சிந்தியுங்கள்...."உங்களது நாட்டிலே ஒரு சிறந்த மனிதனை ஒரு தையற்காரன் உருவாக்குகிறான். எங்கள் நாட்டில் உயர்பண்புகள் உருவாகின்றன என்று அமெரிக்காவில் மார் தட்டி நின்றார் சுவாமி விவேகானந்தர்! அந்த வசனங்களிற்கு உரியவர்களான நாங்களா இப்படி......! சிந்தியுங்கள். கிணற்றுத் தவளையாக இருக்க வேண்டாம்! அறிவு விருத்தியில் மட்டுமே குவிக்கப்பட்டுள்ள எமது பார்வையின் எல்லைகளை, எல்லையில்லாத பண்பின் விருத்திக்கு அகல வைப்போம்! இதற்காக அமையப் பெற்ற புத்தகங்களும், சமய நிறுவனங்களும், எம்மிடையே வாழ்ந்து மறைந்தும், மறையாது வாழ்ந்து கொண்டிருக்கும் அரிய பெரியவர்களது வாழ்க்கையும் எமது நோக்கிற்குத் தெளிவாகும். இவற்றைப் பின்பற்றி வெறும் கல்விமான்களாக மட்டும் அல்லாமல், பண்புள்ள படித்தவர்களாக வீரத்துறவியின் பண்பனைய மொழிக்குரியவர்களாகவும் மாறுவோம்! இல்லை.... இல்லை........இன்றே மாறத் தொடங்கிவிட்டோம்.

'சாது சரண்'
விஞ்ஞான பீடம்

---

***முக்தி வழங்கும் கோயில்கள்*** *- சமய குரவரால் பாடப்பெற்றவை*

*திருவாரூர் - இங்கு பிறந்தால் முக்தி கிடைக்கும்*


*காசி - இங்கு இறந்தால் முக்தி கிடைக்கும்*

*சிதம்பரம் - இத் தலத்திற்கு வந்து இறைவணக்கம் செய்தால் முக்கி கிடைக்கும்*

*திருவண்ணாமலை - இத் தலத்தைப் பற்றி சிந்தனையே முக்தி கொடுக்கும்*

**AgasthiyamPalli**

This temple lies 2 kms to the south of vedaranyam. Sung by sambandar , here shiva has shown his marriage pose to agasthiya munivar



**விஷ்ணு சிவனை வழிபட்ட தலங்கள்**

திருவீழிமிழலை

சீர்காழி

இராமேஸ்வரம்

# புராதன இலங்கையின் இந்து மதம் பற்றிய வரலாற்று மூலங்கள்

தென்னிந்தியாவில் ஆதித்த நல்லூர், திருநெல்வேலி முதலிய இடங்களில் நிகழ்ந்தது போல இலங்கையிலும் பொற்பரிப்பு என்று அழைக்கப்பட்ட தென்னங்கரையோரம், வளவகங்கை பள்ளத்தாக்கு, கதிரைவெளி என்று கூறப்படும் கீழ்க்கரையோரம், வரணி எனப்படும் வட கரையோரம் ஆகிய இடங்களில் புதைபொருள்களாய் கிடந்த ஈயத்தாழிகள், வேற்செதில்கள், சேவற் சிலைகள் என்பன கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன்பு பெரும் பண்பாட்டிற்கும் முருக வழிபாட்டிற்கும் ஆதாரங்களாய் உள்ளன என்பது ஆய்வாளர்களின் முடிவு வான்மீகி இராமாயணத்தில் வரும் இலங்கை எமது இலங்கையே என்பதும், இலங்கை மன்னனான இராவணன் சிவ வழிபாட்டினன் என்பதும் பலரும் ஏற்றுக் கொண்ட உண்மை ஆகும். இவற்றின் மூலம் மிகப் பழைய காலத்திலேயே இலங்கையில் இந்து மதம் நிலவியது என்பது உண்மையாகும். கி.மு. 3ம் ஆண்டினதாக கொள்ளப்படும் கல்வெட்டு ஒன்று "வலு எல்லு கொட தந்த" என்னுமிடத்தில் கிடைத்து உள்ளது. பிராமி எழுத்தில் அமைந்த இக் கல்வெட்டில் சிவ கூடம், சிவம் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. மற்றும் இலங்கையின் நிலையம், அமைப்பு, புவியியல் தன்மை, தொல்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கினால் தென்னிந்தியாவில் செல்வாக்கோடு நிலவிய பெருங்கற்பண்பாடு சம காலத்தில் இலங்கையிலம் நிலவியிருக்கலாம் என்ற முடிவைத் தருவதாகவுள்ளது. கந்தரோடை, மாதோட்டம், மாமடுவ, ரம்பாவேவ, பொம்பரிப்பு, திசைமாறகம ஆகிய இடங்களில் தொல்வியல் சான்றுகள் காணப்படுகின்றன. இப் பெருங்கற்காலப் பண்பாடு தமிழ்நாட்டில் நிலவிய பண்பாடு மட்டுமல்ல பௌத்தம் இலங்கைக்கு வர முன்னர் இலங்கையின் சமுதாய வளர்ச்சியில் முக்கியம் பெற்றிருந்த ஒரு பண்பாடாகவும் விளங்குகிறது.

கி.பி. 470 இல் மாகாவம்ச எனும் பாளி மொழியில் அமைந்த இலங்கையின் ஆதி மன்னர்களின் வரலாறு கூறும் நூலிலே இலங்கையின் முதல் சிங்கள மன்னனதும் கி.பி. 5ம் நூற்றாண்டிலுமான விஜயன் இந்து சமயத்தினன் என்று கருதப்படுகிறது. அத்துடன் சமூக, அரசியல் துறைகளிலும் பிராமணர்கள் செல்வாக்குடையவர்களாக விளங்கினர். விஜயனுடன் இலங்கைக்கு வந்த உபதிஸ்ஸ எனும் பிராமணன் அனுராதபுரத்துக்கு வடக்கே உபதிஸ்ஸகாம என்ற கிராமத்தை அமைத்தான் எனக் கருதப்படுகிறது. பண்டுகாபயனின் தாய் அரச நடவடிக்கைகளில் பயிற்சி பெறுவதற்காக தனது மகனை பண்டுல எனப் பெயர் பெற்ற பிராமணனிடம் ஒப்படைத்தார். பண்டுல என்ற பிராமணனின் மகன் சந்திர என்பவன் ஒரு புரோகிதனுக்கான கடமைகளை மேற்கொண்டதோடு ஓர் இராணுவ தளபதியாகவிருந்து பண்டுகாபயனுக்கு சேவை செய்தான். தீசன்தன் என்ற சமகால ஆட்சியாளனுக்கு பரிசுப் பொருட்கள் அனுப்பும் போது புரோகிதனும் உடன் சென்றான் என அறியப்படுகிறது.பண்டுகாபயன் பிராமணர் கிரியைகள் செய்வதற்கெனச் "சிவிகசால", "சோதிசால" என்ற கட்டடங்களை நிர்மாணித்தான். மன்னர்கள் தமது பெயருடன் சிவ என்ற அடைமொழியை இணைத்து கிரிகண்ட சிவ, மூத்த விவ, மகாசிவ, சிவன், என்ற பெயர்களை மகாவம்சத்தில் காணக்கூடியதாக உள்ளது. மற்றும் இலங்கையில் இந்து சமயம் நிலவியதை தட்ஷணகைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை முதலிய நூல்களும் கூறுகின்றன. இவை இந்து சமயம் சிறப்பாக சைவ சமயம் இலங்கையில் நிலவியமைக்கு சிறப்பான எடுத்துக் காட்டாகும்.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர்கள் கி.மு.4ம் நூற்றாண்டில் இருந்து பௌத்த சாமிகளாக மாறினர். எனினும் சிலர் இந்து சமயத்தை ஆதரித்தவர்களாகவே விளங்கினர். இவர்கள் ஆட்சி செய்த காலத்தை அனுராதபுர காலம் என வரலாற்று ஆசிரியர்கள் வகுத்துள்ளனர். இந்து வழிபாட்டில் முருக வழிபாடு வரலாற்றுத்தொடக்க காலத்திலேயே நிலவியமைக்கு ஆதாரங்கள் உள்ளன. இவை கல்வெட்டுக்களில் காணப்படும் முருக வேலைக்குறிக்கும் வேலு, வேலுச என்ற சிறப்புப் பெயர்களாகும். மேலும் கதிர்காமம் கி.முற்பட்ட காலத்தில் முருக வழிபாட்டோடு தொடர்புடைய இடமென்பதை மரபுவழிக்கதைகள் எடுத்துக் காட்டுகின்றன. கி.மு.101-77 ஆகிய காலத்திலே ஆட்சி புரிந்த துட்டகைமுனு வைதீக சமயத்தை ஆதரித்தவன் என்பதற்கு அவன் நீதி விகாரைக்கு விஜயம் செய்த போது அங்கு அவனோடு புத்த குருமார்கள் மட்டுமன்றி பிராமணர் ஆயிரத்து ஐநூற்றுவர் வரை சென்றார்கள் என்று அங்குள்ள பனையோலையில் எழுதி பேணப்பட்டு வரும் ஏடுகள் மூலம் அறிய வருகிறது. சிங்களக் கவிதை ஏடாகிய "கந்த உபத" என்ற நூலிலே துட்டகைமுனு தான் எல்லாளனை வெற்றிகொண்டால் கதிர்காம கந்தனுக்கு நேர்த்திக் கடன் நிறைவேற்றுவேன் என்று கூறியதாக கூறப்பட்டுள்ளது. கி.பி. 2ம் நூற்றாண்டு அரசனை கஜபாகு இலங்கைக்கு பத்தினி வழிபாட்டினைக் கொணர்ந்தான் என்று வரலாறு கூறுகிறது.

ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஐந்து ஈச்சரங்கள் காணப்பட்டதாகக் போல் பீரிஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார். இலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயங்களாகிய திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் போன்ற சிவ ஆலயங்களின் வரலாற்றுக் கல்வெட்டு இலக்கிய ஆதாரங்களின்படி பிற்பட்ட காலங்களோடு ஆரம்பமாகினாலும் இதிகாசப் புராண கதை மரபுகள் இவற்றின் வரலாறுகளை மிக முற்பட்ட காலத்தோடு தொடர்புபடுத்துவது அவதானிக்கத்தக்கது. கி.பி. 7ம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கேதீஸ்வரத்தின் மீதும் திருக்கோணேஸ்வரத்தின் மீதும் பதிகங்கள் பாடியுள்ளார். கி.பி. 8ம் நூற்றாண்டினரான சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கேதீஸ்வரத்தின் மீது திருப்பதிகம் பாடியுள்ளார். கி.பி. 6-8ம் நூற்றாண்டுக் கிடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் எனக் கொள்ளப்படும் திருமூலர் திருமந்திரம் நூல் யார்த்தார். இவர் இலங்கையை சிவபூமி என்று பாடியுள்ளார். கி.பி. 11ம் நூற்றாண்டிலே இலங்கையைக்கைப்பற்றி தமது நாட்டுடன் இணைத்து இதற்கு முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிட்டு ஏறக்குறைய 60 ஆண்டுகள் இலங்கையை தம்மடிக்கீழ் வைத்திருந்த சோழப் பெருமன்னர்கள் பொலனறுவையை தலைநகராக்கினர். இவர்களின் காலத்திலே சோழரின் கட்டடப் பணியில் அமைந்த சிவாலயங்கள் கட்டப்பட்டன என அறிகின்றோம். இவற்றைக் கட்டிய சோழப்பெரு மன்னனான இராஜேந்திரன் திருக்கேதீஸ்வர திருக்கோயிலை புனருத்தாரணம் செய்தான். என்றும் அவனுடன்வந்த தனிகுமாரன் என்று சேனாதிபதி திருக்கேதீஸ்வரத்திலே சிவாலயம் ஒன்றினை அமைத்தான் என்றும் வரலாற்று செய்திகள் தெரிவிக்கின்றன. திருக்கோணேஸ்வர திருக்கோவிலின் புனருத்தாரணம் குளக்கோட்டன் என்ற பாண்டிய இளவரசனால் மேற்கொள்ளப்பட்டது என்று கல்வெட்டு செய்திகள் அறிவிக்கின்றன. யாழ்ப்பாணத்திலே ஆரியச் சக்கரவர்த்திகள் என தமிழரசர்கள் காலத்திலே இந்துமதம் செழித்தோங்கியது. இவ்வாறு புராதன காலம் தொட்டு ஐரோப்பியர்

காலம் வரை இடையூறுகள் ஏற்படாது இந்து சமயமானது இலங்கையில் நிலவி வந்தமைக்கான அதாரங்கள் பல உள்ளன என்ற உண்மையை நேரில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

கி.பி. 4ம் நூற்றாண்டில் மகாநாம என்ற இளவரசன் கடலை நோக்கிக் கொண்டு கிரியை ஒன்று செய்ததாகச் சூளவம்சத்தில் கூறப்படுகின்றது. இக்கிரியை நடைபெற்ற இடம் கோணேச்சரமாக விருக்கலாம். கி.பி. 5ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த சீன யாத்திரிகரான பாகியான் அக் காலத்து இலங்கை மன்னன் கடமையான பிராமணிய விதிகளின்படி தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டான் என்கின்றார். 7ம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த மானவர்மன் திருக்கோணச்சரத்தில் கிரியைகளில் ஈடுபட்டதாகவும் அக் கிரியைகளில் உருத்திராட்சம் அணிந்திருந்ததாகவும் அப்போது ஸ்கந்தன் மயிலின் மீதேறி அவனுக்கு வரமளித்ததாகவும் சூளவம்சம் கூறுகிறது. இலங்கையின் தென் கரையில் தேவுத் தராவில் வர்ண தேவனுக்கு முதலாம் தம்புல மன்னன் கோயில் அமைத்தான். இது பல்லவப் பாணியில் அமைந்துள்ளது. கி.பி. 8ம் நூற்றாண்டில் இரண்டாம் மகிந்தன் அங்குமிங்குமாக அழிந்துகடந்த தேவாயங்களைப் புனருத்தாரணஞ் செய்து அவற்றுக்கு விலையுயர்ந்த விக்கிரகங்களைச் செய்வித்துப் பிராமணர்களுக்கு மன்னர்கள் உண்பது போல இனிய உணவும் கொடுத்துப் பாலுங் கொடுத்தானெனச் சூளவம்சம் கூறுகின்றது. இதே காலத்தில் 2ம் காசியப்பன் சாதாரண மக்கள், பிக்குகள், பிராமணர்கள் ஆகியோருக்கு அவரவர்க்குத் தகுந்த வாழ்க்கையை நடாத்த ஊக்குவித்து உயிர்க்கொலை புரியக் கூடாதெனக் கட்டளையிட்டதாகச் சூளவம்சம் கூறுகிறது.

கி.பி. 9ம் நூற்றாண்டில் 2ம் சேனன் பொன்னாலான ஆயிரம் சட்டிகளில் முத்துக்களை நிரப்பி ஒவ்வொன்றின் மேலும் ஒவ்வொரு விலையுயர்ந்த இரத்தினக்கல்லை வைத்து அவற்றை ஆயிரம் பிராமணர்களுக்கு இரத்தினக்கல் பதித்த பாத்திரங்களில் பாற்சோறும் அத்துடன் பொன்நூலும் தானமாக வழக்கிய பின் கொடுத்தானெனக் கூறப்படுகின்றது. இக் காலத்தில் எழுதப்பட்ட பால இராமாயணம், அனர்க்கராகவ ஆகியன சிவவொளிபாத மலைக்கருகிலிருந்த அகத்தியர் கோயில் பற்றிக் கூறுகின்றது. கதிர்காமப் பகுதியில் ஒரு குற்றத்தை செய்தவர்கள் மகாதீர்த்தத்தில் ஒரு பசுவைக் கொன்று குற்றத்தைச் செய்வதற்குச் சமமெனக் கூறப்படுகின்றது. மாதோட்டம் அக்காலப்பகுதியில் புனித இடமாகக் கருதப்பட்டமைக்கு இக்கூற்று சான்றாகும்.

சோழர் இலங்கையைக் கைப்பற்றிப்பொலனறுவையைத் தலைநகராக்கி அதற்கு ஜனநாதமங்கலம் எனப் பெயரிட்டனர். சோழராட்சியின் போது கந்தளாய், பதவியா, திருகோணமலை, மாதோட்டம் போன்று துறைமுகப் பிரதேசங்களும் முக்கியம் பெற்று விளங்கின. இவற்றைவிட நாட்டின் பல பாகங்களிலும் சைவ, வைணவ கோயில்களும், சதுர்வேதி மங்கலங்கள் எனும் பிராமணக் குடியிருப்புக்களும் அமைக்கப்பட்டன. இங்கு கண்டு எடுக்கப்பட்ட அழிபாடுகளில் பந்து சிவன் கோயில்கள், ஐந்து விஷ்ணு கோயில்கள், ஒரு காளி கோயில் என்பவை முக்கியமானவை. இவற்றுட் பல சோழர் காலத்தவை. இதிலிருந்து பொலனறுவையில் குறிப்பிட்ட தொகை இந்துக்கள் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது. இரண்டாம் சிவதேவாலயம் முழுக்க முழுக்கச் சோழர் பாணியிலேயே அமைந்தது. இது வானவன் மாதேவி ஈச்சரமெனவும் அழைக்கப்படும். பதவியாவில் இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் எனும் பெயரில் சோழர்கள் ஆலயமைந்தனர். மாதோட்டத்தில் ராஜராஜேஸ்வரம், திருவீராமீஸ்வரம், அத்தர்கடையில் உத்தம சோழீஸ்வரம் மதிரிகிரியாவில் பண்டிரு சோழ ஈஸ்வரம், மாகல எனுமிடத்தில் விக்கிரம சலாமேகா ஈஸ்வரம் போன்ற ஆலயங்கள் சோழர்களால் கட்டி எழுப்பப்பட்டவை இங்கு கண்டெடுக்கப்பட்ட இந்து விக்கிரங்கள் கல்லினாலும், வெண்கலத்தினாலும் செய்யப்பட்டவை. இவை சதுர்வேதி மங்கலம் எனப்பட்டது. கந்தளாயில் ராஜராஜசதுர்வேதி மங்கலம், மகதிரிந்தேகம எனுமிடத்தில் ஐயங்கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலம்

போன்றவை அமைக்கப்பட்டவை. இதன் விளைவாக அடுத்து வரும் நூற்றாண்டுகளில் பிராமணர் செல்வாக்கு அதிகரித்தது.

கோட்டையை ஆண்ட 6ம் பராக்கிரமபாகு காலத்தில் ஜயவர்த்தனபுர என்னும் கோட்டைத் தலைநகரின் வெளியே ஒரு அழகிய ஈஸ்வரன் ஆலயம் இருந்தது. அங்கு வாத்தியங்கள் இசைக்கத் தமிழ்மொழியில் தேவாரங்கள் பாடப்பட்டதாகச் "சலலிகினி சந்தேஸ" எனும் தூது நூல் கூறுகின்றது. தென் மாகாணத்தில் அக்காலத்தில் தெவிநு வரவிற்கும் பெருந்தோட்டைக்குமிடையில் நாகர்கோயில், கணேசர் கோயில், காளிகோயில் ஆகிய இந்துக் கோயில்கள் இருந்ததாக சிங்கள கல்வெட்டுக்கள் கூறுகின்றன. 16ம் நூற்றாண்டில் உச்ச நிலையை அடைந்திருந்த சைவசமயம் போத்துக்கேயரைக் கடுமையாக எதிர்த்துப் போராடிய சீதாவக்கையின் மன்னன் 1ம் இராஜசிங்கன் பௌத்தத்தை விட்டு சைவத்தை தழுவினான். விஜயநகரப் பேரரசர் பாணியில் கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

போர்த்துக்கேயர் முதலிய ஐரோப்பிய இனத்தவர்களினால் இந்து சமயம் பாதிப்பிற்கு உள்ளானது. புராதன இந்து தலங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இந்துக்கள் ஆங்கிலக் கல்வி, உத்தியோக வாய்ப்பு போன்றவற்றால் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டனர். இந்நிலையில் சைவத்தையும், தமிழையும் வளர்க்கப் பாடுபட்டவர் ஆறுமுக நாவலராவர். இவர் இவற்றை வளர்க்க விடிவெள்ளி போல அவதரித்தார். நாவலர் கண்டனப் பிரசாரங்கள், உரை நடை நூல்கள், சைவப் போதினி, பாலபாடம் போன்ற ஏராளமான நூல்களை வெளியிட்டார். இக்கல்வி மூலம் சைவப் பாடசாலைகளை உருவாக்கினார். புராணபடலம் மூலம் கந்தபுராணக் கலாசாரத்தை வளர்க்க அரும் பாடுபட்டார். சிவாலயங்களின் புனருத்தாரணத்துக்கான விஞ்ஞாபனம் விடுத்தார். தமக்கென ஓர் மாணவ பரம்பரையை உருவாக்கி விட்டே இறைவனடி சேர்ந்தார்.

அனுராதபுர காலப் பௌத்தத்துக்கு முன்னர் இலங்கையில் இந்துமத நிலை பொலனறுவைக் காலம், ஐரோப்பியர் காலம் ஆகிய காலவடிப்படையிலே இந்து மதத்தின் நிலை, ஆதி கால இலங்கையின் இந்து மதத்தின் நிலை பற்றி நோக்கினோம். அதன்படி இலங்கையில் இந்து மதம் ஆதி காலத்தில் இருந்து இன்று வரை செழிப்புற்று வளர்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

பிருந்தா பத்மநாதன்
1ம் ஆண்டு வர்த்தகப் பிரிவு
முகாமைத்துவ நிதிப் பீடம்

*With Best Compliments*

*from*

**Happy Corner**

**Dealers in:**
Imitation Jewellery, toys,
Fancy Goods,
Icing, Facial Gift Items,
Cap Items
School Bags, Bata,
Shoe pair Etc.

No. 182, Bazaar Street, Vavuniya.
Tel: 024 - 21696

# உயிரையும் தருவர்

சின்னக்குழந்தை ஒன்று கையில் ஒரு மிட்டாயை வைத்துச் சுவைத்துக் கொண்டு நிற்கின்றது. மிட்டாய் வாங்கித் தின்னக் கூடிய சக்தி அற்ற அடுத்த வீட்டுக் குழந்தை ஒன்று இக் குழந்தையைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே நிற்கின்றது. இவ்வாறு மற்றக் குழந்தைகள் தம்மைக் காண்பதைக் கண்டவுடன், சில குழந்தைகள், பழிப்புக் காட்டிவிட்டு வீட்டினுள்ளே ஓடி மறைந்துவிடும். ஆனால், ஒரு சில குழந்தைகள் இவ்வியல்புக்கு முற்றிலும் மாறாக நடந்து கொள்வதையும் காண முடியும்.

பரிதாபத்தோடு தன்னைப் பார்க்கும் குழந்தையை, மிட்டாய் தின்னும் குழந்தை மிக்க பரிவோடு கவனிக்கின்றது, தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்பதைச் சுற்றும் முற்றும் ஒரு முறை கவனிக்கின்றது. உடனே அக்குழந்தையும் அஞ்சிக் கொண்டே வருகின்றது. உடனே தான் தின்று கொண்டிருக்கும் எச்சில் மிட்டாயில் பாதியைக் கடித்துக் கொடுத்து ஓடிப் போகுமாறு கூறுகிறது, தின்று கொண்டிருக்கும் குழந்தை!

தின்ற எச்சில் மிட்டாயில் பாதியைக் கடித்துக் கொடுப்பது ஒரு பெரிய காரியமா என்று கூடச் சிலர் நினைக்கலாம். உண்மையை ஆராயுமிடத்து, இச்செயல் மிகப் பெரிய காரியம் என்றே கூற வேண்டும். கை நிரம்ப மிட்டாய் இருப்பினுங் கூடக் "கொடுப்பது" என்பது ஒரு சிலருக்கே உரியது. அதிலும் ஒரே ஒரு மிட்டாய். அதுவும் தின்று கொண்டிருக்கும் நிலையில் உள்ள ஒரு மிட்டாயைக் கொடுக்க வேண்டுமானால் அது அனைவரும் செய்யக்கூடிய ஒரு செயல் அன்று. இதனை ஒரு தனிப்பட்ட மன நிலை என்றே கூறவேண்டும்."விளையும் பயிர்ரை முளையிலே தெரியும்" என்பது பழமொழி. பிற்காலத்தில் எதனையும் வழங்கக்கூடிய இயல்புடையவர்களாக இருப்பவர்கள் இளமைக் காலத்திலும் இதே மனநிலையைப் பெற்றிருப்பார்கள்.

இவ்வாறு கூற மற்றொரு காரணமும் உண்டு. கொடுக்கும் இயல்பு என்பது பிறப்பிலேயே அமைய வேண்டுமே தவிர, பழகிக் கொண்டால் வரக்கூடிய ஒன்றன்று. ஆதலாலே தான், தான் தின்று கொண்டிருக்கும் மிட்டாயைப் பகிர்ந்து அளிக்கும் குழந்தையைப் போற்றுகின்றோம்.

"அன்பு" என்ற மூன்று எழுத்துக்களாலான ஒரு சொல் உலகத்தையே ஆட்டிப் படைக்கின்றது என்று கூறினாலும் தவறு இல்லை. நான் தின்று கொண்டிருக்கும் மிட்டாயைப் பகிர்ந்து கொடுக்கும் குழந்தை இந்த மூன்றெழுத்துப் பொருளை மிகுதியாகக் கொண்டுள்ளது. அன்பென்பது இயல்பாகவே பிறப்பில் வரவேண்டிய ஒன்று.

அன்பு என்பது யாது? அது ஒரு வகை மன உணர்ச்சியே ஆகும். தன்னை அல்லாத பிற உயிர்களிடம் ஏற்படும் பிரிவு, கருணை என்பனவற்றையே அன்பு என்று கூறுகிறோம். ஏனைய உணர்ச்சிகளைத் தாங்கியுள்ள மனத்தில், அன்பு உணர்ச்சி நிரம்பும் பொழுது தான் மனிதன் மகாத்மா ஆகிறான். உலகில் பிறக்கும் எந்த உயிரும் வளர வேண்டுமானால், அன்பு என்ற ஒன்று தேவைப்படும்.

தாய் குழந்தையிடம் காட்டுவதும், விலங்குகள் தம் குட்டிகளிடம் காட்டுவதுமாகிய இவ்வன்பாலே தான் உலகம் வாழ்கிறது என்று கூறினால் இதில் வியப்பு ஒன்றுமே இல்லை. ஏனைய பண்புகள் எத்தனை நிரம்பி இருப்பினும் ஒருவன் மனிதன் என்று வழங்கப்பட வேண்டுமானால் "அன்பு" உடையவனாக இருத்தல் வேண்டும். விலங்கு, மனிதன், தெய்வம் என்று மூன்று நிலையில் உள்ளவர்களையும் இணைப்பது இது ஒன்று தான்.

மனிதன் தன்னைப் போன்ற உயிர்களிடத்தும், இறைவனிடத்தும் காட்ட வேண்டிய இந்த அன்பு வெளிப்படும் பொழுது எவ்வாறு இதனை அறிந்து கொள்வது? உள்ளத்துள் தோன்றும் அன்பை அடைக்க முடியாது என்றும்,அதனைப் பிறர் எளிதாக அறிந்து கொள்ள முடியும் என்று குறள் கூறுகின்றது. அன்புடையார் கண்களே மிகச் சிறந்த அறிவிக்கும் கருவிகளாகும். உள்ளத்தினுள்ளே இருக்கும் அன்பை வெளிக்காட்டக் கண்ணீர் பயன்படுகின்றதாம். எல்லையற்ற அன்பைப் பல சொற்களால் கூறுவதைக் காட்டிலும் இரண்டு சொட்டுக் கண்ணீரின் மூலம் நன்கு சொல்லிவிடலாம். இறைவன் கூட இந்தக் கண்ணீருக்கு ஆசைப்படுகிறான் என்று பழைய பாடல் ஒன்று கூறுகின்றது.

'அளவு மிகுந்த புண்ணிய நதிகளிலிருந்து கொண்டு வரப்படும் தண்ணீர், ஏழு கடல்களிலிருந்து வரும் தீர்தம் ஆகியவற்றில் மூழ்குவதைக் காட்டிலும், அன்பர்களுடைய கண்ணிலிருந்து வரும் கண்ணீரிலேயே நீராட விரும்புகிறாளாம் அம்பிகை என்ற கருத்தைப் "பாசவதைப் பரணி" என்ற நூல் "என் பாவம் பாலம் ஆறுகடல் ஏழியிலிருந்து என் அம்மை அன்பாளர் கண்ணருவி ஆடுவது திருவுள்ளம்" என்று பாடிச் செல்கிறது.

இவ்வளவு மானிட உயிர்களுக்கும் பெருந் தேவையாக உள்ள அன்பு ஒரு சிலரிடம் மிகுதியாக இருந்து அவர்களைச் செயற்கருஞ் செயல் செய்யும் மகாத்மாக்களாகச் செய்கிறது. இன்னும் சிலரிடம் இருக்க வேண்டிய அளவு இருந்து, மனித இயல்புடையவர்களாகச் செய்கிறது. ஒரு சிலரிடத்தில் இருக்க வேண்டிய அளவில் குறைந்து அவர்களை விலங்கு நிலையிலும் கீழான நிலையினை அடையச் செய்துவிடுகின்றது.

தமிழ் நாட்டில் திருக்குறள் என்னும் ஒப்பற்ற நூல் தோன்றுவதற்குப் பல காலம் முன்பே சிபிச் சக்கரவர்த்தி என்ற ஒரு சோழ மன்னன் இந் நாட்டை ஆட்சி செய்து வந்தான். அரசனுக்கு வேண்டிய எல்லா நலன்களும் தகுதிகளும் நிறைந்திருந்த அவன், இங்கு கூறப்பெற்ற "அன்பு" என்ற பொருளை எல்லை மீறிப் பெற்றிருந்தான். அவனுடைய அன்பின் விரிவில் மக்களும் விலங்குகளுக்கூட ஒன்றாகவே காட்சி அளித்தனர். உண்மை அன்பு சுரக்குமானால், அன்பு காட்டப்படும் பொருள்களிடம் வேற்றுமை பாராட்ட முடியாதல்லவா?

இறைவனிடம் விரிகின்ற அன்பால், இறைவனுடைய படைப்புக்களைக் காணும் பொழுது சகோதர உணர்ச்சி இயல்பாகவே உண்டாகுமல்லவா? சிபி ஒரு நாள் அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அவன் காலடியில் மிகுந்த அச்சத்துடன் ஒரு புறா வந்து வீழ்ந்தது. அப்புறாவைக் கையில் எடுத்து அதன் அச்தததைப் போக்க முயன்றான் சிபி.

அதே நேரத்தில் பருந்து ஒன்று அவனிடம் கோபத்துடன் பறந்து வந்து, தன் உணவாகிய புறாவை அவன் விட்டு விட வேண்டும் என்று வழக்காடியது. சிபியின் விரிந்த அன்புக்கு முன்னர் உயிருக்கு மன்றாடும் புறாவின் நடுங்கிய உடலும், பசியால் வருந்திய பருந்தின் உடலும் காட்சியளித்தன. வேறு உணவைத் தந்து பருந்தின் பசியை போக்க முயன்றாலும் பருந்து ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. இறுதியாகத் தன் உடம்பில் உள்ள தசையில் புறாவின் எடைக்குச் சமனான அளவு தசையை அரிந்து தருவதாக ஏற்றுக் கொண்டான். சிபி தராசை நாட்டுப் புறாவை ஒரு தட்டில் வைத்து, மற்றொரு தட்டில் கொஞ்சம் கொஞ்சமாக தன் உடம்பின் தசைப் பகுதியை அரிந்து அரிந்துவைத்தான்! என்ன அதிசயம்! தட்டு நேர்படவே இல்லை! இறுதியாகத் தானே அத் தட்டில் ஏறிவிட்டான். கருணை வள்ளலாகிய சிபி ஏறியவுடன் அத்தட்டும் புறாவைத் தாங்கும் தட்டும் நேர் நின்றன.

கேவலம் ஒரு புறாவின் எடை தன்னுடைய எடையின் அளவுக்குச் சமமாக இருக்க முடியுமா என்ற பகுத்தறிவு ஆராய்ச்சியில் சிபி நுழையவில்லை. அங்ஙனம் நுழைந்திருப்பானேயால் இன்று அவனை முதலாகக் கொண்ட ஒரு திருக்குறள் தோன்றப் போவதில்லை. அன்பு உடையவர்கள் பல சமயங்களில் பிறர் அறிந்து கொள்ள முடிவதில்லை. மகன் எவ்வளவு வலிமை உடையவனாயினும், பெரிய பயில்வானாயிருப்பினும், தாய் அவனுடைய வன்மையையும், சக்தியையும் அறிந்து கொள்வதே இல்லை. காரணம் அவள் அணிந்திருக்கின்ற அன்புக் கண்ணாடியில் மகனுடைய உண்மைச் சக்தி விளங்குவதேயில்லை. அதே போலப் புறாவின் துடிப்பையும், பருந்தின் பசியையும்காண்கின்ற சிபியின் அன்புக் கண்களில் புறாவின் எடை பற்றிய கவலை தோன்றவேயில்லை. அதனாலே தான் தராசில் தானே ஏறிவிட்டான் "தன் அகம் புகக குருநடைப் புறாவின் தபுதி அஞ்சிச் சீரை புக்கோன்" என்று புறநானூறும் "புறவு ஒன்றின் பொருட்டாகத் துலை புக்க பெரியோன்" என்று இராமனும் என் அறு சிறப்பின் இமையவர் வியப்பப் புள்ளுறு புன்கண் தீர்த்தோன்" என்று கண்ணகியும் போற்றும் சிறப்பைப் பெற்றான் சிபி.

குறள் கண்ட வாழ்வைச் சிபி வாழ்ந்தான் என்று கூறுவது பொருத்தமற்றது. சிபி வாழ்ந்த ஒப்பற்ற வாழ்வைக் கண்ட குறள், அவ்வாழ்வின் அடிப்படைய உலகம் முழுகுவதும் அறிந்துகொண்டால் பெரும் பயன் கிடைக்கும் என்று கருதி அவ்வாழ்வையே ஒரு குறளில் சாறாகப் பிழிந்து தந்தது.

"அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்பு உடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற குறள் அன்புடைப் பெரியவர்கள் பிறருக்கு உயிரையும் வழங்கும் இயல்பை எடுத்துக் காட்டுகிறது. இன்றும் உலகில் இத்தகைய பெரியவர்கள் இல்லாமல் இல்லை.


சசிகலா கணேசமூர்த்தி
1ம் வருடம் முகாமைத்துவப் பிரிவு

**Maclapperumballam**



Sung by all 3 saints , here vishnu got his chakrayudham after worshipping lord shiva.

**Uraiyur**



Uraiyur , one among the 5 chozha capitals is now an integral part of Trichy corporation.This temple is maintained well with inscriptions from naicker rulers.

# திரைப்படத்துறையில் கணனித் தொழில்நுட்பம்

இருபதாம் நூற்றாண்டு முடிவடைந்து இன்று இருபத்தியோராம் நூற்றாண்டில் மனிதன் காலடி எடுத்து வைத்திருக்கின்றான். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கணனி இன்று மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக வலுவடைந்து வருகின்றது. எங்கு சென்றாலும் 'கணனி' என்ற சொல்லே காதில் விழுகின்றது. எல்லாம் சிவமயம் என்ற நிலை இங்கு கணனி மயமாகக் காட்சியளிக்கின்றது. விஞ்ஞானம், விவசாயம்,கைத்தொழில் என ஒவ்வொரு துறையாக ஊடுருவிய கணனிமயம், பொழுது போக்குத்துறையையும் விட்டு வைக்கவில்லை. அதிலும் குறிப்பாகத் திரைப்படத்துறையில் இன்று கணனி ஆற்றிவரும் பங்கு சொல்லில் வடிக்க முடியாதது.

'காட்டூன்' எனப்படும் நகரும் சித்திரம் முதற்கொண்டு, திரைப்படத்துறையில் சினிமா வரை இது பெருமளவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக கணனிமுறை கிராபிக்ஸ் விம்ப உருவாக்கம் என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

தொழில்நுட்பம் வளராத காலப்பகுதியில் காட்டூன் படங்களை எடுப்பதென்பது இலகுவானதொரு வேலையாக இருக்கவில்லை. வரிசையாக ஒட்டிய படங்களைச் செக்கனுக்கு இருபத்து நான்கு என்ற வீதத்தில் நகர்த்துகின்ற போது, எமது கண்களின் பார்வையில் அது ஒரு தொடர்ச்சியான அசைவை ஏற்படுத்துவதற்குத் தேவையான "குறை மீடிறன் எல்லை" யை மீறுவதால் எமக்கு அது அசையும் படத்தினைத்தரும். நிச்சயமாக இந் நிகழ்வானது எமது கண்களை ஏமாற்றும் ஒரு வித்தையென்றால் அது மிகையாகாது.

உதாரணத்திற்கு ஒரு சிங்கம் நடப்பது போல் சுமார் ஒரு நிமிடத்திற்குள் வரும் காட்சியை மட்டும் படமாக்க, நிற்கும் சிங்கத்தின் உருவத்தில் தொடங்கி அடியெடுத்து முன்னேறிப் போவது போல சுமார் ஆயிரத்து ஐந்நூறு தொடர்ச்சியான படங்களை வரைவதன் மூலமே இது சாத்தியப்படும்.

உலகப்புகழ்பெற்ற காட்டூன் வரைஞர் வால்ட்டிஸ்னி தனது அசாத்தியப்பொறுமை, படம் வரையும்திறமை, ஒரு பழைய ஒளியியற் கருவி என்பவற்றினை மூலதனமாகக்கொண்டு இவ்வகையான படங்களை எடுத்தார். இவரது அயராத உழைப்பினால் உருவானது தான் 'செல் அனிமேசன்' என்ற புதிய தொழினுட்பமாகும். இவரின் இக் கண்டுபிடிப்பால் கைவலிக்கத் தொடர்ச்சியான படங்களை வரைய வேண்டிய தேவை இல்லாமற் போனது. தொடர்ந்து வந்த இலத்திரனியல், தொழினுட்ப புரட்சியால் கணனிகளின் துணையுடன் இச்சித்திரங்களானவை மிகவும் அழகாகவும், துல்லியமாகவும், மிக விரைவாகவும் தயாரிக்கக் கூடிய ஒரு நிலைமை உருவானது.

இதற்குக் கணனியில் படத்தை வரைந்து, அதற்கு நிறந்தீட்டி ஏற்கனவே அதே கணனியில் பதிந்து வைத்திருந்த பின்னணியோடு இப்படமானது இணைக்கப்பட்டுப் படச் சட்டகத்தில் சேர்க்கப்படும். பின் இப் படச் சட்டத்தில் சிறிது சிறிதாக மாற்றங்களைச் செய்து அடுத்தடுத்த படச் சட்டகங்களை இவ்வாறு உருவாக்கி சீரான வேகத்தில் இவை அனைத்தும் படமாக்கப்படும்.

வால்ட்டிஸ்னி ஒரு மாதமாக கைவலிக்க வரைந்த சித்திரங்களானவை இவ்வாறு ஒரு மணி நேரத்தினுள் கணனிகளால் வடிவமைக்கப்பட்டு காட்டூன் சித்திரங்களானது. இதன் மூலம் கதாபாத்திரங்கள் படைக்கப்பட்டு பிரசித்தி பெற்ற பல கதைகளும் உருவாக்கப்பட்டன. இதில் நகைச்சுவையுணர்வுடன் கூடிய வொடிவூட் பெக்கர் என்ற மரங் கொத்திப் பறவையைப் பாத்திரமாக வைத்து உருவாக்கப்பட்ட தொடர் சித்திரம் பலராலும் விரும்பிப் பார்க்கப்பட்டமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

அடுத்து இன்று எமது மக்கள் மத்தியில் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தி வரும் தென்னிந்தியத் திரைப்படங்களில் கணனிகளின் செல்வாக்கைப் பற்றிப் பார்ப்போம். அனேகமாக இன்று வெளியாகும் அனைத்துத் திரைப்படங்களிலும் கிரபிக்ஸ் முறையானது பயன்படுத்தப்பட்டாலும்

கூட சில படங்கள் கிரபிக்கை மையமாக வைத்தே வெளியிடப்படுகின்றன. மேலும் சில திரைப்படங்கள் கிரபிக்ஸ் காட்சிகளை வைத்து தயாரிக்கப்பட்டதென தயாரிப்பாளர்களால் பெருமளவில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

'லிற்றில் ஜோன்', 'பாப்பா' போன்ற திரைப்படங்களும், படையப்பா, காதலன், ஜீன்ஸ் போன்ற திரைப்படங்களில் பாடல் காட்சிகளும் இவற்றிற்கு நல்லுதாரணங்களாக விளங்குகின்றன. கிராபிக்ஸ் நுட்பமானது 'அபூர்வ சகோதரர்கள்' திரைக்காக திரு.வெங்கி சாம்பவமூர்த்தியால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் 'ஜீன்ஸ்' திரைப்படத்தில் கண்ணோடு காண்பதெல்லாம்........ "காதலன்" திரைப்படத்தில் "முக்கால முக்காப்புலா" போன்ற பாடற்காட்சிகளின் போது அவரால் வடிவமைக்கப்பட்ட கிரபிக்ஸ் நுட்பத்தின் பின்பே ஓரளவு சூடு பிடிக்கத் தொடங்கியது எனலாம்.

"கண்ணோடு காண்பதெல்லாம்" பாடற்காட்சியில் கதாநாயகியின் நாட்டியத்தை அப்படியே ஒரு எலும்புக் கூட்டிற்கு வழங்கி அவ்வெலும்புக் கூடானது ஆடுவது இங்கு படமாக்கப்பட்டது. இதன்போது நடனமாடுபவரின் அசையும் பகுதிகளிற்கு காந்தசக்தி விளக்குகள் பொருத்தப்பட்டு இந்தச் சிறிய விளக்கினை கணனிச் சட்டகங்களின் கணிப்பானாக எடுத்து நடனமாடுபவரின் அசைவுகள் கணனியில் பதிவு செய்யப்பட்டன. இவ்வசைவுகளானது பின்னர் எலும்புக் கூட்டிற்கு வழங்கப்பட்டு அது படமாக்கப்பட்டது.

இவற்றை விட 'காதலர் தினம்' என்ற திரைப்படத்தில் சிறு குழந்தையின் நடனம், "ஓ மரியா........" என்ற பாடற் காட்சிக்காகக் கணனி முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்தோடு 'முகவரி' என்ற திரைப்படத்தில் "ஆண்டே நூற்றாண்டே" என்ற பாடற் காட்சியில் பல அழகிய காட்சிகள் புது நூற்றாண்டை வரவேற்பது போல் உருவாக்கப்பட்டிருந்தன. இப் பாடற்காட்சியானது முற்று முழுதாக "கிரபிக்ஸ்" தொழினுட்பமூலம் பின்னணிகளைக் கொண்டமைக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவற்றை விட திரைப்படத்துறையில் விம்ப உருவாக்கல் முறையும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக மோபிங், வோபிங் (Morphing Warphing) என்ற உருமாற்ற முறைகள்





பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம்முறைகளின் மூலம் ஒரு சிம்பன்சி குரங்கினை உலக அழகியாகவும், ஒரு உலக அழகியை சிம்பன்சி குரங்காகவும் மாற்றுவது சாத்தியமாகின்றது. இது எவ்வாறெனில், முதலில் சிங்கம், அழகி இருவரது புகைப் படங்களையும் கணனியில் பதிவு செய்ய வேண்டும். குரங்கின் படத்தில் மூக்கு, கண், வாய் போன்ற இடங்களைக் குறித்துக் கொண்டு அழகியின் படத்திலும் அப்படியே குறிக்க வேண்டும். பின் குரங்கின் மூக்கு அழகியின் மூக்கிற்கு நகர வேண்டும். அதுபோல் மற்றைய பாகங்களும் இவ்வாறு நகருமாறு கணனியில் பதிவு செய்யப்பட்டு இவ்வுருமாற்றம் இடம்பெறுகின்றது.



'படையப்பா' என்ற திரைப்படத்தில் 'சிங்க நடை போட்டு' என்ற பாடற்காட்சியில் கதாநாயகனின் முகத்தை அப்படியே சிங்க முகமாக

மாற்றியமை இதற்கு ஒரு உதாரணமாகும். அத்தோடு மட்டுமல்லாது சண்டைக் காட்சிகள் பயணக் காட்சிகள் போன்றவற்றிலும் கூட கணனிகளின் உபயோகம் இருந்து வருகின்றன.

ஆரம்ப காலங்களில் சண்டைக்காட்சிகளின் போது உயரமான இடத்திலிருந்து குதிக்கின்ற போது கதாநாயகனிற்கு குதிக்குமிடத்தில் பாதுகாப்பு வலைகள் இணைக்கப்பட்ட பின்பே இவை படமாக்கப்பட்டன. எவ்வாறாயினும் இந் நிகழ்வுகள் உயிராபத்துக்களை ஏற்படுத்தவும் தவறவில்லை. ஆனால் இன்று அவ்வாறான நிலையில்லை. இதைவிட கதாநாயகன் ஒரு விமானத்தில் பறப்பதாக – ஏன் ஒரு சாதாரண வாகனத்தில் செல்வதைப் பதிவு செய்வதற்குக் கூட இவை உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

அகல வெள்ளைத் திரையில் புரொஜெக்ரர் கொண்டுஇயற்கைக் காட்சியை பின்புலத்தில் ஓட விட்டு படமாக்கும் இம்முறையானது "பின்னணி உருவாக்கம்" எனப்படும்.

அத்துடன் ஜுராசிக் பாக், அனக்கொண்டா போன்ற ஆங்கில வெற்றித் திரைப்படங்கள் கூட இம்முறைகளை மையமாக வைத்தே தயாரிக்கப்பட்டவையாகும். மேலும்சேவிங் பிரைவேற்றியான் என்ற ஆங்கிலப் படத்தில் ஸ்ரீபன் ஸ்பியெல்பேர்க் என்பவரால் தயாரிக்கப்பட்ட சண்டைக் காட்சிகளும் இங்குகுறிப்பிடத்தக்கவை. சிறிய எண்ணிக்கையினரைக் கொண்டு தயாரிக்கப்பட்ட யுத்தக் காட்சியானது இத் தொழினுட்பத்தால் பெரும் யுத்த களமாக மாற்றப்பட்டிருந்தமை இப் படத்தின் சிறப்பம்சமாகும்.

இவ்வாறாகக் கணனியின் பங்கு இத்துறைகளில் பரந்து காணப்படுகின்றது. ஒரு குறுகிய காலப் பகுதியில் இவ்வளவு மாற்றங்களைக் கணனித்துறையால் சாதிக்க முடிந்ததெனின், இதே தொழினுட்பங்களின் பிரயோகத்தில் கணனியால் வடிவமைக்கப்பட்ட நடிகர், நடிகைகள் மக்கள் மத்தியில் பிரபலமாகப் போகிறார்கள் என்று கூறினால் அது மிகையாகாது.

– விஞ்ஞான பீடம்

## மயானங்கள்

சிவபெருமான் மயானங்களில் வாசம் செய்வதாக கூறப்படும். பின்வரும் கோயில்கள் மயானங்கள் என புராணங்கள் கூறும்.

காஞ்சி மயானம் (காஞ்சிபுரம்)

காழி மயானம் (சீழ்காழி)

வீழி மயானம் (திருவீழிமிழலை)

நாலூர் மயானம் (கும்பகோணம்)

கடவூர் மயானம் (திருக்கடையூர்)



### Thiruchengattangudi

This temple is called Ganapatheecharam. Pallava king , after defeating the Chalukya king , brought the Ganesha idol and installed it here. The idol is called “VATHAPI GANAPATHI”.A beautiful temple.

# இந்து மதம்

இன்றைக்கு ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த மதமாக இந்துமதம் தனிப்பெருமை பெற்றுள்ளது. சிந்துவெளி நாகரிகத்தின் வழிபாட்டு மதமாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டாலும் இம் மதத்தின் தோற்றம் அதனை விட முந்திய கால கட்டத்தை அதாவது மனித சமுதாயத்தின் தோற்றத்துடனேயே சார்ந்துள்ளது என்பது அகழ்வாராய்ச்சியாளர்களின் கருத்து. ஏனெனில் இந்து மதம் இறைவன் எங்கும் வியாபித்துள்ளான் என வலியுறுத்தி இயற்கையோடு ஒன்றிய வழிபாட்டு முறையையே எடுத்தியம்புகின்றது.

எனவே உலகிலே நிலைபெற்றுள்ள மதங்கள் யாவற்றிற்கும் மிகவும் பழமையானதும் எல்லா மதங்களுக்கும் ஊற்றுக் கண்ணாகவும் தாய்போல விளங்கும் பெருமைக்குமுரியது இந்து மதமே . உலகத்தைப் போன்று இந்து மதமும் பழமையானது. ஆக்கியவனும் ஆக்கப்பட்ட காலமும் சொல்ல முடியாதது. எனவே தான் இது 'சனாதன தர்மம்' என்றழைக்கப்படுகிறது. சனாதன தர்மம் என்றால் 'சாகா மதம்' எனப் பொருள்படும். சாகா மதம் எனும் பொழுது தொன்மையானது என்பது மட்டுமல்ல தன்னை சார்ந்த மக்களை மரணமில்லாப் பெருவாழ்விற்கு அழைத்துச் செல்லத்தக்க ஆற்றல் பெற்றது" என்றும் பொருள்படும். இந்து மதம் "வைதீக மதம்" என்றும் அழைக்கப்படுவதுண்டு. ஆதிகால தவரிஷிகள் ஆண்டவனின் கட்டளைகளாக, சத்தியவாக்குகளாக சக்தி மிகுந்த அருள்மொழிகளை தமக்கு கிடைத்த அனுபவங்களை வேத, உபநிடதங்களாக வெளிப்படுத்தியுள்ளனர். இந்த வேத உபநிடதங்களை இந்து மதத்திற்கான அடிப்படை தர்ம சாஸ்திரங்களாக கொள்வதால் அதாவது பிரமாண நூல்களாக ஏற்றுக் கொள்வதால் இந்துமதம் 'வைதீக மதம்' என்றும் அழைக்கப்படுகிறது.

இன்று பெருமளவில் தெற்காசிய நாடுகளிலும் மேலைத் தேய நாடுகளிலும் பலராலும் பின்பற்றப்பட்டு வரும் இந்துமதம் மனிதனுக்குரிய சீரிய பண்புகளையும் பண்பாட்டு அம்சங்களையும் புகட்டி வழிநடத்துகிறது. பற்று அறுந்து இறுதியான விடுதலை நல்குவது எமது மதம் தான், எம் வழிகள் தான் என பிற மதங்களைப் போலக் கூறாது, எங்கெங்கோ உற்பத்தியாகும் நதிகள் இறுதியில் கலப்பது கடலில் தான் என எல்லா பாதைகளும் மார்க்கங்களும் முத்திக்குத்தான் அழைத்துச் செல்கின்றன என்ற பரந்த, இலகு கொள்கையை தனதாக்கி கொண்டுள்ளது இந்து மதம்.

இந்து தர்மம் இறைவனை உள் நின்று செயற்படுத்தும் சக்தியாக மனிதனுக்குள் இறைவனை காண தளைப்படுகிறது. எனவே மனிதனின் வாழ்வினை தெய்வீக வாழ்வாக மாற்றுவதையே இந்து மதம் நோக்காக கொண்டுள்ளது. இதனால் மனிதனுக்குள் அன்பு, ஈகை, இரக்கம், கல்வி, பொறுமை, வைராக்கியம், ஒற்றுமை, உண்மை, உருமை, ஒப்புரவு, சமத்துவம், தூய்மை, பக்தி, ஞானம் போன்ற சனாதன குணங்களை ஊற்றெடுக்கச் செய்கின்றது. இம்மத பண்பாடு உண்மையில் மனிதனின் உலக வாழ்வின் விடுதலைக்கான பண்பாடாகும். இதனால் தான் எவ்வகை மக்களுக்கும் அவர்களின் மனோநிலைக்கும், விருப்புகளுக்கும், தகுதிக்கும், ஆற்றலுக்கும், ஆன்மீக புரிந்துணர்வின் தன்மைக்கும், வாழ்க்கை தராதரங்களுக்கும் சூழ்நிலைகளுக்குமேற்றாற் போல் இந்து மதம் ஆன்மீக சாரத்தையும், யோக சாதனத்தையும் அளிக்கிறது. இவ்வுலகில் படித்தோர் தொடங்கிப் பாமரர் வரைக்கும் அவரவர்களின் தொழில் பக்குவ நிலைக்கேற்பவும் இறையருளுணர்வு பெறும் வகையில் இந்து தர்மம் யோகசாதனத்தை நியமிக்கின்றது.

இன்று உலகில் பின்பற்றப்படும் மதங்களின் போதனைகள் இந்து மதத்தின் சாரல்களே. இது கருணையை நிலைநிறுத்தும் சமரசப் பான்மையை உடையது. இம்மதம் எம் மதத்தையும் தூற்றாது மதிக்கின்றது. பிற மதத்தை பின்பற்றுபவர்களுடன் அனுசரித்து அன்புடனும், அமைதியுடனும் சார்ந்து செல்ல வழிகோலுகிறது. உண்மை எங்கிருந்து வந்த போதிலும் எத்தகைய உடை உடுத்தி வந்த போதிலும், அதனைப் பாராட்டுகிறது. பெருமைப்படுத்துகிறது. ஏற்றுக்கொள்கிறது.

இந்து மதம் 'அன்பே சிவம்' எனக் கூறி அன்பிலே இறைவனை காணத்தளைப்படுகிறது. அன்பு வழி நின்று உலகையே அன்புமயமாக காண முற்படும் இந்து மதத்தின் தத்துவஞானமும் நடைமுறைக்கு உகந்ததாக விளங்குகின்றது. இது பெருவாழ்விற்கு அடிகோலும் வழிமுறையாகும்.

அதாவது அன்பு வட்டம் பெருகப் பெருக தருமம் நிலைக்கிறது, தளைத்தோங்குகிறது. இத் தருமத்தின் வாழ்வுதனையும், வேத உபநிடத சாரங்களையும் எளிய நடையில் மகாபாரதமும், இராமாயணமும் பறைசாற்றி நிற்கின்றன. 'யாம் பெற்ற இன்பம் பெறுக' என திருமூலர் திருமந்திரம் வாயிலாக இந்து மதத்தின் தத்துவ ஞானத்தை விளக்குகின்றார்.

இறுதியாக, இந்து மதம் துறவறத்தை சார்ந்ததும் அல்ல. கற்பனை நிறைந்ததும் அல்ல அது பல தெய்வ வாதத்தையும் கொண்டதும் அல்ல. ஒரு தெய்வ வாதத்தையுடையதும் அல்ல. அதுபல மதங்களையொட்டிய அனுபவங்களைக் கொண்ட கலவை மதமாகும். அது வாழ்வின் லட்சியத்தில் குறைவிலாது நிறைவு பெற்ற ஒன்றாகும். பரந்தளவில் சகிப்புத்தன்மையும் ஆழ்ந்த மனிதத் தன்மையும் உன்னத ஆன்மீக நோக்கும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்குச் சிறிதும் மதவெறி கிடையாது. மதவெறிக்கு அப்பாற்பட்டது. அதனால்தான் உலகின் இதர மாபெரும் மதங்களைப் பின்பற்றியவர்களின் பலத்த தாக்குதலினின்று ஒருவாறு தாக்குப்பிடித்து இன்றும் வளம் பெற்று வாழ்ந்து வருகின்றது. வளைந்து கொடுத்து எளிதிற் சரிப்படுத்திக் கொள்ளும் தன்மையும், சகிப்புத் தன்மையும் கொண்டுள்ள இந்து மதத்தைப் போன்று வேறு எம்மதமும் இவ்வுலகில் இல்லை.

ஓங்குக சைவ நீதி!

கஸ்தூரி சிவதாஸ்

1ம் வருடம் முகாமைத்துவம்
முகாமைத்துவ நிதிப்பீடம்

**சிவராத்திரி அனுஷ்டிப்பதற்கு சிறந்த தலங்கள் ....** சமய குரவரால் பாடப்பெற்றவை


திருவைக்கவூர்

திருக்கோகாமம்

சிறீ சைலம்

திருவீழிமிழலை


திருக்கேதீச்சரம் – இலங்கை.



**Koil Thirumaagaalam** (Ambar Maagaalam)

Maagalam is the name because Kaali was defeated by shiva and so she performed her thapas here.situated 2 kms to the west of Ambal , a beautiful temple.

# "இந்து மதத்தின் தோற்றமும் அதன் தற்போதைய நிலைமையும்"



இந்துவாக வாழ்வோம்,
இந்து தர்மம் காப்போம்

ம.திருக்குமரன்
1ம் வருடம்
முகாமைத்துவ நிதிப்பீடம்.

## இந்து சமயம்

இந்து சமயம் பற்றி பார்க்கின்ற போது முதலில் இந்து சமயம் என்றால் என்ன? என்பதனை விளங்கிக் கொள்ளுதல் இன்றியமையாததாகும். "இந்து" எனும் சொல் ஒரு சமுதாயம் என்பதனையும் "சமயம்" எனும் சொல் கடவுள் பற்றிய கொள்கைகளைப் புலப்படுத்துவதாகவும் அமைகின்றது. எனவே "இந்து சமயம்" என்பது இந்து மக்கள் கடைப்பிடிக்கும் கடவுள் பற்றிய கொள்கைகளை விளக்குவதாக உள்ளது எனலாம்.

இந்து சமயம் பற்றி நாம் ஒரு முழுமையான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு இந்து சமயத்தின் சிறப்பு, அதன் பரந்த நோக்கம், இந்து சமயத்தின்தொன்மை, அதன் வளர்ச்சி, இந்து சமயத்தின் பிரிவுகள், இந்து மதத்தின் சீர்திருத்தவாதிகள் போன்ற பல விடயங்களை ஆய்வு செய்தல் இன்றியமையாததாகும்.

இந்து சமயத்தின் சிறப்புப் பற்றி நோக்குகின்ற போது இச்சமயமானது அனைத்து மக்களுக்கும் பொருந்தக் கூடிய கருத்துக்களைக் கொண்டிருப்பதனால் "சனாதன சமயம்" எனும் சிறப்புப் பெயரினை பெறுகின்றது. அதாவது இந்து சமயமானது சமய ஒருமைப்பாடு, சமயப் பொறை ஆகியவற்றைப் பேணக்கூடிய வகையில் பரந்த கொள்கையுடையதாகும். அத்துடன் இந்து சமயமானது பிற சமயக் கருத்துக்களையும் தன்னளவில் ஏற்று ஒற்றுமைப்பாடு கொண்டதுடன்ஏனைய சமயங்களைப் போலன்றி எந்தக் கட்டுப்பாட்டினையும் கொண்டிராத சிறப்புப் பெற்றிருப்பதுடன் இது இந்தியாவிற்கே உரியதாயினும் கடல் கடந்தும் பிரபல்யம் அடைந்திருக்கின்றமை அதன் பரந்த நோக்கினையே எடுத்துக் காட்டுகின்றது. மற்றும் இச்சமயமானது அவரவர் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் தெய்வத்தினைத் தேர்ந்தெடுத்து வழிபாடு மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தும் முகமாக சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் ஆறு பிரிவுகளைக் கொண்டு நிலைத்து நிற்கின்றமையும் இந்து சமயத்தின் சிறப்பினையும் பரந்த நோக்கினையும் புலப்படுத்துவதாக உள்ளது.

இந்து சமயத்தின் தொன்மை பற்றி பார்க்கின்ற போது உலகிலே தோற்றம் பெற்ற சமயங்களிலே எங்கு எவரினால் எப்போது தோற்றுவிக்கப்பட்டது என கூறமுடியாதவாறு தொன்மை மிக்க சமயமாக இது விளங்குகின்றது. எனினும் 1820 – 1829 வரை சேர். ஜோன் மார்சல், சேர். அலெக்சாண்டர் கன்னிங்கம், சேர். வில்லியம் ஜோன்ஸ், சேர். மைக்கல்" போன்ற பல மேல்நாட்டு அறிஞர்கள் இந்தியாவின் வடமேற்கு பிரதேசத்திலுள்ள சிந்து நதியினை அண்மித்த பிரதேசத்தினை ஆய்வு செய்து அங்கு கிடைத்த தொல்பொருட்களை ஆதாரமாகக் கொண்டு கிட்டத்தட்ட 5000 ஆண்டுகளுக்கு முன்பே சிந்து வெளியில் இந்து சமயம் சிறந்து விளங்கியமையை எடுத்துக் காட்டியுள்ளனர்.

எனினும், இவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள இக்கருத்தினை நாம் ஊகங்களாகவே ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் எந்தவொரு கால கட்டத்தினதும் சமய, சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை அறிந்து கொள்வதற்குரிய இன்றியமையாத சான்றாக

விளங்குவது அக் கால கட்டத்தில் எழுந்த இலக்கிய சான்றாகும். ஆனால் சிந்துவெளி ஆய்வின்போது எந்தவொரு இலக்கியச் சான்றும் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகின்றது. அது மட்டுமன்றி அங்கு கண்டெடுக்கப்பட்ட எழுத்துக்கள் இன்னும் வாசித்து விளங்கிக் கொள்ளப்படவில்லை. அத்துடன் சிந்து வெளிப் பிரதேசத்தில் 1/10 பங்கு மட்டுமே இதுவரை ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இக் காரணங்களினால் சிந்து வெளி ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு இந்து சமயத்தின் தொன்மை பற்றிக் கூறப்பட்ட கருத்துக்களை சிந்து வெளி பிரதேசத்தினை முழுமையாக ஆய்வு செய்து எழுத்துக்கள் வாசிக்கப்படும் வரை நாம் ஊகங்களாகவே எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இந்து சமயத்தின் வளர்ச்சி பற்றி பார்க்கின்ற போது வட நாட்டிலே தோன்றியதாக கூறப்படும் இந்து சமயமானது பல்வேறு கால கட்டங்களிலும் வட நாட்டில் எவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்றும் அது பின்பு எவ்வாறு தென்னாட்டிற்குச் சென்று அங்கும் பல்வேறு காலகட்டங்களிலும் எவ்வாறு வளர்ச்சியடைந்தது எனப் பார்த்தல் வேண்டும்.

சிந்து வெளி காலத்திற்கு அடுத்ததாகக் கருதப்படுவது வேதகாலமாகும். இந்து இலக்கியங்களில் மிகத் தொன்மை வாய்ந்த இலக்கியமாக வேத இலக்கியங்கள் கூறப்படுகின்றன. "வேதம்" என்பதன் பொருள் "அறிவு" என்பதாகும். வேதங்கள் அறிவு பூர்வமான விடயங்களைக் கொண்டிருப்பதனாலையே அப்பெயரினைப் பெறுகின்றன.

இருக்கு, யசூர், சாமம், அதர்வனம் என வேதங்கள் நான்கு வகைப்படும். இருக்கு வேதமானது பாட்டு வடிவிலும், யசூர் வேதமானது உரைநடை வடிவிலும், சாம வேதமானது இசை வடிவிலம் அதர்வன வேதமானது மந்திரங்கள், மாயங்கள் என்பவற்றின் மூலமும் இறை வழிபாடு நிகழ்த்தப்பட்டது.

வேதகால சமய நிலையினை ஆய்வு செய்தவர்களில் ஒருவரான மாகஸ்முல்லர் என்பவர் வேதகாலத்தினை முற்பட்ட வேத காலம், இடைப்பட்ட வேதகாலம், பிற்பட்ட வேதகாலம் என வகுத்து இக்காலங்களிலே முறையே பல தெய்வ வழிபாட்டுக்காலம், ஒரு தெய்வ வழிபாட்டுக் காலம், ஒரு பொருள் வழிபாட்டுக்காலம் என்ற முறையில் வழிபாடுகள் நிகழ்ந்திருந்ததாகக் கூறியுள்ளார்.

வேதகாலத்தில் குறிப்பாக இயற்கைத் தெய்வங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வழிபட்டு வந்திருந்தமையைக் காணமுடிகின்றது. இங்கு உருவ வழிபாடு காணப்படவில்லை. உருவக வழிபாடு காணப்பட்டிருந்தது. இங்கு மொத்தமாக 33 தெய்வங்கள் வழிபட்டு வந்த போதிலும் உள்ள பொருள் ஒன்று எனும் கருத்தானது "ஏகம் ஷத் விப்ரா பகுதா வதந்தி" என்னும் சுலோகத்தினூடாக வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்து சமயக்கருத்துக்களைக் கூறும் சிறப்புமிக்க இலக்கியங்களாக இதிகாசங்கள் காணப்படுகின்றன. "இதிகாசம்" என்பதன் பொருள் "இது இப்படி நடந்ததேயாகும்" என்பதாகும். வேத உபநிடதங்களில் உள்ள இந்து சமயக் கருத்துக்கள் கற்றறிந்தவர்களுக்கு மட்டுமே விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதனால் இத்தகைய உயரிய இந்து சமய கருத்துக்களை சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் கதை களஞ்சியங்களாக விளக்கி உரைப்பனவே இதிகாசங்களாகும்.

இதிகாசங்கள் எனும் ரீதியில் சிவரகசியம், இராமாயணம், மகாபாரதம் என்பன குறிப்பிடப்படுகின்றது. இவற்றில் சிவரகசியம் என்பது பரம்பொருள் பற்றியும் ஏனையவை இரண்டும் மக்களின் அன்றாட பிரச்சினைகள் பற்றியும் கூறியிருந்ததனால் மக்கள் மத்தியில் இவை இரண்டும் மிகுந்த செல்வாக்கினை பெற்றன.

இராமாயண இதிகாசத்தினை எடுத்து பார்க்கின்ற போது அங்கு இந்து சமயத்தின் பிரிவுகளில் சைவமும் வைணவமும் சிறப்பிடம் பெற்றதற்குரிய பல குறிப்புகளைக் காணமுடிகின்றது. இவ்வாறே மகாபாரதத்திலும் பகவத்கீதையில் வைணவ நெறிக் கருத்துக்கள் சிறப்பிடம் பெற்றிருக்கின்றன.

இதிகாசங்கள் காட்டும் இந்துசமய மரபிலே சூரிய வழிபாடு, நந்தி வழிபாடு, மர வழிபாடு, பசு வழிபாடு போன்ற பல வழிபாடுகள் சிறப்பிடம் பெற்றிருந்ததுடன் வழிபாட்டு முறைகளான கிரியை, சடங்கு, வேள்வி, யாகம், தவம், யாத்திரை என்பனவும் சிறப்பிடம் பெற்றிருந்தது.

இந்து இலக்கியங்களில் ஒன்றாக விளங்கும் புராணங்களும் இந்து சமய வளர்ச்சிக்கு பல பாரிய பணிகளை ஆற்றியுள்ளது. புராணம் என்பதன் பொருள் "பழமை வாய்ந்தது" அல்லது "தொன்மை வாய்ந்தது" என்பதாகும். வடமொழி புராணங்களே தமிழ்மொழி புராணங்களின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைவதனால் வடமொழி புராணங்களே புராணங்கள் எனும் வகையில் சிறப்புடையதாக கருதப்படுகின்றது. புராணங்கள் 18 ஆகும். இது தவிர 18 உப புராணங்களும் உண்டு. தென்னாட்டு சமய மரபை வளம்படுத்திய பெருமை புராணங்களையே சாரும். அதனால் தான் வட நாட்டில் புராணங்கள் எழுச்சி பெற்றிருக்காது விட்டால், தென்னாட்டில் இந்து சமய வளர்ச்சி இல்லை எனவும், தென்னாட்டின் இந்துசமய வளர்ச்சிக்கு கருவூலங்களாக அமைபவை புராணங்களே எனவும் கூறப்பட்டிருக்கின்றன.

தென்னிந்திய வரலாற்றுக்காலத்தினை, அரசியலை அடிப்படையாகக் கொண்டு சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், தற்காலம் என வகைப்படுத்தலாம்

தென்னாட்டில் இந்து சமயமானது எவ்வாறு இருந்தது என்பதனை அறிந்து கொள்வதற்கு எமக்கு உதவுபவை அக்காலத்தில் எழுச்சி பெற்ற இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு, தொல்காப்பியம் போன்றவை ஆகும்.

இக்காலமானது முற்பட்ட சங்ககாலம், பிற்பட்ட காலம் என 2 வகையாக வகுக்கப்பட்டு முற்பட்ட சங்க காலத்தில் முருகன், கொற்றவை போன்ற திராவிட தெய்வங்களும் பிற்பட்ட சங்க காலத்தில் விஷ்ணு, வருணன், இந்திரன் போன்ற ஆரிய தெய்வங்களுடன் திராவிட தெய்வங்களும் இணைந்து வழிபாட்டுக்கு செல்வாக்கு பெற்றிருந்தமையை காணமுடிகின்றது.

இக் கால மக்கள் இயற்கையின் தன்மைக்கேற்ப தமிழகத்தினை ஐம்பெரும் பிரிவுகளாக வகுத்து அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தெய்வத்தினை சிறப்பித்து வழிபட்டு வந்தனர். அதாவது மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனவும் காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனவும் கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனவும் மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை எனவும் வகுத்து முறையே குமரன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை போன்ற தெய்வங்களை வழிபாட்டு வந்திருந்தமையை தொல்காப்பிய பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

சங்க இலக்கியங்களின் துணை கொண்டு நோக்குகையில் இங்கு இந்து சமய வழிபாட்டு பழக்க வழக்கங்கள் என்னும் ரீதியில் ஆடல், பாடல், வெறியாடல், குரவைக்கூத்து, குன்றன் குறவை போன்றவையும், வழிபாடு எனும் போது சிவ வழிபாடு, நடுகல் வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு மற்றும் லக்ஷ்மி போன்ற சிறு தெய்வம், இந்திரன், வருணன், முருகன், திருமால் போன்ற தெய்வங்களின் வழிபாட்டு முறைகளும் சிறப்புப் பெற்று விளங்கி வந்ததனை அறிய முடிகின்றது. அத்துடன் ஆறு, கடல், சூரியன், சந்திரன் போன்ற இயற்கை தெய்வங்களையும் வழிபட்டு வந்திருந்தனர்.

சங்க காலத்தின் இறுதிக் காலத்தில் திராவிட வழிபாட்டு முறைகளும் தெய்வங்களும் ஆரிய வழிபாட்டு முறைகளும் தெய்வங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கமருவிய காலத்தினை பார்க்கின்ற போது இக் காலத்தில் களப் பிரர்களாகிய அந்நியர்களின் ஆட்சிக்கு தமிழகம் உட்பட்டிருந்தமையால் இக் காலம் "இருண்ட காலம்" என அழைக்கப்படுகின்றது. இக் காலத்தில் களப் பிரர் தமிழ் மக்களது வாழ்க்கை நிலையிலையோ சமய நிலைலையோ எதுவித அக்கறையும் கொள்ளாததினால் இக் காலத்தில் இந்து சமயம் நலிவடைந்தது. அவை தீக மத நெறிகளாகிய சமணம், பௌத்தம் ஆகியவை இக் காலத்தில் வளர்ச்சியடைந்தது. இங்கு அவை தீக மதம் செல்வாக்குப் பெற காரணம் யாதெனில் இந்து சமயத்தில் காணப்பட்ட குறைபாடுகளாகிய பலியிடல் மது அருந்துதல், சாதி பேதம் பாராட்டுதல், பலதார மணம் என்பவையாகும்.

இக் காலத்தில் இந்து சமயம் செல்வாக்கினை இழந்திருந்த போதும் சைவத்தின் வளர்ச்சிக்கு காரைக்காலம்மையாரும், வைணவநெறியின் வளர்ச்சிக்கு முதல் முன்று ஆழ்வார்களாகிய பேயாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பல பணிகளை ஆற்றி இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டதனால் இக்காலமானது "சமயம் வித்திடப்பட்ட காலம்" என அழைக்கப்பட்டது.

பல்லவர் காலத்தில் இந்து சமயமானது வளர்ச்சியடைந்த விதத்தினை பக்தி இலக்கிய காலம், பக்தி இயக்க காலம், சமய வளர்ச்சிக் காலம் என 3 காலங்களாக சிறப்பித்து கூறப்படுகின்றது. அதாவது இக்காலத்தில் எழுச்சி பெற்றிருந்த இலக்கியங்கள் முழுமையும் பக்தியினை கருப்பொருளாகக் கொண்டு தெய்வீக காதலினையே வலியுறுத்தி எழுச்சி பெற்று இருந்தமையால் இக்காலமானது "பக்தி இலக்கிய காலம்" என சிறப்பிக்கப்பட்டிருந்தது. பல்லவ கால வளர்சக்கு தனி ஒருவர் மட்டுமன்றி மன்னர்கள், மக்கள், சமய பெரியார்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இயக்கமாக நின்று சமயத்தினை வளர்ச்சி பெற செய்திருந்தமையால் இக் காலமானது "பக்தி இயக்க காலம்" என சிறப்பிக்கப்பட்டிருந்தது. சங்கமருவிய காலத்திலே காரைக்கால் அம்மையாராலும் முதல் 3 ஆழ்வார்களினாலும் வித்திடப்பட்ட சமயமானது இக்காலத்தில் பெருவளர்ச்சி பெற்றிருந்ததன் காரணத்தால் இக்காலமானது "சமய வளர்ச்சிக்காலம்" எனச் சிறப்பிக்கப்பட்டிருந்தது.

பல்லவர் காலத்தில் அவைதீக மதங்களின் எதிர்ப்புக்களின் மத்தியில் வளர்ச்சிபெற்றிருந்த இந்துமதம் சோழர் காலத்தில் எந்தவொரு மதத்தினதும் எதிர்ப்பின்றி தனித்துவம் பெற்ற மதமாக வளர்ச்சி பெற்றிருந்தது. சோழ மன்னர்கள் மத நம்பிக்கை மிக்கவர்களாக காணப்பட்டதால் தம்மால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு அரசியல் நடவடிக்கையின் வெற்றிக்கும் இறைவனே காரண கர்த்தாவாக விளங்கியிருந்தார் எனக் கருதி இறைவனுக்கு வழங்கும் காணிக்கையாக ஒவ்வொரு வெற்றியின் போதும் ஒவ்வொரு ஆலயங்கள் அமைத்தனர். இதனால் இக்காலத்தில் பல ஆலயங்கள் எழுச்சி பெற்று சமயமானது நிறைவடைந்து இருந்ததனால் இக்காலம் "சமய நிறைவுக் காலம்" என சிறப்பிக்கப்பட்டது.

நாயக்கர் காலமானது "இந்து சமயம் மறுமலர்ச்சியடைந்த காலம்" என கூறப்படுகின்றது. அதாவது சோழர்காலத்தின் இறுதிப்பகுதியிலே சோழமன்னர்களது வலிமை குறைவடைந்திருந்தது. இச் சந்தர்ப்பத்தில் மாலிக்கபூர் என்பவனை தலைவனாகக் கொண்ட ஒரு இஸ்லாமிய படையெடுப்பு தமிழகத்தின் மீது மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு வந்திருந்த இஸ்லாமியர் இந்துமதத்தினை அழித்து தமது மதத்தினை உயர்வடைய செய்திருந்தனர். இந்நேரத்தில் தமிழ் மக்களையும் இந்து மதத்தினையும் பாதுகாப்பதற்காக வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வருகை தந்திருந்த நாயக்க மன்னர்கள் பல மடங்களையும் ஆதீனங்களையும் நிறுவி இந்து சமயத்தினை மறுமலர்ச்சியடைய செய்திருந்தனர்.

அடுத்து இந்து சமயத்தின் பிரிவுகளை நோக்குமிடத்து இச் சமயத்தில் பல பிரிவுகள் நீண்டகாலமாக நிலவி வந்திருந்தது. இதற்கு காரணமாக அமைந்தவை புராணங்களாகும்.அதாவது புராணங்கள் தனித்தனியே ஒவ்வொரு தெய்வங்களினதுபெருமைகள் பற்றியும் சிறப்புக்கள் பற்றியும் தமது கதைகளிலே விளக்கி கூறியிருந்தமையால் மக்கள் தத்தமது விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் ஒவ்வொரு தெய்வங்களை முக்கியத்துவப்படுத்தி வழிபட்டு வந்தனர். இதனாலேயே பிற்காலத்தில் அறுவகை சமய பிரிவுகள் தோற்றம் பெற்றது என கருதி கொள்ள முடிகின்றது. ஆனால் இப் பிரிவுகளை அறுவகை சமயங்கள் என வகுத்தவர் ஆதி சங்கரர் ஆவார். இப் பிரிவுகள் "சன் மதங்கள்" எனவும்"வைதீக மத பிரிவுகள்" எனவும் அழைக்கப்படுகின்றன. அறுவகை சமயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தெய்வங்களை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்ககின்றன.

இந்து சமயப் பிரிவுகளில் ஒன்றான சைவம் பற்றி பார்க்கின்ற போது சிவனை முழுமுதற் கடவுளாக கொண்ட சமயம் சைவம் எனப்படுகிறது. சிவம் என்பதன் "அன்பு" ஆகும். எனவே சைவம் அன்பு சார்ந்த விடயங்களை விளக்குகின்றது.

சைவ சமயமானது வேத உபநிடதங்களை பொது பிரமாணமாகவும் சைவ ஆகமம் எனப்படும். சிவாகமங்களை சிறப்பு பிரமாணமாகவும் கொண்டு தனது கொள்கைகளை வகுத்துள்ளது. இது வீர சைவம் காஸ்மீர சைவம், சித்தாந்த சைவம் என 3 வகைப்படும். இதில் சித்தாந்த சைவமே இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் பெருமளவு கடைப்பிடிக்கப்படுகின்றது. சைவ சமயம் பற்றி ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள், மெய்கண்ட சாஸ்திரங்கள் போன்ற பல இலக்கியங்கள் காணப்படுகின்றன. இச்சமயத்தின் தொன்மை சிந்துவெளியில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சைவசமயமானது பதி, பசு, பாசம் எனும் முப்பொருட்கள் பற்றியும் கூறியுள்ளதுடன் ஆன்மாக்கள். கன்மங்களிலிருந்து விடுதலை பெற்று ஈடேற்றம் பெறவேண்டுமென்று கூறுகின்றது.

சக்தியினை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சாக்த சமயம் எனப்படுகிறது. சக்தியினை சாக்தர் மட்டுமன்றி ஏனைய சமய நெறிகளை கடைப்பிடிப்போரும் முக்கியத்துவம் கொடுத்து வழிபடுகின்றனர்.

சாக்த சமயத்தின் தொன்மையானது சிந்து வெளியில் காணப்பட்டதாக கூறப்படுகிறது. இருக்கு, யசூர், சாமம், அதர்வனம் ஆகிய 4 வேதங்களும் பிரபஞ்சாரம், சௌந்தர் யலகரி, மார்க்கண்டேயர் புராணம், சாக்த தந்திரம் என்பவை சாக்த சமயம் பற்றி கூறும் நூல்களாகும்.

சக்தியானவள் அம்பிகை, பார்வதி, விஜயா, உமா, கௌரி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றாள். இப் பல்வேறுபட்ட பெயர் வடிவங்களிலும் பல தொழில்களை ஆற்றுகின்றாள்.

கணபதியை முழுமுதல் கடவுளாக கொண்டு வழிபடும் சமயம் காணபத்தியம் ஆகும். கணபதர் மட்டுமன்றி ஏனைய மதப் பிரிவினரும் காரியசித்தி, நீண்ட ஆயுள், நல்லறிவு, நோயின்மை ஆகியவற்றுக்காக கணபதியை வழிபடுகின்றனர்.

இந்துக்கள் எந்தவொரு கிரியை ஆற்றுவதற்கு முன்னர் கணபதிக்கே கிரியைகள் ஆற்றுகின்றனர். கணபதியானவர் விநாயகர், விக்னேஸ்வரர், லம்போதர், ஞானமுதல்வர், சித்திவிநாயகர் என பல பெயர்களினால் அழைக்கப்படுவதுடன் இப்பெயர்களுக்கு ஏற்ப பல இயல்புகளை கொண்டவராக விளங்குகின்றார்.வேதம், காயத்திரி மந்திரம், உபநிடதம், ஏரம்ப உபநிடதம், கணேஷகீதை, கணேஷ மாத்மியம்,பஷ புராணம், விநாய புராணம் போன்ற பல

இலக்கியங்களில் கணபதி பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. இந்து மதத்தினர் மட்டுமன்றி அவைதீக மதநெறியின்ஒருபிரிவான பௌத்த மதத்தினர் கணபதியை கணபதிதெய்யோ" என அழைத்து வழிபடுகின்றனர்.

முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் கௌமாரம் ஆகும். இது ஆரிய தெய்வமாகிய ஸ்கந்தனும் திராவிட தெய்வமாகிய முருகனும் இணைந்த வழிபாட்டுப் பிரிவாகும். முருகன் எனும் சொல்லானது. இளமை, அழகு, வீரம், மது வெறி, காதல் எனும் பல அம்சங்களை குறிப்பதாக அமைகிறது. முருகன் பல காரணங்கள் கருதி பல பெயர்களைப் பெற்றுள்ளான். அதாவது தேவசேனாதிபதி, ஞான பண்டிதன், அப்பன் சுவாமி, குகன், சரவணம், திருக்குமரன், கார்த்திகேயன் என்பவை ஆகும்.

கௌமாரத்தின் முழுமுதற் கடவுளான முருகன் ஆறு முகங்களை கொண்டவனாகவும் பன்னிரு புயங்களையும் பன்னிரு கரங்களையும் அக்கரங்களிலே சேவல்கொடி, பாசம், அபயகரம் போன்றவற்றுடன் வெவ்வேறுபட்ட ஆயுதங்களையும் தாங்கியவாறு உள்ளான். இத்தோற்றப் பொலிவானது பல தத்துவங்களை விளக்குவதாக உள்ளது. முருக வழிபாட்டின் தொன்மை சிந்து வெளி பிரதேசத்தில் இருந்து காணப்படுகின்றது. கௌமாரத்தின் ஆகமம் குமாரதந்திரமாகும். மற்றும் குமாரசம்பவம், திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியம், மதுரை காஞ்சி, மலைபடுகடாம், கந்தபுராணம், திருப்புகழ், கந்தரங்கலாரம், கந்தர்கலிவெண்பா, கந்தர்கலித் தொகை ஆகிய இலக்கியங்கள் இச்சமயம் பற்றிய குறிப்புகளை தருகின்றன. கௌமார மதப்பிரிவு படி முருகனுக்கு இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி எனும் 3 சக்திகள் உண்டு. அதாவது வள்ளி இச்சாசக்தியாகவும் தெய்வானை கிரியாசக்தியாகவும் வேலாயுதம் ஞானசக்தியாகவும் விளங்குகின்றது.

சூரியனை முழுமுதற்கடவுளாக கெண்ட சமயம் சௌரமாகும். இது கிரேக்கம், ரோம், எகிப்து போன்ற மேலைத்தேய நாடுகளிலும் இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளிலும் வழிபட்டு வரப்படுகின்றது. மேலைத்தேய நாட்டவர்களால் "அப்பலோ" என அழைக்கப்படும் தெய்வம் சூரியனாகும். சௌர சமயத்தின் கருத்தின்படி சூரியன் வானத்தின் தலைவனாகவும் ஒளிமயமானவன் எனவும் அழைக்கப்படுகிறான். 'சூரியனை வழிபடுவதன் மூலம் புறஇருள் மட்டுமன்றி அகஇருளும் நீக்கம் பெறுகின்றது. இத் தெய்வமானது ஆதித்தியன், உதயன், திவாகரன், பாஸ்கரன், இரவி என பல பெயர்களினால் அழைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது. இச்சமயத்தின் தொன்மையானது சிந்து வெளியில் காணப்படுகிறது. சூரியனை அருவமாகவும் உருவமாகவும் வழிபட்டு வருகின்றனர். ஆனால் இவ்விரு சாராரும் தனித்தனியே நின்று வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

மகா விஷ்ணுவை முழுமுதற்கடவுளாக கொண்ட சமயம் வைணவமாகும். வைணவம் நீண்ட காலமாகவே தனியொரு மதப்பிரிவாக விளங்கி வந்திருந்த போதும் நாயக்கர் காலத்திலிருந்து அது வடகலை வைணவம், தென்கலை வைணவம் என 2 வகைகளாக விரிவடைந்தது. வைணவத்தின் தொன்மை பற்றி நோக்குகையில் சிந்து வெளிப் பிரதேசத்தில் இருந்து சிறப்புப் பெற்றிருந்ததாக கொள்ளப்படுகிறது.

வைணவர்கள் மகாவிஷ்ணுவை திருமால், கேசவன், மாயவன், நாராயணன், கோவிந்தன், ஜனார்த்தனன், வாசுதேவன் என பல்வேறு பெயர் கொண்டு வழிபட்டு வருகின்றனர். வைணவர்கள் மகாவிஷ்ணுவின் அவதாரங்களுக்கு முக்கிய இடம் கொடுத்து வருகின்றனர். அதாவது உலகத்திலே தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் போது தர்மத்தை காத்து அதர்மத்தை அழிப்பதற்கு மகாவிஷ்ணு யுகங்கள் தோறும் அவதாரம் எடுக்கும் தன்மையுடையவராகும். அவதாரம் என்பது "ஆன்மாக்களை ஈடேற்றம் பெற செய்வதற்காக இறைவன் தன்னிலையிலிருந்து கீழே இறங்கி வருதலாகும்." மகாவிஷ்ணு இதுவரை எடுத்த அவதாரங்களாவன மச்சம், கூர்மம், வராகம், வாமன, நரசிம்ம, பலராம,

பரசுராம, சிறிராம, சிறிகிருஷ்ண என்ற 9 அவதாரங்களாகும். இனி எடுக்கப் போகும் அவதாரம் கல்கி அவதாரமாகும்.

வைணவர்களின் சிறந்த தத்துவங்களாக பகவத்கீதை, சங்காரது அத்வைதம், இராமானுஜரது விஷிட்டாத்வைதம், மத்துவரது துவைதம் என்பன காணப்படுகின்றன.

வைணவர்கள் மகாவிஷ்ணுவை பரம், வியாவம், வியூகம், அந்தர்ஜாமி, அர்ச்சம் என்ற ஐந்து வகைத்திருமேனிகளாக வகுத்து வழிபட்டு வருகின்றனர்.

இவையே இந்து சமயத்தின் ஆறுவகை பிரிவுகளாகும். இந்து சமயமானது பல இந்து சமய நிறுவனங்களை பல்வேறுபட்ட காலங்களில் நிறுவியமையாலும், பல சீர்திருத்தவாதிகளின் அரியபணிகளாலும் வளர்ச்சியடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.அந்த வகையில் இந்து சமய நிறுவனங்களாகிய இராமகிருஷ்ண மிஷன், காந்தீயம், சைவ பரிபாலனசபை, விவேகானந்தா சபை போன்றவை குறிப்பிடத்தக்கதாகும். இந்து சமயத்தின் சீர்திருத்தவாதிகளாக இராமகிருஷ்ணர், விவேகானந்தர், மகாத்மா காந்தி, தயானந்த சரஸ்வதி, இராஜாராம், மகாகவி பாரதியார், சாரதா அம்மையார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இந்த சீர்திருத்தவாதிகள் சமயத்தில் காணப்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்து இந்து சமயத்தினை மேலும் வளர்ச்சியடைய செய்யும் நோக்கில் பல பரந்துபட்ட கொள்கைகளை முன்வைத்தனர். இதற்கு உதாரணங்களாக, உயர்வு, தாழ்வு, பாராட்டாத பண்பு, சர்வசமய சமரசக் கொள்கைகள், மூடக்கொள்கைகள் களைவு, குருபக்தி, பெண்ணடிமைத்தனம் நீக்கம் போன்றவற்றினை கூறலாம்.

தொகுத்து நோக்குமிடத்து இந்து சமயமானது மிகவும் தொன்மை வாய்ந்ததாகவும் அனைவராலும் பின்பற்றக்கூடிய ஒரு சமயமாகவும் இச்சமயமானது தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை அழியாது பலராலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும் ஒரு சமயமாகவும் இந்தியாவின் வட பகுதியிலே பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோற்றம் பெற்றாலும் தென்னாட்டில் பரவி அதனூடாக இலங்கை மற்றும் தமிழர்கள் வாழும் பல்வேறு உலக நாடுகளிலும் இச்சமயம் சிறப்பு பெற்று வருவதுடன் இலங்கையில் பௌத்த சிங்களவர்கள் தங்களது ஆலயத்தில் இந்து கடவுளாகிய கணபதி, முருகன் ஆகியோரை வைத்து வழிபட்டு வருவது மட்டுமன்றி இந்து கோயில்களுக்கு சென்று வழிபட்டு வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்துவாக வாழ்வோம்
இந்து தர்மம் காப்போம்!
நன்றி.

**பஞ்ச ஆரண்ய தலங்கள்**

திருக்கருகவூர் (முல்லை வனம்)
ஆலங்குடி
ஹரித்துவார மங்கலம்
அவளி நல்லூர்
திருக்கொல்லம்பூதூர்



**Thiruppamburam**

Lies 3 miles to the north east of Thiruveezhimizhalai temple. Here on the festival of Shivaratri , lord Shiva is told to come in the 3rd quarter of nigh

# தமிழில் மென்பொருட்கள்

"எங்கும் தொழில்நுட்பம் என்பதுவே பேச்சு அதுவும் தகவல் தொழில் நுட்பம் என்பதுவாய் ஆச்சு"

என்று பாடிப் பாராட்டும் அளவிற்கு தகவல் தொழில்நுட்பம் உலகெங்கும் விரிந்து பரவி அதிவேக ஆக்கிரமிப்புச் செய்து மனித குலத்தை வியப்படையச் செய்திருக்கிறது. "உலகத்தைக் கிராமமாக்கும்" விந்தையைச் செய்திருக்கும் இத் தகவல் தொழில்நுட்பம், எமது இனத்திற்கு எந்த விதமான பாதிப்பை அல்லது மேம்படுத்தலை ஏற்படுத்தப் போகிறது என்பதும் இ எம்மக்கள் முன் வைக்கப்பட்டிருக்கும் கேள்வியாகும். விரைவாய் வெகுவிரைவாய் உலகம் இத்துறையில் ஓடிக் கொண்டிருக்கிறது. இதே வேகத்தில் நாமும் ஓடி, தொடர்ந்தும் ஓடிக் கொண்டிருந்தால் தான் எம் இனம் வாழும். வளரும். ஓட முடியாமல், முடங்கி விட்டால், அல்லது ஈடுகொடுக்க முடியாது தயங்கிவிட்டால் தாழ்ந்துவிடுவோம்.

இதை உணர்ந்தஎம்மில் சிலர் தகவல் தொழில் நுட்பத்தை தமிழில் ஊட்டி, மக்களிடம் இந்த அறிவுத் தாகம் ஏற்பட உழைக்கிறார்கள் என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். இந்த வரிசையிலே தமிழில் மென் பொருட்கள் இல்லையே என்ற குறையை நீக்கும் பணிகளில் தமிழ் மொழியில் மென் பொருட்களைத் தயார் செய்து தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு தந்திருக்கிறார்கள். இவர்களது முயற்சிக்கு தமிழ் நலம் விரும்பும் ஒவ்வொரு தமிழ் குடிமகனதும் வாழ்த்தும், பாராட்டும் என்றும் உண்டு.

தமிழகத் தலைநகர் சென்னையில் இருந்து செயற்படும் 'சென்னைக் கவிகள்' தயாரித்து வழங்கி இருக்கும் மென்பொருள் CDD இங்கு குறிப்பிடத்தக்கவைபாகும். அவற்றில்,

பதமி 2.0



G.O 17 நியமத்திற்கமைய படைக்கப்பட்ட முதல் தமிழ் மென்பொருள் என்ற பெருமையைத் தட்டிக் கொண்ட பெருமை பதமி 2.0க்கு உண்டு. இன்று புதிதாய்ப் பிறந்தோம்" என்று புதுமைக்கு கட்டியம் கூறினான் பாரதி. மண்ணில் புதுமை, விண்ணில்புதுமை பொறியியல் புதுமை எதிலும் புதுமை. மானிட மேன்மை – பூத்திடும் புதுமையில் தான் அர்த்தப்படுகிறது. எங்கள் தமிழினமும் இதற்கு விதிவிலக்கல்ல. வயல்வெளியும் வியர்வைத் துளியும் விளைத்த புதுமை – புதுநெல்லாய், பொங்கலாய் பரிணமிக்கின்றது.

கணிப்பொறியும், தமிழ்மொழியும் விளைத்த புதுமை "பதமியாய்ப் பரிணமித்திருக்கிறது என்ற இதயத்தை ஈர்க்கும் அறிமுகத்துடன் தமிழர் மத்தியில் நடமாட வந்திருக்கிறது பதமி 2.0. தமிழால் எல்லாம் முடியுமா? என்ற சவாலை எதிர்கொண்டோர் பெற்ற வெற்றிக்கனிதான் பதமி 2.0. என்ற சொல்லாளர் (Word Processor).

அப்படி இதிலென்ன சிறப்பு என்போரும் இருக்கலாம். 4 வித விசைப்பலகைகள், ஒலிப்பியல் தட்டச்சு, உரோமானியப்படுத்தப்பட்ட தள அமைப்பு என அனைத்தும் உலகத் தமிழ் இணைய மாநாடு (1999) விதித்த தரப்படுத்தலுக்கு அமைவாக இருக்கின்றதென்பதும் பெருமைக்குரியதாகும் மற்றும் முக்கிய அம்சங்களாக

1. தமிழோடு ஆங்கிலத்தையும் உள்ளிடும் வசதி
2. எழுத்துருவகை (Fonts) தமிழில் 40+
3. கோப்பு, தொகு, பலகை, சீர், அஞ்சறை முதலிய இருப்பு பட்டி (Menu) மற்றும் இருப்பு தொடர்பான உதவித் தகவல்கள் அனைத்தையும் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் படியான எளிய தமிழ்.

4. வார்த்தைகளை சரிபார்க்கவும் ஏதுவாக சொல் திருத்தி (Spell Check)

5. வார்த்தைகளுக்கிடையில் சந்தி பிழை திருத்தம் செய்ய ஒரு அமைப்பு

6. ஒரே அர்த்தத்தைக் குறிக்கக் கூடிய வார்த்தைகளைக் காண்பதற்கு எளிமையான நிகண்டு அமைப்பு

7. ஒரே மாதிரியான உச்சரிப்பு சொற்களும் பல அர்த்தங்களைக் காண உதவும். "நரலம்" (Similar Sounds).

8. வார்த்தைகளை அகர வரிசைப்படுத்த உதவும் எளிமையான அகர வரிசை (Indexing)

9. ஒரு பத்தியில் உள்ள வார்த்தைகள், எழுத்துக்கள், வரிகள், பத்திகள் எவ்வளவு உள்ளன என்பதைக் கணக்கிட உதவும் எண்ணல் என்ற அமைப்பு. இதை வரைபடம் மூலம் காணும் வசதி (Marking Index)

10. முகவரிகளை அச்சடிக்க உதவும் "வில்லை" (Label)

11. ஒரே தகவலை பல்வேறு முகவரிகளுக்கு அனுப்புவதற்கு வசதியாக "அஞ்சலிணை" (Mailmage)

12. ஒரே கோப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட கோப்பினை இணைக்க உதவும் ஆவண் இணைப்பு (Merge Document) இப்படிப் பலப்பல.

சென்னைக் கவிகள் – காலத்தை வென்ற புதையலாகத் தந்திருக்கும் குறளமுது – கற்றோரும் மற்றோரும் கேட்டு, பார்த்து மகிழ வேண்டிய குறள் விளக்கமாகும். இந்த CD ன் உள்ளடக்கங்கள் :-




1. 1330 குறள்கள் – ஒலியோடு, ஒளியோடு
2. தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு, மலாய் மொழியில் உரைகள்
3. தமிழில் – பரிமேலழகர் உரை, மு.வ. உரை, பதின்கவனர் உரை, வெற்றி ஒரு வரி உரை.
4. திருக்குறள் தொடர்பாக வந்த நூல்கள் – நூல்வடிவிலேயே புத்தகத்தை புரட்டி ஒய்வாகப் படிக்கலாம். நூல்களில் சில




திருக்குறளும் சமயச் சார்பின்மையும்
திருக்குறளும் அரசியலும்
திருவள்ளுவர் ஓர் மருத்துவர்
திருக்குறளும் சுற்றுச் சூழல் பாதுகாப்பும்
திருக்குறளும் எயிட்சும்
திருக்குறளும் நுகர்வோர் பாதுகாப்பும்
சில அரிய சொற்களுக்கு – படக் காட்சி விளக்கம்

மொத்தத்தில் ஒரு குட்டி நூலகமே இந்த தட்டில் அடக்கம்

(சென்னைக் கவிகள் தந்த இன்னுமோர் பரிசு – அறிவோடு விளையாடு
'கணினியில் விளையாடு பாப்பா
கொஞ்சம் அறிவோடு விளையாடு பாப்பா
உன் தாய்மொழியோடு விளையாடு பாப்பா

இதை தரணிக்கு எடுத்துச் சொல்லடி பாப்பா என்று ஓர் புதிய பாப்பாப் பாட்டைப் பாடியிருப்பான் இதைப் பார்த்து அந்த மீசைக் கவிஞன் இன்றிருந்தால் .....

ஒரே CD ல் 6 விளையாட்டுக்கள் சிந்தனையைச் சீரமைக்க, ஞாபகசக்தியைப் பெருக்க, போராடும் குணம் படைக்க, பொது அறிவை வளர்க்க, கவலையை மறக்க என இந்த விளையாட்டுக்கள் உதவும். சிறுவர்களுக்கும், பெரியோர்க்கும் தான். (விளையாட்டுக்கள் : வல்லாரை, சிதறல், டிக்டாக்டோ, கபாலி, கொழுக்கு, போடீஸ்வரன்)


இலங்கை வாழ் தமிழ் மக்களும் இவற்றை இலகுவில் பெற்றுக் கொள்ள, Tamill cyber . com; சென்னைக் கவிகள் நிறுவனத்துடன் இணைந்து இவற்றை Tamileshop. com கம்பியூட்டர் டுடே, NetsNet, Quick Tech Academy ஆகிய முகவர்களினூடாக விநியோகிக்கப்படுகின்றது.

இம் மென்பொருட்களின் வரவு வேறுவேறு மென்பொருட்கள் வெளிவருவதற்கு ஊக்கத்தை அளிக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். சிறு துளி பெரு வெள்ளமாக ஆவதுபோலு சிறுசிறு முயற்சிகள் சேர்ந்து பெருவெற்றியை எம்மினத்திற்கு பெற்றுக்கொடுக்கும் என நம்புகிறோம்.

## *நவக்கிரக தலங்கள் – சமய குரவரால் பாடப்பெற்றவை*

கோயில்கள் அனைத்தும் சிவாலயங்களாக இருந்தாலும், அவை கிரக வழிபாட்டுக்கு பிரசித்தி பெற்றவை. இக் கோயில்கள் அனைத்தும் தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்திலேயே அமைந்துள்ள.

1. சூரியன் – சூரிய கோவில்
2. சந்திரன் – திங்களூர்
3. செவ்வாய் – வைத்தீஸ்வரன்
4. புதன் – திருவெண்காமு
5. வியாழன் – ஆலங்குடி
6. வெள்ளி – க்ஞ்சனூர், சிறிரங்கம்
7. ராகு – திருநாகேஸ்வரம்
8. சனி – திருநல்லாறு
9. கேது– கீழ்ப்பெரும்பள்ளம், காளஹஸ்தி



**Ambar(Ambal)**

Ambar now called Ambal is the last "Maadakkoyil" built by Kochengat chozhan. Sung by sambandar

# 20ம் நூற்றாண்டில் அணு ஆயுதமும் உலக வல்லரசுகளும்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி 'அணுயுகம்' என்றே அழைக்கப்படுகிறது. அந்தளவிற்கு அணு பற்றிய கருத்துக்களும், பாவனைகளும், பயன்பாடுகளும், அதேவேளை தீமைகளும் இன்றைய மக்களை இதுபற்றிய கவனத்தை ஈர்க்கும் வண்ணம் செய்துள்ளது."அவனின்றி ஓர் அணுவும்அசையாது" என்று இருந்த இவ்வுலகம், வியக்கும் வண்ணம் இந்நூற்றாண்டின் 1938ம் ஆண்டு டிசம்பர் மாதம் பேர்லின் நகரில் 'ஓட்டோ ஜான்' என்ற ஜேர்மனிய விஞ்ஞானி 'பிரிஸ்ட்ரஸ்மேன்' என்ற அணுவிஞ்ஞானியின் உதவியுடன் அணுவைப் பிளந்தார். அதே வேளை, 'எட்வர்ட் டெல்லர்' எனும் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி அணுவைப் பிளக்கும்போது ஏற்படும் ஆற்றலை இராணுவத்திற்குப் பயன்படும் வழியை உலகிற்கு அறிவித்தார்.

இவரது கண்டுபிடிப்புக்குப் பின் அணுசக்தியைக் கொண்டு மனித இன மேம்பாட்டிற்குப் பயன்படுத்தும் எண்ணற்ற வழிவகைகளை அறிவியலறிஞர்கள் கண்டறிந்தனர். இந்த அளவோடு நின்றிருந்தால் உலகில் மனித இனம் எண்ணற்ற நன்மைகளை அடைந்து, சமூக, மற்றும் நாகரிகப் பண்பாட்டின் உச்சநிலைக்குச் சென்றிருக்கும். ஆனால் இச் சக்தி துரதிருஷ்டவசமாக குரங்கின் கையில் பூமாலை கிடைத்தது போல உலகின் வல்லரசுகள் எனப்படும் கொழுத்த யானைகளின் கைகளில் அகப்பட்டு, இன்று உலகை உலுக்கும் ஓர் அபாயச் சக்தியாக மாறிவிட்டது.

மனித ஆற்றலால் மட்டும் போர்புரியும் நிலைமாறி புதிய கருவிகளின் கண்டுபிடிப்புகளும், அவற்றின் நவீன உற்பத்திகளும் இன்று ஈடு செய்ய முடியாத இழப்புக்களை ஏற்படுத்திவிடுகின்றது. அதிலும் ஆகாய விமானம், மற்றும் ஏவுகணைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்ட பின், நினைத்த இடங்களிலெல்லாம் நாசங்கள் நர்த்தனமாடத் தொடங்கின. இது போதாதென்று வம்படி வழக்காக வல்லரசுகள் பெருக்கி வரும் இவ்வணுக் குண்டுகள் மற்றும் நாசகார ஆயுதங்களும் சர்வதேச முறைமையில், நாடுகளிடையே சஞ்சலத்தையும், சலசலப்பையும் ஏற்படுத்துவதாய் உள்ளது. இவ்வல்லரசுகள் தமது 'அதிகாரச் சமனிலை'யைப் பேணிக் கொள்ள இவ்வாறு ஆயுதங்களை ஓர் சாட்டாகப் பயன்படுத்தி வருகின்றன.

இதில் வேடிக்கைக்குரிய விடயம் என்னவென்றால், இவ்வல்லரசு நாடுகள், தாம் இவ்வணு ஆயுதங்களைக் குவித்து வைத்துவிட்டு, 'சாத்தான் வேதம் ஓதுவதுபோல்' ஏனைய நாடுகளுக்கு இது தொடர்பான தடைகளை விதிப்பதும் மாநாடுகளைக் கூட்டுவதும் மேடைகளில் உரக்கப் பேசுவதும், அன்றாடம் நாம் காணும் கேலிக்கூத்துக்களாக உள்ளனவெனலாம். இதற்குரிய மாநாடுகளை தலைமுறை தலைமுறையாக, அவரவரின் பதவிக் காலங்களில் எத்தனை ஆண்டுகாலமாகச் செய்து வந்திருக்கிறார்கள் என்ற புள்ளிவிபரங்களை ஓர் ஆங்கிலப் பத்திரிகை பின்வருமாறு தந்துள்ளது.

| ஆண்டு | மாதம் | இடம் | கலந்துகொண்டவர்கள் |
|---|---|---|---|
| 1945 | பெப்ரவரி | ருஷ்யா | ரூஸ்வெல்ட் – ஸ்டாலின் |
| 1945 | ஜூலை | போஸ்டோம் | ட்ரூமன் – ஸ்டாலின் |
| 1955 | ஜூலை | சுவிற்சர்லாந்து | ஐசனோவர் –குருஷேவ் |

| | | | |
|---|---|---|---|
| 1959 | செப்டெம்பர் | வாஷிங்டன் | ஐசனோவர் – குருஷேவ் |
| 1961 | ஜுன் | வியட்னாம் | கென்னடி – குருஷேவ் |
| 1972 | மே | மொஸ்கோ | நிக்ஸன் –பிரஸ்னேவ் |
| 1973 | ஜுன் | வாஷிங்டன் | ருக்ஸன் – பிரஸ்னேவ் |
| 1974 | நவம்பர் | வாஷிங்டன் | பேள்ட் – பிரஸ்னேவ் |
| 1979 | ஜுன் | ஒஸ்ரியா | கார்ட்டர் – பிரஸ்னேவ் |
| 1985 | நவம்பர் | ஜெனிவா | ரீகன் – கொர்பச்சேவ் |
| 1988 | ஒக்டோபர் | ரெய்ஜாக் | ரீகன் – கொர்பச்சேவ் |
| 1987 | டிசம்பர் | வாஷிங்டன் | ரீகன் – கொர்பச்சேவ் |
| 1988 | மே | ரஷ்யா | ரீகன் – கொர்பச்சேவ் |
| 1991 | ஜுலை | மொஸ்கோ | புஷ் – கொர்பச்சேவ் |

மேலுள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 45 ஆண்டுகளுக்கும் மேலாக, உலக வல்லரசுத் தலைவர்கள் கூடிப் கூடிப் பேசியதன் விளைவு அணு ஆயுதங்கள் சிறிதளவேனும் குறைவதற்குப் பதிலாக அவை 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுகமாக' மேன்மேலும் நவீன தொழில் நுட்பக் கலையுடன் வளர்ச்சியடைந்ததுதான். இந்நூற்றாண்டில் உலக வல்லரசு நாடுகளிடம் மட்டும் 60,000க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

1988ம் ஆண்டு மே மாதம் ரஷ்யாவில் ரீகன் – கொர்பச்சேவ் ஒப்பந்தத்தின்படி கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகளை ஐரோப்பாக் கண்டத்திலிருந்து அணுச்சோதனைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதென முடிவெடுக்கப்பட்டது. அனால் இதில் வேடிக்கை என்னவென்றால் அதே ஆண்டு அதே மாதம் கியூபா தலைநகர் ஹவானாவில் ஆயுதக் குறைப்புப் பற்றிய விசேட மாநாடு கூட்டப்பட்டு அதில் மேற்குறித்த இரண்டு நாடுகள் உட்பட 100 நாடுகள் கலந்து கொண்டு அணு ஆயுத குறைப்பு பற்றி உரக்கப் பேசியதுதான்.

வல்லரசு நாடுகளின் கபட நாடகத்திற்கு இன்னுமொரு சிறந்த உதாரணம் அமெரிக்க ஜனாதிபதி ரீகன் காலத்தில் இடம்பெற்றதாகும். இவரது காலத்தில், உலக மக்களின் நலன் கருதி, அணு ஆயுதத்தில் சிலவற்றை ஒழிப்பதாக ஒப்புக் கொண்டார். ஆனால் அதனை இரண்டு மடங்காக ஈடு செய்யும் வண்ணம், அமெரிக்க செனற்றில் 1987.12.18 அன்று, 'மிகப் பயங்கரம்' என்று முன்னைய ஜனாதிபதி நிக்ஸனால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நரம்பு விஷவாயுக் குண்டுகளை உற்பத்தி செய்ய அனுமதி பெற்றார். இவ்வாறு இவ்வல்லரசுகள் தமது பலத்தைப் பெருக்கி மேலாண்மைச் செய்திட உலக மக்களுக்கு ஒருபுறம் வாலையும், மறுபுறம் தலையையும் காட்டும் தன்மையானது அணு ஆயுத ஒழிப்பு ஓர் கனவு என்பதை நிரூபிக்கும் விதமாகவே உள்ளது. இதற்கு இவை கூறும் காரணம் "வல்லரசு நாடுகளிடையே அணு ஆயுதங்கள் சமமான நிலையில் இருப்பதால் தான் பாரிய போர்கள் ஏற்படாமல் இருக்கின்றனவென்றும், ஆகவே பூரண அணு ஆயுதங்கள் இல்லாத உலகை எதிர்பார்ப்பதற்கு இல்லை" என்று 1987ம் ஆண்டு வாஷிங்டன் ஒப்பந்த முடிவில் ரஷ்யா ஜனாதிபதி கொர்பச்சேவ் அறிவித்துள்ளார்.

இவரது விளக்கம் இவ்வாறிருக்க, ஒரு குறிப்பிட்ட சக்தியுள்ள அணுக்குண்டு வெடித்தால், அதன் அழிவின் சக்தி என்ன என்பதை Science Today என்ற இதழ் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"ஒரு மெகா டன் எடையுள்ள சிறிய ஓர் அணுக்குண்டு வெடித்தால், 16km அகலத்திற்கு ஒளிக்கதிர்கள் தோன்றும்; கடுமையான வெப்ப அலைகள் பரவும்; சில விநாடிகளில் கடுமையான வெடிப்புகள் ஏற்படும். மின்சாரம் மற்றும் எலக்ரானிக் சாதனங்கள் யாவும் பழுதாகும்; நொடிப்பொழுதில், மனித இனம், மரம், செடி, கொடி யாவும் ஆவியாகும். என்று பீதியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளது. ஆனால் இவை எதுவுமே வல்லரசுகளின் கண்களுக்குத் தெரிவதுமில்லை. காதுகளுக்கு கேட்பதுமில்லை. இதனாலேயே அழிவின் அகோரத்தை ஹிரோசிமா, நாகராகி நகரங்களில் கண்ட பின்புகூட அவற்றின் அணு ஆயுத மோகம் தீராமலுள்ளதன் மூலம் அறியமுடிகின்றது. இந்நூற்றாண்டில் உலகின் மிகப்பெரிய அணுக்குண்டின் எடை 25,000 kg, இதன் அழிவின் சக்தி 50 மெகாடன். இப்பெரிய அணுவரக்கன் அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும், உலக மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கக் காத்துக்கிடக்கின்றான்.

இவை தவிர, 1986 ஆம் ஆண்டு ஏப்பிரல் 14ஆம் திகதி அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பெண்டகன்' தாம் லேசர் குண்டுகளைத் தயாரித்திருப்பதாகும் இதில் ஒன்று வெடித்தால் சில நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பிளாட்டின உலோகம் கூட உருகி ஓடும் திறமை வாய்ந்தவை என்று பெருமிதத்தோடு உலகறிய செய்தி வெளியிட்டுள்ளது. இவை தவிர இரசாயன அழிவு ஆயுதங்களாகிய (Mustera Gas, Sarim Taboon) பூமியை பிளக்கவல்ல (Penetrator) போன்றனவும் இருப்பதாகக் கூறப்படகின்றது. இதனோடு (Agent Orange) என்றழைக்கப்படும் இரசாயனக் குண்டுகள். 1965முதல் 1973 வரை தம் விஷத்தை மஞ்சள் மழையாகப் பெய்த வியட்நாம் மக்களின் உயிரைப்பறித்த கொடுமையை இவ்வுலகம் மறக்க முடியாது.

உலகின் வல்லரசுகள் என்று வர்ணிக்கப்படும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய இவ்வைந்து நாடுகள் மட்டும், 1945 முதல் இந்நூற்றாண்டுவரை 2048 அணுப்பரிசோதனைகளை நடத்தியுள்ளதாகவும், அவற்றில் அமெரிக்கா 1032, ரஷ்யா – 715, பிரான்ஸ் – 210ம பிரிட்டன் 45, சீனா 44 என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இன்றைய சர்வதேச முறைமையில், உலகின் மற்ற சிறிய, பெரிய நாடுகளும் அணு ஆயுதத் தயாரிப்புத்திறன் பற்றிவிட்டதுமன்றி, இவ்வாயுதங்களை உருவாக்கியும் வைத்துள்ளன. இதற்கு சிறந்த உதாரணம், இந்தியா 5 அணுஆயுத பரிசோதனைகளையும் அதற்குப் போட்டியாக பாகிஸ்தான் 6 அணுப்பரிசோதனைகளையும் அண்மையில் நடத்தி முடித்ததாகும்.

மிகை இராணுவ விஸ்தரிப்பு நிலைகொண்ட தலையாய இருவல்லரசு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா இரண்டும் தங்களது தற்காப்புக்கு என ஏறத்தாழ 40 ஆண்டுகாலமாய்த் தம் சக்தி அனைத்தையும் பயன்படுத்தி நவீன பாதுகாப்புக் கருவிகளின் உச்சத்துக்கே வந்துவிட்டன. ஆனால் இந்த 45 ஆண்டு காலமாய் அமெரிக்காவையோ அல்லது ரஷ்யாவையோ, எந்த ஒரு நாடும் தாக்கப் போவதாய் வாய் தவறிக் கூடச் சொன்னதில்லை என்பதோடு, இவ்விரு நாடுகளுக்கும் இடையே ஓர் எல்லைப்போர் கூட நடக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. இப்படியிருக்க இவ்வல்லரசு நாடுகள், திரைமறைவில் நின்று கொண்டு, ஏனைய நாடுகளுக்கு ஆயுத உதவிகளை வழங்கி, அவற்றின் உள்நாட்டு வெளிநாட்டுப் பூசல்களில் இவை குளிர்காய்கின்றன.

அந்த வகையில், வியட்நாம் போருக்குப் பின்னர், 8 ஆண்டுகள் நடந்த ஈரான் – ஈராக் யுத்தத்தின் மூலம், லண்டன் சர்வதேச ஆயுத சந்தைகளில் இடைத் தரகர்கள் மூலம் இடம்பெற்ற ஆயுத

விற்பனையில் வெளியுலகிற்கு தெரிந்த வரையில் ஒரு ஆண்டிற்கு 50 மில்லியன் டொலர்களுக்கு மேலாகும் என்று South எனும் பத்திரிகை செய்திவெளியிட்டிருந்தது. மேலும் 1984ல் 3ம் உலக நாடுகளுக்கு 2500 கோடி டொலர்கள் பெறுமதியான ஆயுதங்கள் விற்பனையாகியுள்ளன. ஈரான், ஈராக் போரில் 40 நாடுகள் ஆயுத விற்பனை செய்துள்ளன என்றும் இவற்றில் ரஷ்யா 1984ம் ஆண்டு மட்டும், 950 கோடி டொலருக்கு ஆயுத விற்பனை செய்துள்ளது என்றும் 100 கோடிடொலர் மதிப்புள்ள Silk Worm எனும் ஏவுகணைகளை விற்பனை செய்துள்ளது என்றும் Economist பத்திரிகை கூறுகின்றது.

இவற்றோடு அமெரிக்கா தனது பாதுகாப்புச் செலவை சிறிது குறைத்துக் கொண்டாலே ஒரு ஆண்டில் 2000 கோடி டொலர் மிகுதியாகும் என்று வாஷிங்டனில் சர்வதேசப் பாதுகாப்புப் பற்றிய ஆய்வாளர் பிரம்மா செலானி கூறிய கருத்து நோக்கத்தக்கது. இவ்வாறு ஆயுத உற்பத்தியினால் ஏனைய நாடுகளும் மக்களும் மட்டும் தான் பாதிப்புக்கு உள்ளாகின்றனரா? என்ற கேள்வி பொதுவாக எழலாம். இதற்கு பதில், இல்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் இவற்றை உற்பத்தி செய்யும் நாட்டு மக்களும் இதனால் பாதிப்படைகின்றனர். ஆனால் இவை உலகின் க;ணகளு;கு மறைக்கப்பட்டு விடுகின்றன. உதாரணமாக, அமெரிக்காவில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதத்தை ஆய்வு செய்தபோது, 1950–1969 வருடங்களுக்குள் அமெரிக்கா நடத்திய அணுக்குண்டுச் சோதனை, மற்றும் அணு உலைக் கதிர்வீச்சு காரணமாய் 40,000 குழந்தைகள் இறக்க நேர்ந்தன. உலகின் மிகச் சுதந்திரமான நாடு என்று போற்றப்படும் அமெரிக்காவிலேயே இச் செய்தியை வெளியிடப் பத்திரிகைகளை அரசு தடைசெய்துவிட்டது என Ernest Starm Class எழுதிய "Low Level Radiation என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு அணு ஆயுத உற்பத்தியானது தம் சொந்த மக்களை மண்ணுக்குள் வீழ்த்திய போதும், இவை தமது அதிகாரப் போட்டியை நிறுத்தி முன்வருவதில்லை. மாறாக அவற்றை மேலும் பெருக்கி தக்கவைத்துக் கொள்ளவே முயற்சிக்கின்றன. அந்த வகையில், நிலத்தில் மட்டுமன்றி நீரிலும், வானிலும் கூட தமது ஆதிக்கத்தைச் செலுத்த முனையும்போக்கை கெடுபிடி யுத்த காலப்பகுதியில் பெரிதும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மேலும், அமெரிக்க, ரஷ்யக் கடற்படைகளின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் இவ்வுலகக் கடலின் பெரும் பெகுதியில் உலவி வந்தன. ஐரோப்பாவில் Nor Folk என்ற தளத்திலிருந்து அட்லாண்டிக் கடற்பகுதிகளிலும் ஹவாயிலுள்ள Earl Harbour தளத்தில் இருந்து கிழக்கு பசுபிக் கடற்பகுதிகளிலும் இத்தாலியில் Gatea என்ற இடத்திலிருந்து மத்திய தரைக் கடல்களிலும், இந்து சமுத்திரம், மற்றும் அரபிக் கடலிலும் அணுச்சக்தி போர்க்கப்பல்கள் உலவி வந்தன.

உலகில் தம் கடலாதிக்கத்தைக் காட்டும் வண்ணம் நடத்தி வரும் அணுச்சக்தி போர்க்கப்பல்களின் உலா உலகின் ஏனைய நாடுகளுக்கு எத்தகைய அழிவைத் தரப்போகின்றன என்பது பற்றியோ, இவற்றின் பயத்தை விட இதனால் எழுகின்ற அணுக்கதிர் வீச்சு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றியோ இவ்வல்லரசுகள் எவ்வித அக்கறையும் கெண்டதாகத் தெரியவில்லை. மாறாக, தமது நலன்களைப் பேணுவதிலேயே இவை குறியாக உள்ளன.

அந்த வகையில், அமெரிக்கா, அணு ஆயுத விபரங்களைப் பற்றி அறிய 35 நாடுகளில் 92 மையங்களில் இரகசிய அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்விபங்களை அமெரிக்கா அணுச்சக்தி

விஞ்ஞானிகளே அமெரிக்க அறிவியல் ஏடு ஒன்றில் வெளியிட்டுள்ளனர். இதன் தலைமைச் செயலகம் புளோரிடாவிலுள்ளது என்றும், இவ்வேற்பாடுகள் ரஷ்யாவை மட்டுமன்றி உலக நாடுகள் அனைத்தையும் கண்காணிக்கவும், இதன் மூலம் அமெரிக்காவின் ஏகபோக அணு ஆயுத நிலையை தக்க வைத்துக் கொள்ளவும் முடியும் என்றே, இவ்வேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டன. இதற்கு 'Spy in the sky' என்ற சாட்டலைட் பயன்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதிலும் பெரிய சோகம் என்னவெனில் அண்மையில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அணுப்பரிசோதனை இறுதி நேரம் வரை அமெரிக்காவுக்குத் தெரியாதிருந்தமைதான்.

மிக, மிக நவீன பாதுகாப்புத் தொகுதியுடன் கூடிய அமெரிக்க அணு ஆயுதங்களே, அதன் சேமிப்புக் கிடங்குகளில் பல தடவைகள் விபத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. இவ்வணு ஆயுதங்கள் எவ்வளவு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தாலும் விபத்தில் ரேடியோ கதிர்வீச்சை உண்டாக்கி விடுவதாக, 'சிட்னி ட்ரேன்' என்பவரது தலைமையிலான விசேஷ கமிட்டி அறிவித்துள்ளது. ஆனால் அணு ஆயுத நாடுகள் இவ்விபத்துக்களை தம் நாட்டு மக்களுக்குக் காட்டிக் கொள்வதுமில்லை. காட்டப் போவதுமில்லை. திரைமறைவில் தினம் தினம் ஆயுத உற்பத்தியை அதிகரிக்கவே இவை முன்னிற்கும்.

இவ்வாறு, வல்லரசுகளின் அதிகாரப் போட்டியும், சர்வதேச முறைமையில் பலமானதாகவும், நீடித்தும் நிலைத்தும் நிற்க வேண்டும் என்ற எண்ணப்பாடானது ஆயுதக் குவிப்புகளை மட்டுமன்றி, மனித அழிவுக் குவிப்புக்களுக்கும் இடமளிக்கின்றன என்பது மட்டுமன்றி, இயற்கை, இவ்வுலக மக்களுக்கு சிறந்த பாதுகாப்பாக வான்வெளியில் தந்த ஓஸோன் மண்டலமும் அழிவை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஓஸோன் மண்டலம், வான்வெளியின் ஓர் பாதுகாப்பு மண்டலம் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். ஆனால் இப்பாதுகாப்பு மண்டலத்தில் இன்று ஓட்டைகள் விழுந்துள்ளதையும் இதனால் உலக மக்கள் பல அழிவுகளையும், துன்பங்களையும் சந்திக்க நேர்டும் என்றும் விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகிறார்கள். இம்மண்டலத்தில் விரிசல்கள் ஏற்பட அணுக்கதிர்வீச்சுகளும் முக்கிய காரணிகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, உடல், உயிர் அழிவுகளை மட்டுமன்றி, இயற்கை அன்னையிலும் இழிவை ஏற்படுத்தும், இந்த அணு அரக்கனின் கோரத் தாண்டவம் வல்லரசுகளால் மேலும் மேலும் வளர்க்கப்படுகின்றன. இதனால் ஏற்படும் பல்வேறு அழிவுகளையும், பாரிய அனர்த்தத்தையும் தவிர்ப்பதோடு, நாடுகளிடையே மோதல்கள், பிணக்குகள் என்பவற்றை தவிர்ப்பது அவசியம் என்று காலங் காலமாக உணரப்பட்டு வந்துள்ளது. அதற்குரிய வெளிப்பாடாக பல உடன்படிக்கைகளும் மாநாடுகளும் கூட்டப்பட்டன. சில தோல்வி கண்டு கலைக்கவும் பட்டன. இறுதியில், பலராலும் பல மாதங்களாகக் கூடிக்கூடி பேசியதன் விளைவாக இன்று 50 ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடி முடிந்துள்ள ஐ. நா. சபை உருவாக்கப்பட்டது. அந்த வகையில் இதன் முக்கிய பணி நாடுகளிடையே அமைதியைப் பேணுவதோடு, சர்வதேச முறைமையை அபிவிருத்தியடையச் செய்வதுமாகும். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 3ம் உலக யுத்தமொன்று ஏற்படுவதைத் தடுப்பதே இதன் பிரயாசை. இப்பேராசை எவ்வளவு காலம் நீடிக்கும்? இதன் பணி நிறைவேறுமா? என்பது போன்ற கேள்விகளுக்கு காலமே பதில் சொல்லும். ஐ.நாவின் அமைதி காக்கும் பணியில் இன்று 3வது உலக

யுத்தம் மாபெரும் யுத்தமாக வெடிக்காவிட்டாலும், உலகுக்கு தெரிந்தும், தெரியாமலும் 300 குட்டி யுத்தங்கள் நடந்து கொண்டு தான் உள்ளன என்பதை மறுப்பதற்கு இல்லை. அதிலும் 1990, 1991 களில், இடம்பெற்ற ஓர் நிகழ்வு ஐ.நாவின் பணி பற்றி சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளன.

ஈராக் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து நடாத்திய தாக்குதல்கள் இது குறித்த பல கேள்விகளை எழுப்பியுள்ளன. வல்லரசுகளான இவ்விரு நாடுகளும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி ஈராக் மீது அதிகாலை வேளையில் குண்டு மழை பொழிந்தன. இத் தாக்குதல்களில் 200 ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஈராக்கின் பொது மக்களும் சொத்துக்களும் பாரிய சேதங்களுக்கு உள்ளாயின. இப்பாதகச் செயலை உலக நாடுகள் பலவும் கண்டித்த போதும், ஐ.நா.வால் இது குறித்து கவலையும், வருத்தமுமே தெரிவிக்கப்பட்டது. இதன்தற்போதைய செயலாளர் கோஃபி அன்னன் இது பற்றி கூறும் போது பாதுகாப்புச் சபையில் [Security Council] இத் தாக்குதல் குறித்து அனுமதி எதுவும் பெறப்படவில்லை என்று கூறியுள்ளார். அப்படியாயின் 200க்கும் மேற்பட்ட நாடுகள் அங்கம் வகிக்கம் இச் சபையின் அதிகாரம் தனியொரு கிளிண்டனிடமும், டொனி பிளேயரிடமும் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்தா? இத்தகைய தான்தோன்றித் தனமான போக்கு தொடருமானால், உலக அமைதியை யார்? எவ்விதம் நிலைநாட்டுவது? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

அமைதி விரும்பும் நாடுகளே ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக முடியும் என்ற அடிப்படைக் கொள்கை கரைந்து போய், அணு ஆயுதங்கள் பெற்ற நாடுகளும் அதன் ஆதரவு நாடுகளுமே ஐ.நா. சபையில் ஓர் நல்ல அந்தஸ்தைப் பெற முடியும் என்ற நிலைக்கு இறங்கி வந்துள்ள நிலைமை, உலக அமைதி விரும்பும் மக்களுக்கு ஓர் தலைகுனிவே. எனவே, இனி வரும் காலத்திலாவது உலக மக்கள் போர்க் காலங்களில் உயிர் தப்பவும், உலக நாசகார ஆயுதங்களிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான ஒரே வழி 'உலகளாவிய அணு ஆயுத ஒழிப்பே' இதனை ஐ.நா.சபை முன்னின்று நடத்துவதற்கான ஒத்துழைப்பையும், உதவியையும் வல்லரசு நாடுகள் உட்பட அனைத்து நாடுகளும் வழங்க முன்வரவேண்டும்.

அது மட்டுமன்றி அணு ஆயுதம் முதல், இரசாயனக் கதிர்வீச்சு மற்றும் அனைத்து மனித குல விரோத நாசகார ஆயுதங்களும் உலகளவில் ஒழிக்கப்படவும், எதிர்காலத்தில் நாடுகள் இவற்றை உற்பத்தி செய்யவோ, கையிருப்பில் வைத்துக் கொள்ளவோ இடந்தராதவாறு 'சர்வதேச போர் ஆயுதக் கட்டுப்பாட்டுக் கழகத்தை உருவாக்கி, அவற்றை கண்காணிக்கவும் உறுதி செய்திட வேண்டும். உலக நாடுகளின் வல்லரசுத் தன்மை, அதிகாரப்பலம் என்பது. அந்நாட்டு மக்களின் அறிவு பலத்தால், பொருளாதார பலத்தால், மக்களின் புஜபலத்தால் மக்களின் இன்னுயிரை மண்ணுக்களிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள இடந்தரலாகாது. இக்கனவு நனவாக வல்லரசுகளின் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் அவை ஒத்துழைக்குமா? என்பது இனிவரும் காலத்தையும், சர்வதேச நிலைமையையும் பொறுத்ததே என்பது கண்கூடு.

**வி. வத்சலாதேவி**
4ம் வருடம்
கலைப்பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

# வாழ்க்கையைப் பண்படுத்தும் இந்து சமயம்

வாழ்க்கை எனும் சொல்லின் பொருளை உன்னிப்பாகப் பார்க்கில் வாழ் எனும் சொல்லின் அடியாகப் பிறந்தது. வாழ் எனும் சொல்லின் பொருள் என்ன? என்றும் நன்றாயிரு என்பது பொருள். என்றும் நன்றாயிருக்க சில நெறிகளை நாம் கடைப்பிடித்து வாழ்வது அவசியம். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வழிப்படுத்தலில் சமயங்கள் முன்னிலையில் நிற்கின்றன. இந்த சமயங்களுக்கெல்லாம் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாக இந்து சமயம் விளங்குகிறது. வேதம் எனும் ஆலம் விதையில் முளைவிட்டு காலந்தோறும் நிகழ்ந்த சமுதாய வரலாற்று பரிணாமங்களினூடாக வெளிவந்து இன்றைய அணுயுகத்தின் சவால்களையும் எதிர்கொண்டு நிற்கும் இந்து சமயமானது மனித வாழ்வை நெறிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்து மதம் எந்தக் காலத்திலும் ஏனைய இனத்தவரையோ, மதத்தினரையோ குறைகூறுவதில்லை. அது எல்லோரையும் ஒரே தன்மையிலேயெ நோக்குகின்றது. சமயங்களின் கொள்கைள் வேறுபடலாம். அவை ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றலாம். ஆனால், சமயமனப்பான்மை அவைகளுக்கெல்லாம் ஒன்றேதான். இந்துமதமானது அனைத்தையும் தன்னுள் அடக்கி ஒன்றுமை காண முயல்கிறது. எனவே இந்து மதத்தை அன்பு மதம் என்று கூடக்கூறலாம். இதனையே சுவாமி விவேகானந்தர் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வருகின்ற பல நதிகள் ஒரே இடத்தில் சங்கமம் ஆவதைப் போன்று எல்லா சமயங்களின் இறுதி நோக்கமும் இறைவனை அடைவதாகும் எனக் கூறினார். மனிதனின் ஆன்மீக உணர்வுகளை ஒழுங்குபடுத்தி அவனைச் சரியான பாதையில் செல்வதற்கு இந்துசமயம் துணைபுரிகிறது. மனிதன் இறுதியாக முக்தியடைய வேண்டும் என்பதைவிட அவன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது நமது மதம்.

இறைனிடம் பக்தி வைக்கவேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். அந்தப பக்தி நெறிக்கு ஆழ்ந்த நம்பிக்கையே காரணமொகும். அந்தப் பக்தியார்ல ஒழுக்கம், மன அமைதி , மன ஒருமைப்பாடு என்பன ஏற்படுகின்றன என்பது இந்து மதத்தத்துவமாகும். இந்து மதத்தின் எந்தவோர் அம்சமும் ஒழுக்கத்தையே போதிக்கிறது. ஏனையவர்களின் கொள்கைகள் நம்மைப் பிரித்தாலும் பக்தி உணர்பு நம்மை ஒன்று சேர்க்கிறது என்கிறது இந்துமதம். இதனை நாம் அறிந்து கொண்டால் சமயத்தின் காரணமாகச் சச்சரவு ஏற்பட நியாயம் இல்லை.

இந்துசமய நூல்கள் கூறும் உயர்தத்துவ கருத்துக்களை நாம் உட்கொள்ளவேண்டும். சிலர் இந்நூல்களில் கூறப்படும் கருத்துக்களைக் கேட்டு மூடக்கதை, பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்பார்கள் எம்மைப் பொறுத்தவரை கூறப்பட்டிருக்கும் தத்துவப்பொருள் முக்கியமே தவிர கதை முக்கியமல்ல. வேதங்கள், இதிகாச புராணங்கள், உபநிடதங்கள், நாயன்மார் வரலாறுகள், ஞானியர் வராறுகள் உயர் கருத்துக்களைப் போதிப்பன வாழ வழி காட்டுபவன.

மேலும் சமயத்தின் பங்கு காரணமாக மக்கள் மத்தியில் கலை வளர்ச்சி மேம்பட்டு விளங்குகிறது. கலைக்கு அதிபதியாம் சரஸ்வதி கையில் வீணையும், நந்தியின் கையில் மத்தளமும், நாரதர் கையில் யாழும், சிவனின் திருநடனமும் எமது சமயம் கலையுடன் கொண்ட தொடர்பை புலப்படுத்துகின்றன. மக்கள் மத்தியில் பாரம்பரியக் கலைகளான பரதநாட்டியம், நாட்டுக்கூத்து, வீணை வாசித்தல் போன்ற கலைகள் இந்துசமயத்தின் செல்வாக்கு காரணமாக வளர்ச்சி அடைந்தன.

ஆதிகாலந்தொட்டே இருந்த வந்த ஒன்று பெண் அடிமை, ஆனால் இந்து மதம் தெய்வீக வடிவமாகப் பெண்ணை வைத்து வழிபட வகை செய்கிறது. இந்து சமயத்தில் சக்திக்குத் தனி மரியாதை

உண்டு. கேதார கௌரி விரதம், நவராத்திரி போன்ற விழாக்கள் சக்திக்காக நடாத்தப்படுகின்றன. மற்றும் பெண்களின் ஒழுக்க நெறியில் ஒன்றான கற்பு என்ற அற்புத நெறியைப் பெண்களும், மனைவியைத்தவிர அனைத்துப் பெண்களையும் அன்னை எனப் போற்றும் உயர்ந்த நெறியை ஆண்களும் கடைப்பிடிக்கக் கூறுகின்றது. எனவே இந்துமதம் பெண்களுக்குப் பெருமமையளிக்கிறது என்பதில் ஐயமில்லை

இன்றைய விஞ்ஞான யுகத்தில் காணப்படுகின்ற பல அரிய கண்டுபிடிப்புக்கள் எமது சமயத்தில் கடைப்பிடிக்கப்படும் செயல்களின் விளக்கமாகவே காணப்படுகின்றன. இந்துக்களின் சிவசின்னமான விபூதி ஆனது மேனி எங்கும் பூசும்பொழுது எமது சருமத்தில் உள்ள தொற்றுக் கிருமிகளை அழிப்பதாகவும் சந்தனத்தை நெற்றிப்பொட்டில் அணியும்போது நரம்பு மண்டலம் குளிர்ச்சி பெறுவதாகவும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து கருத்து வெளியிட்டுள்ளனர். மேலும் மந்திரங்கள் உச்சரிக்கப்படும்போது மனம் ஒருமுகப்படுத்தல், பொறுமை, சீரான சுவாசம் ஏற்படுகின்றது. தியானத்தின் மூலம் மன அழுத்தம், இரத்த அழுத்தம்,இருதய நோய் போன்ற கொடிய நோய்களில் இருந்து விடுபடலாம் என்பது இன்றைய அறிவியலாளரின் கருத்துக்களாம்.

சமயத்திற்கும் வாழ்க்கைக்கும் நெருங்கிய பிணைப்பேற்படும்போது சமயம் வாழ்க்கை நெறியாக விளங்குகிறது. கால மாற்றங்கள் வாழக்கை நெறியில் மாற்றங்களை ஏற்படுத்தும்போது சமய நெறி முறைகளும் அநுட்டானங்களும் வளைந்து கொடுத்தல் அவசியமே. உலகிலேயே மிக நீண்ட காலப் பாரம்பரியத்தைக் கொண்ட இந்துமதத்தின் வரலாற்றுக் காலகட்டங்களை கூர்ந்து நோக்குமிடத்து காலமாற்றங்களும் அரசியல் பொருளாதார வளர்ச்சி நிலைகளுக்குமேற்ப நெகிழ்ந்து கொடுத்தும் காலந்தோறும் புதிய கருத்துக்களை ஏற்றும் பரிணாமம் பெற்று வந்துள்ளதை அவதானிக்கலாம்.

எனவே நடைமுறை வாழ்க்கைக்கேற்ப, மடமைத்தனமான சம்பிரதாயங்களையும் கட்டுப்பாடுகளையும் நீக்கி பிற சமூகத்தவரின் மதங்களையும் தெரிந்த கொள்வதுடன் எம் இந்து மதத்தையும் பேணி, நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை அளிக்கக்கூடிய கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வோமாக.

பவானி மலர்க்கொழுந்து
1 ம் வருடம் வர்த்தகம்
முகாமைத்துவ நிதிப் பீடம்.

**அஷ்ட வீரட்டானம் கோவில்கள்** ...... ***சமய குரவரால் பாடப் பெற்றவை***

சிவபெருமான் தன் மகா சக்தியினால் தீமைகளை அழித்த தலங்கள். இவ்வாலயங்கள் எட்டிலும் எழுந்தருளியுள்ள மூர்த்தியை வீரட்டானேஸ்வர் என்று அழைப்பர்.

1. திருக்கோவிலூர்
2. திருவேற்குடி, ஜலந்திரன் சம்ஹாரம்
3. திருக்கொறுக்கை
4. திருப்பரியலூர், தக்ஷ சம்ஹாரம்
5. வழுவூர் கஜமுகாசுரன் வதம்
6. திருக்கடையூர், இயமன் தண்டிக்கப்பட்டது
7. திருவடிகை, திரிபுர சம்ஹாரம்
8. கண்டியூர், பிரம்மசிர காண்டம்

# இலங்கையின் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்கள்

இலங்கையிலுள்ள மதங்களில் மூத்தமதமாக கொள்ளப்படுவது இந்து மதமாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இந்து மதச் செல்வாக்கும் இந்து பண்பாட்டின் கூறுகளும் இலங்கையில் காணப்பட்டது என்பதனை இலக்கியங்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்கின்றோம். இலங்கையின் எத் திசைக்கு நாம் சென்றாலும் அங்கு ஓர் இந்து ஆலயம் இருப்பதனை காண்கின்றோம். அந்த வகையில் ஈழத்தின் பல்வேறு இந்து ஆலயங்கள் பிரசித்தி பெற்றனவாக விளங்குவதனை காணாம். அவற்றுள் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம் போன்ற சிவாலயங்களும் நல்லூர், கதிர்காமம், மண்டூர், செல்வச்சந்நிதி போன்ற முருகன் ஆலயங்களும், நயினாதீவு நாகபூசணி அம்மன், மாத்தளை முத்துமாரியம்மன் போன்ற சக்தி ஆலயங்களும் குறிப்பிடத்தக்கவை. அவற்றினுள் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை நோக்குவோம்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலை என்னும் ஊரில் அமைந்துள்ள மிகவும் புராதனமான சிவாலயமே திருக்கோணஸேஸ்வரம் ஆலயம் ஆகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் சிறப்புக்கள் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு ஆலயமாக இவ்வாலயம் திகழ்கின்றது. இவ்வாலயம் அமைந்துள்ள குன்று 'தட்கிணகைலாய திரிபுரம்' எனவும் அழைக்கப்படும். இவ்வாலயத்தின் வரலாற்றினை பழம்பெரும் இலக்கியங்களின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. எனினும் இவ்வாலயம் தொடர்பான ஒரு திட்டமிட்ட வரலாறு இன்று வரை கிடைக்காமலேயே உள்ளது. இருந்த போதிலும் காலா காலமாக நம்பப்பட்டுவரும் ஐதீகங்களின் துணைக்கொண்டு இவ்வாலயத்தின் தொன்மையினை நாம் அறிந்து கொள்ளலாம். இதிகாசங்களில் ஒன்றாகிய இராமாயணம் தனது பாத்திரங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்ற இராவணன் இலங்கையின் வேந்தன் எனவும் திருகோணமலையில் ஒரு சிவலிங்கத்தினை வைத்து வழிபட்டான் எனவும், கூறப்படுகின்றது. இதில் இருந்து திருக்கோணேஸ்வரர் ஆலயம் இராமாயண காலத்திற்கு பழமை வாய்ந்தது என்பதனை நாம் அறிந்து கொள்ளலாம். இலங்கையின் வரலாற்று நூலாகிய மகாவம்சத்தில் திருக்கோணேஸ்வரம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பல்லவர் காலத்தில் வாழ்ந்த சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்களால் பாடப்பெற்ற தலமாகவும் இத்தலம் விளங்குகின்றது. தமிழ் நாட்டினை சோழ மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் திருக்கோணேஸ்வரம் சிறப்புப் பெற்று விளங்கியது. அத்துடன் பாண்டிய மன்னர்களது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்களால் பாடல் பெற்ற தலமாகவும் இத்தலம் விளங்குகின்றது. தமிழ் நாட்டினை பாண்டிய மன்னர்கள் அட்சி செய்த காலத்தில் ஈழத்தில் இவ்வாலயம் அந்தந்த அரசர்களால் போற்றப்பட்டு வந்தது.

மேலும் சோழ இளவரசராகிய குளக்கோட்டன் இவ்வாலயத்தை புனரமைத்து பாபநாச தீர்த்தக் கரையையும் கட்டுவித்தான் என சோழகால கல்வெட்டு கூறுகின்றது. மிகவும் புராதனமான வரலாற்றினைக் கொண்ட இவ்வாலயம் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்டதுடன் பலபெறுமதியான பொருட்களும் சூறையாடப்பட்டன. 1963ம் ஆண்டளவில் ஆலயம் குடமுழுக்கு செய்து வைக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் இறைவன் கோணேஸ்வரர், இறைவி மாதுமையார், தீர்த்தம் பாபநாசமும் ஆகும், அலைகடல் சூழ்ந்து இயற்கைத் துறைமுகமும் ஒருங்கே அமையப் பெற்று விளங்கும் கோணேஸ்வரர் பெருமானை தன் மனக் கண்ணில் கண்டு இராமேஸ்வரத்திலிருந்து சம்பந்தரும், சுந்தரரும் மனம் உருகப் பாடியது இங்கு குறிப்பிடத்தக்கது.

திருக்கோணஸ்வர ஆலயத்திற்கு இணையான பழமை, பெருமை வாய்ந்தது திருக்கேதீஸ்வரம் ஆகும்.

இது மன்னார் மாவட்டத்தில் மாந்தை என்று அழைக்கப்படுகின்ற மாந்தோட்ட நன் நகரிலே மூர்த்தி தல, தீர்த்தச் சிறப்புக்கள் ஒருங்கே அமையப் பெற்ற ஆலயமே திருக்கேதீஸ்வரம் ஆகும். இலங்கையில் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்தது. ஐதீகங்களின் படி இராமன், மண்டோதரி, அகத்தியர், போன்றோர் இவ்வாலய இறைவனை வணங்கியதாக அறிய முடிகின்றது.

வரலாற்றுத் தரவுகளின் படி மகாவம்சமானது இவ்வாலயத் தொன்மையைப் பற்றி கூறுகின்றது. விஜயன் இலங்கையை ஆட்சி செய்த போது இலங்கையில் நான்கு திசைகளிலும் நான்கு ஆலயங்கள் காணப்பட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அதில் வடமேற்குக் கரையில் அமைந்திருந்த ஆலயமே திருக்கேதீஸ்வரம் ஆகும். இவ்வாலயத்தின் தொன்மையினை அறிந்து கொள்ள தட்கிணகைலாய மான்மியம் என்ற நூலில் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன.மேலும் இந்நூல் இத் தலத்திற்கு இணையான புண்ணிய தலம் முன்னெப்போதும் உண்டானதும் இல்லை இனி உண்டாகப் போவதுமில்லை எனக் கூறுகின்றது.

மாந்தோட்ட துறைமுகம் இலங்கையின் மிகவும் பழமை வாய்ந்த ஒரு துறைமுகமாக அக் காலத்தில் விளங்கியது. அக்காலத்தில் பூர்வீக குடிகளின் ஒரு சாரராகிய நாகர் இவ்வாலய இறைவனை வழிபட்டு அவனுக்கு நாகநாதன் என்ற பெயரினை வழங்கினர். கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சைவ நாயன்மார்களில் பெரும்பான்மையினர் இவ்வாலயத்தின் சிறப்புக்களை பதிகங்களாகப் பாடிச் சென்றுள்ளதை பெரியபுராணத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு பழம் பெருமை வாய்ந்த இவ்வாலயம், பதினோராம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகநாவலர், பசுபதி செட்டியாரின் துணை கொண்டு புனரமைக்கப்பட்டது.

இத்தல இறைவன் கேதீஸ்வரர், இறைவி கௌரி அம்மை, தீர்த்தம் பாலாவி ஆகிய மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன இணையப் பெற்ற ஓர் ஆலயமாக இது விளங்குவதனால் இவ்வாலயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கொள்ளப்படுகின்றது.

> "மன்னாருக்கு சமீபமாக மாந்தோட்டத்தில்
> திருக்கேதீஸ்வரம் என்னும் தேன்பொந்து
> ஒன்று உள்ளது. அங்கு அருமருந்து ஒன்று
> உள்ளது. அதனை சென்றடையுங்கள்.
>
> (நாவலர் கூற்று)

இலங்கையில் வரலாற்று புகழ்மிக்க தலங்களுள் முன்னேஸ்வரமும் ஒன்றாகும். இவ்வாலயம் இலங்கையின் மேற்குப் பகுதியில் சிலாபம் என்னும் ஊரில் அமைந்துள்ளது. இது ஒரு சிவன் கோயிலாக விளங்குகின்றது. புராதன காலத்தில் இவ்வாலயம் அழகேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இத்தல வரலாற்றை தட்சிண கைலாய புராணம், முன்னேஸ்வரர் பாமாலை, முன்னேஸ்வர மான்மீகம், முன்னேஸ்வரர் அந்தாதி போன்ற நூல்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் கொண்டு இவ்வாலயம் சீருடனும், சிறப்புடனும் விளங்கி வந்தது. இராமன், வியாசர் என்போர் இவ்வாலய இறைவனை வழிபட்டதாக அறிய முடிகின்றது. இலங்கையை ஆண்ட விஜயன் இவ்வாலயத்திற்கு திருப்பணிகள் செய்ததாக மகாவம்சம் கூறுகின்றது. விஜயனைத் தொடர்ந்து குளக்கோட்டன் 6ம் பராக்கிரமபாகு, 9ம் பராக்கிரமபாகு, கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் போன்ற மன்னர்கள் இவ்வாலயத்திற்கு திருப்பணிகள் செய்ததாக அறிய முடிகின்றது.

ஈழத்தில் என்றுமில்லாதவாறு பிரமாண்டமான கற்பகிரகமும் ஸ்தூபிகளும் அமைக்கப்பட்டு இது விளங்குகின்றது. இவ்வாலயத்தின் கட்டடக் கலை தென்னிந்திய பாணியை ஒத்து காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் முக்கியமான ஒரு சிறப்பு யாதெனில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் விக்கிரக அந்தஸ்து கொடுப்பதாகும்.

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர்களால் இலங்கையிலிருந்த பல ஆலயங்கள் அழிக்கப்பட்ட பொழுது முன்னேஸ்வரமும் தப்பவில்லை. இங்கிருந்த பல விக்கிரகங்கள் சூறையாடப்பட்டன.

இத்தல இறைவன் முன்னைநாதர், இறைவி வடிவாம்பிகை, தீர்த்தம் மாயவன் ஆறுமாகும். அந்நிய ஆட்சியின் போது அழிபாடுகளுக்கு உள்ளானதை தொடர்ந்து ஏற்பட்ட புனரமைப்பு முயற்சிகளினால் 1965ம் ஆண்டு இவ்வாலயம் மீண்டும் குடமுழுக்குச் செய்து வைக்கப்பட்டது. இதுவே நாம் காணும் முன்னேஸ்வரர் ஆலயமாகும்.

இலங்கையின் வடக்கிலுள்ள யாழ்ப்பாணத்தை அடுத்து கீரிமலை என்ற குன்றில் அமைந்துள்ள சிவாலயமே நகுலேஸ்வரம் ஆகும். இவ்வாலயம் புராதன சிவாலயமாகும். காலா காலமாக நம்பப்பட்டு வருகின்ற ஐதீகப்படி பிறவியிலேயே கீரிமுகம் பெற்றிருந்த தமிழ்நாட்டு 'மாருதபுரவீகவல்லி' என்ற இளவரசி இப்புண்ணிய தலத்தில் நீராடி கீரிமுகம் மாறி மனிதமுகம் பெற்றாள் என அறிய முடிகின்றது. இதன் காரணமாகவே இந்த இடத்திற்கு கீரிமலை என்ற பெயரும் உண்டு. இந் நிகழ்விற்கு முன்னர் இவ்விடம் திருத்தாம்பலம் என அழைக்கப்பட்டது. இதன் பொருள் நகுலகிரி என்பதாகும். இவ்வாலயம் ஆரம்ப காலத்தில் நகுல முனிவர்களால் பூஜிக்கப்பட்டது என்ற ஒரு ஐதீகமும் காணப்படுகின்றது. இவ்வாலய இறைவன் நகுலேஸ்வரர், இறைவி நகுலாம்பிகை, தீர்த்தம் நகுலகிரியும் ஆகும்.

இலங்கையில் தென் திசையிலிருந்து தசமகரகம என்ற பகுதிக்கு அப்பால் 15 மைல் தொலைவில் மாணிக்க கங்கையை அடுத்து அமைந்துள்ள திருத்தலமே கதிர்காமம் ஆகும். இது மிகவும் பழமை வாய்ந்த முருகன் தலமாக விளங்குகின்றது. இவ்வாலயம் இந்துக்களுக்குரிய வழிபாட்டுத்தலமாக மட்டுமன்றி பௌத்தர்களினதும் பிரதான வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது. இத்தலம் மிகவும் பழமை வாய்ந்தது எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வெற்றி கொள்ள வேண்டும் என்று நேர்த்தி வைத்த சிங்கள மன்னன், அவனை வெற்றி கொண்டபின் தனது நேர்த்தியை இங்கு நிறைவேற்றினான் என அறிய முடிகின்றது. அதுமாத்திரமன்றி கந்தபுராணத்திலும் கதிர்காமம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. கி.பி. 17ம் நூற்றாண்டளவில் வாழ்ந்த அருணகிரிநாதரும் கூட தனது 'திருப்புகழ்' என்ற நூலில் கதிர்காமக் கந்தனைப் பற்றிப் பாடினார்.

இவ்வாலயத்தில் இடம்பெறுகின்ற பூசை முறை ஆகம விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டதாக அமைகின்றது. வேடுவ இனத்தில் இருந்து வந்த கப்புறாளை என்ற இனத்தவரே இவ்வாலயத்தில் பூசை செய்கின்றனர். பூசையின்போது மந்திரங்கள் ஓதப்பட மாட்டாது. வாயினை துணியினால் கட்டிக்கொண்டு மௌன பூசையே அங்கு நிகழ்த்தப்படும். இவ்வாலயத்தின் மூலஸ்தானம் அடைக்கப்பட்டே இருக்கும். சித்திரை மாதத்தில் பந்தல் நாட்டு விழாவுடன் இவ்வாலய உற்சவங்கள் ஆரம்பமாகி ஆடிமாத தீர்த்த உற்வசத்துடன் நிறைவு பெறும். கதிர்காம திருத்தலம் அளவில் சிறிதாயினும் பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்து சேருகின்ற ஒரு இடமாக இது திகழ்கின்றது. இப்புண்ணிய தலத்தின் அருகே புத்த விகாரை, பள்ளிவாசல் என்பன அமைக்கப்பட்டு சர்வமதங்களும் சங்கமிக்கின்ற புண்ணிய பூமியாக கதிர்காமம் விளங்குகின்றது.

வட இலங்கையில் யாழ்ப்பாணம் நல்லூரில் முருகனுக்கு என அமைக்கப்பட்ட ஆலயமே நல்லூர் கந்தசுவாமி கோயிலாகும். கி.பி.13ம் நூற்றாண்டில் நல்லூரை தலைநகரமாகக் கொண்ட ஆரிய சக்கரவர்த்திகள் ஆட்சி இலங்கையில் நிலவிய போது அவர்களினால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.


இவ்வாலயத்தை கட்டியவன் புவனேகபாகு என்பவனாவான். 15ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பரராசசேகரன் என்ற மன்னன் இவ்வாலயத்திற்கு கேணி ஒன்றை கட்டியதாகவும், அக்கேணிக்கு இந்தியாவின் புண்ணியநதியான கங்கை, யமுனையிலிருந்து நீர் தருவித்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இதன் விளைவாக இப் புண்ணியகேணிக்கு யமுனைக்கேணி என்ற பெயர் ஏற்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்ட இவ்வாலயத்தை ஒல்லாந்தரிடம் செல்வாக்கு பெற்றிருந்த 'நகுநாத மாப்பன் முதலியார்' ஆட்சியாளர்களிடம் தமக்கிருந்த செல்வாக்கை பயன்படுத்தி அழிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் கல்லினால் ஆன ஆலயம் ஒன்றை கட்டி எழுப்பினார். பின்னர் ஆறுமுகநாவலர் காலத்தில் இவ்வாலயம் திருத்தி அமைக்கப்பட்டு விக்கிரகம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1902ம் ஆண்டு இவ்வாலயம் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. இங்கு 63 நாயன்மார்களுக்கும் மடங்கள் கட்டப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ஆடிமாதத்தில் மகோற்சவ கிரியை நடைபெறும்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது சான்றோர் வாக்கு. இலங்கையில் எத்திசைக்கு சென்றாலும் நாம் பல புராதன கோயில்களை வழிபடலாம். இலங்கையின் வரலாற்றில் இப்புராதன ஆலயங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. இக்கோயில்களை நாமும் தரிசித்து பயனடைவோமாக.

ராதிகா – வதனப்பிரகாசம்
1ம் வருடம் – முகாமைத்துவம்
முகாமைத்துவ நிதிப்பீடம்.

## UyyaKondanMalai

UyyaKondanMalai alias Karkudi is a hillock situated in Vayalur - Trichy



main road.Sung by all 3 saints , this temple is a great place to see.

# சிவதீட்சை

சைவமக்களாகிய நாங்கள் தீட்சை பெறுவது முக்கியமானதாகும். நாம் தீட்சை பெறுவதன்மூலமே உண்மையான சைவமக்களாகஆக்கப்படுகின்றோம், நாம் பிறக்கும் போது உண்மையில் சைவமக்கள் அல்ல. சிவதீட்சை பெறுவதன் மூலமே சைவ ஆசாரங்களை அநுட்டிப்பதற்குரிய தகுதியைப் பெறுகின்றோம்.

தீட்சை என்னும் சொல்லானது "ஞானத்தைக் கொடுத்து மலங்களை அழிப்பதெனப் பொருள்படும்"தீட்சைகளைப் பலவாறு வகைப்படுத்தலாம். இவற்றுள் சிவதீட்சை மிகவும் முக்கியமானதாகும். சிவதீட்சை என்பது "சைவமக்கள் சிவபெருமானைத் தியானித்து, வழிபட்டு முத்திபெறவழி செய்வதெனப் பொருள்படும் அதாவது "சிவஞானத்தைக் கொடுத்து, மும்மலங்களை அழிப்பது'' சிவதீட்சை ஆகும்.

சிவதீட்சையை முறைப்படி பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்குப் பல தகைமைகள் வகுக்கப்பட்டுக் கூறப்பட்டிருக்கின்றன. ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலாரும் சிவதீட்சையைப்பெற்றுக்கொள்ளலாம். சிவதீட்சையைப்பெற்றுக்கொள்வதற்குரிய அடிப்படைத்தகைமைகளாக ஒழுக்கம், பண்பு, ஆசாரம், குருபக்தி, இறைபக்தி ஆகிய ஐந்தும் கூறப்பட்டுள்ளன. அத்துடன் சிவதீட்சையைப் பெறுபவர்கள் இம்மை இன்பங்களில் நாட்டங்குறைந்தவர்களாகவும், மறுமை இன்பங்களில் நாட்டங் கூடியவராகவும், மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரண சுத்தி உடையவாகளாகவும் இருத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

சிவதீட்சை கொடுக்கின்ற குருவானவர் சைவ ஆசாரியர் அல்லது சிவாசாரியர் எனக் கூறப்படுகின்றார். முத்தியடைதலை மட்டும் நோக்கமாக உடையவர்கள் பிரம்மச்சாரிய சிவாசாரியையும், போகம், முத்தி ஆகிய இரண்டையும் நோக்கமாகக் கொண்டவர்கள் சிவாசாரியரையும் தீட்சா குருவாகப் பெற்றுக் கொள்ளலாம். சிவதீட்சை கொடுக்கின்ற குருவானவர் சிவாசாரியர் என்னும் பட்டத்தினைப் பெற்றுக் கொள்வதற்குரிய படிமுறைகள் சிவாகமங்களில் வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன சமயதீட்சை, விசேடதீட்சை, நிர்வாணதீட்சை, ஆசாரிய அபிடேகம் என்பனவாகும்.

சமயதீட்சை பெறுபவர்கள் சைவசமய அநுட்டானங்களைச் செய்வதற்குரிய தகுதியைப் பெறுகின்றனர். இவர்கள் "சிவாயநம" என்னும் சூக்கும பஞ்சாட்சரத்தைப் பிரணவங்கூட்டிச் செபஞ்செய்வர்.

சமயதீட்சை பெற்றவர்கள் செய்கின்ற அனுட்டானம், தியானம் பார்த்தல் அல்லது நித்தியகருமம் செய்தல் என்று வழக்கிற் கூறப்படுகின்றது. தியானம் பார்ப்பதற்கு மந்திரங்கள் செபித்தல் வேண்டும்.

விசேட தீட்சை பெற்றவர்கள் சிவலிங்கப் பூசை செய்யும் தகுதியைப் பெறுகின்றனர்.

நிர்வாண தீட்சை என்பது சமயதீட்சை, விசேட தீட்சை ஆகிய இரண்டும் பெற்றவர்கள் தாம் முன்பு செய்த வினைகளைப் போக்கும் பொருட்டு இறுதியாகப் பெற்றுக்கொள்வது இதுவாகும். இத்தீட்சையானது சத்தியோ நிர்வாண தீட்சை, அசத்தியோ நிர்வாண தீட்சை என இருவகைப்படும். சத்தியோ நிர்வாண தீட்சை என்பது முற்றாகப் பற்றற்ற நிலையில் இருப்பவர்களுக்கு உடனே முத்திப்பேறு கிடைக்கும் வகையிற் செய்யப்படுகின்ற

தீட்சையாகும். அசத்தியோ நிர்வாண தீட்சை என்பது ஆன்மா பிராரத்த வினைப்பயன்களை அனுபவித்து முடித்த பின்னர் அது உடலை விட்டு நீங்கும் பொழுது முத்திப்பேறு கிடைக்கும் வகையிற் செய்யப்படுவதாகும்.

சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை என்னும் மூன்றினையும் முறையாகப் பெற்றவர்கள் நித்தியகருமம், சிவலிங்க பூசை என்பவற்றுடன் ஞான பூசையுஞ் செய்யத் தகுதியுடையவர்களாவார். ஞான நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களை விதிப்படி ஓதுதல், ஓதுவித்தல் அவற்றின் பொருளைக்கேட்டல், கேட்பித்தல். சிந்தித்தல் ஆகிய ஐந்தும் ஞானபூசை என்பதில் அடங்கும்.

ஆசாரிய அபிடேகம் என்பது நிர்வாண தீட்சை பெற்ற ஒருவர் குருப்பட்டந்தரிப்பதற்காகச் செய்யப்படுகின்ற கிரியை ஆகும். இவர்கள் பிறருக்குத் தீட்சை கொடுக்குந் தகுதியுடையவர்களாவார். இவர்கள் சிவாசாரியர் என்னும் பட்டத்தினைப் பெறுவதோடு பரார்த்த பூசை செய்வதற்கும் இவர்களால் முடியும்.

சிவாசாரியாருக்கு இருக்கவேண்டிய தகைமைகளாவன உளக்குற்றமற்றவர்களாகவும், உடற்குற்றமற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் இவர்கள் கல்வி அறிவு மிகுந்தவராய் ஒழுக்கசீலராய் இருத்தல் வேண்டும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னுஞ் சைவநாற்பாதங்களிற் பயிற்சி உடையவராய், தம்மை நாடிவருகின்ற சீடர்களுக்குச் சிறந்த ஒழுக்கத்தையும் சைவசமய பாரம்பரிய நெறிமுறைகளையுங் கற்பிக்க வல்லவராய் இருத்தல் வேண்டும். ஒருவர் சிவதீட்சை கொடுக்கும் ஆசாரியராய் இருக்கக்கூடியவயதெல்லை 16 முதல் - 70 வயது வரையாகும்.

தீட்சைகள் பல வகைப்படும். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அவர்கள் மூன்று வயதினை எய்திய பொழுது அவரிற்கு நயனதீட்சையும், பரிச தீட்சையுஞ் செய்து இறைவன் முத்திப் பேற்றைக் கொடுத்தருளினார். திருநாவுக்கரசு நாயனார் அவர்கள் திருவடி தீட்சையும், சுந்தரமூர்த்தி நாயனார் அவர்கள் நயனதீட்சையும் , பரிசதீட்சையும், மாணிக்கவாசக சுவாமி அவர்கள் நயன தீட்சையும், திருவடி தீட்சையும், சாத்திர தீட்சையும், வாசக தீட்சையும் பெற்று முத்திப்பேற்றைப் பெற்றார்கள். மற்றும் திருநாளைப்போவார் அவர்கள் சாம்பவ தீட்சையும், திண்ணனார் (கண்ணப்ப நாயனார்) அவர்கள் சாம்பவதீட்சையும், பரிச தீட்சையும் பெற்று முத்திப் பேற்றை அடைந்தார்கள்.

இனி உலகியலிற் செய்யப்படுகின்ற தீட்சைகள் பற்றி ஆராய்வோம். தீட்சைகள் சாதார தீட்சை, நிராதார தீட்சை என இரு வகைப்படும். சாதாரம் என்பது ஆதாரம் உள்ளது எனப் பொருள்படும். நிராதாரம் என்பது ஆதாரம் இல்லாதது எனப் பொருள்படும்.

ஆணவ மலம் மட்டும் உடைய ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் எனவும் ஆணவம், கன்மம் என்னும் இரு மலங்களை மட்டும் உடையவர்கள் பிரளயாகலர் எனவும், ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் உடையவர்கள் சகலர் எனவும் கூறப்படுவர். விஞ்ஞான கலருக்கும், பிரளயாகலரிற்கும் முத்தி கொடுக்கும் முறை நிராதார தீட்சை எனப்படும். சகலரிற்குக் கொடுக்கப்படும் தீட்சை சாதார தீட்சை எனப்படும். சாதார தீட்சை ஆனது நயனதீட்சை, பரிசதீட்சை, வாசகதீட்சை என ஏழு வகைகள் உண்டு. நயன தீட்சை என்பது குருசீடனைப் பார்த்தல், பரிசதீட்சை என்பது குரு சீடனைத்தொடுதல், வாசக தீட்சை என்பது குருசீடனின் செவியில் உபதேசஞ் செய்தல் என்றும் அமையும்.

பொதுவாகச் சைவ மக்களுக்குச் செய்யப்படுவது ஔத்திரி தீட்சை எனப்படும். இது ஞானாவதி, கிரியாவதி என இருவகைப்படும். ஓமம் செய்வதற்கு வேண்டிய குண்டம், மண்டலம், அக்கினி, நெய், சிருக்கு முதலிய அனைத்தையும் மனத்தாற் கற்பித்துக் கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியைகளைச் செய்து சீடனின் பாசத்தை நீக்குந் தீட்சை ஞானவதி எனப்படும். குண்டலம், மண்டலம் முதலியவற்றைப் புறத்தே அமைத்து, ஆகுதி முதலிய கிரியைகளைச்செய்து சீடனுடைய பாசத்தை ஒழித்தல் கிரியாவதி எனப்படும்.

சமய தீட்சை செய்யும் முறை பற்றி ஆராய்ந்தோமானால், ஞானவதி தீட்சையானது மானசமாகச் செய்யப்படுவதனால் இவற்றை விபரித்தல் இயலாது. எனினும் கிரியாவதி தீட்சையில் இடம்பெறுகின்ற கிரியைகள் அனைத்தும் ஞானாவதியில் மனத்தாற் செய்யப்படுகின்ற காரணத்தினால் இத் தீட்சையை விபரித்தல் சாலவும் பொருத்தமானது.

முதலில் தீட்சை செய்வதற்கு ஏற்ற இடம் அதாவது மண்டலம் ஒழுங்கு செய்யப்படும். மண் நிலமாயின் சாணத்தினால் மெழுகியும், சீமெந்து நிலமாயின் கழுவி, மஞ்சள் நீர் தெளித்துச் சுத்தஞ் செய்து கொள்ள வேண்டும். பின்னர் ஓமம் வளர்ப்பதற்குக் குண்டம் ஒன்று செய்யப்படும். தீட்சை கொடுக்குஞ் சிவாசாரியர் காலையிலே தம் ஆன்மார்த்த பூசைகளை நிறைவு செய்த பின், உத்தரீயம், தலைப்பாகை, உருத்திராக்க மாலை முதலியவற்றை அணிந்து குருவுக்குரிய அலங்காரங்களைச் செய்து கொள்வார். பின்னர் “சிவோகம்பாவனை” (தம்மைச் சிவனாகப் பாவித்தல்) செய்து கொண்டு, தீட்சை கொடுக்கும் மண்டலத்தினுட் செல்வார். அங்கு அஸ்திர மந்திரத்தினாலே தான சுத்தி செய்து, துவார பாலகருக்குரிய பூசை செய்து, ஓமத்திரவியங்களுக்கு மந்திர நீர் தெளித்துச் சுத்திசெய்வார்.

சிவாசாரியர் தாம் அமர்ந்திருக்கும் மண்டலத்திற் செய்யப்படுகின்ற கிரியைகள் அனைத்திற்குஞ் சாட்சியாகவும், நிறைகுடமாகிய கும்பத்துக்கு வேள்விக் காவலராகவும் தீ வளர்த்துச் செய்யும் ஓமத்தை ஏற்பவராகவும், தீட்சை பெறுவதற்காகத் தம்மை அடைந்த சீடரின் பாசத்தைப் போக்குபவராகவும் சிவபெருமான் அங்கு எழுந்தருளி இருக்கின்றார் என்ற மனப்பாவனையுடன் அங்கு தம் கிரியைகளைச் செய்வார்.

மண்டல வடிவினளான இலக்குமிக்கும், பிள்ளையாருக்கும் மண்டலத்தின் மத்தியிலுள்ள கும்பத்தின் கீழ் இடப்படுகின்ற இயந்திர வடிவிலான மண்டலேசருக்கும் பரமேஸ்வரனுக்கும் அட்டதிக்குப் பாலகருக்கும் பிற கடவுளர்க்கும் உரிய கிரியைகள் செய்யப்படும். பின்னர் ஓமாக்கினியை விதிமுறையாக உண்டாக்கி ஓமஞ் செய்யத் தொடங்குவர்.

மண்டலத்திற் செய்ய வேண்டிய கிரியைகள் அனைத்தையுஞ் செய்த பின்னர் நீராடித் தோய்த்து உலர்ந்த ஆடையை அணிந்து தீட்சை பெற ஆயத்தமாக இருக்கின்ற சீடரைச் சிவாசாரியர் பிரணவ சொரூபமான ஆசனத்தில் இருத்தி, அவருடைய தலைமுதல் பாதம் வரை தாம் அருட்பார்வை செய்து, நயனதீட்சை வழங்குவார். இவ்வேளையிற் சீடர் குருவை நோக்கி வணங்கியவாறு இருப்பார். இதனை அடுத்து சிவாச்சாரியார் மந்திரங்களைச் செபித்தவாறு தம் வலக்கையைச்சீடரின் உச்சந்தலையில் வைப்பார். இத்தீட்சையானது பரிசதீட்சை எனப்படும். இதன்பின்னர் சீடரின் தலையையும், தம் தலையையும் பட்டுத்துணி ஒன்றினால் மூடிக் கொண்டு பிள்ளையார், சிவபெருமான், உமாதேவியார், முருகன் ஆகிய கடவுளர்க்குரிய மூலமந்திரங்களுக்குப் பிரணவங் கூட்டிச் சீடனின் வலக்காதில் இரகசியமாக உபதேசிப்பார். இத் தீட்சை முறையானது வாசக தீட்சை முறையாகும்.

தீட்சை பெற்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் நீராடல், நித்தியகருமம், செபம், தியானம், குருலிங்க சங்கமசேவை என்பனவாகும். நித்திய கருமம் என்பதில் நீர்ச்சுத்தி, பூமிசுத்தி, குட்டுதல், கும்பிடுதல், ஆசமனம், தொடுமிடம், விபூதி தாரணம், பிராணாயாமம், தருப்பணம், சூரிய நமஸ்காரம், முலமந்திர செபம், தோத்திரம், நவநாயகர், அட்டதிக்குப் பாலகர், பூமாதேவி முதலிய தெய்வங்களுக்கான வணக்கம் என்பன முக்கியமான அம்சங்களாகும். சமய தீட்சை பெற்றவர்கள் மட்டுமே முறையாகப் பிரணவங் கூட்டிச் சுக்கும பஞ்சாட்சர செபஞ் செய்யத் தகுதியுடையவர்களாவர்.

தீட்சை பெற்றவர்கள் தம் பொது வாழ்க்கையிற் கொல்லாமை, கள்ளாமை, புலால் உண்ணாமை, மதுவும் போதைப் பொருள்களும் உட்கொள்ளாமை, பிறர்மனைநயவாமை, அருளுடைமை, பொறையுடைமை, வஞ்சனையின்மை மனத்தைரியம் மீதூண்விலக்கல் முகலான நியமஒழுக்கங்களையும், தவம், இறை நம்பிக்கை, ஈகை, முதியோர் வணக்கம், செருக்கின்மை, மெய்ஞ்ஞான சிந்தனை, நன்மை தீமைகளைப் பகுத்தறிதல், விரதம் முதலான நியம ஒழுக்கங்களையுங் கடைப்பிடித்தல் நியதியாகும். இவற்றோடு பஞ்சதோத்திரம் ஓதுதல், புராண பாராயணம், ஆலயத்தொண்டு, ஆலய வழிபாடு என்பன போன்ற நற் கருமங்களிலும் ஈடுபடுதல் வேண்டும். இத்தகைய பயிற்சிகளினால் இவர்கள் உலகப் பற்றுக்களைப் படிப்படியாகக் குறைத்து ஈற்றில் முத்தி பெறுதல் எளிதாகும்.

சைவ சமயத்தவர்கள்அனைவரும் எத்தகைய வேறுபாடுமின்றிக் குறைந்த பட்சம் சமய தீட்சையாவது பெற்று, சரியாபாதம், கிரியா பாதம், யோகபாதம் என்னும் படிநிலைகளைத் தாண்டிச் சென்று, ஞானபாதத்தில் நின்று முந்தி எய்தல் சாத்தியமானதாகும். எனவே ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் சமய தீட்சையாவது பெற்று முத்திப் பேற்றை அடைவோமாக.

இ. காயத்திரி
1ம் வருடம் - முகாமைத்துவம்
முகாமைத்துவ நிதிப்பீடம்

உதயம்ஸ்
උදයම්ස්

US
UDAYAMS
WHOLESALE & RETAIL
DEALERS IN TEXTILES
188, Main Street,
Colombo - 11
Tel : 434507
325388

# திருவடியின் பெருமை

எல்லாம் வல்ல இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்து அருள் பாலிக்கிறான். இத்தகைய இறைவனுடன், சிவத்துடன் இரண்டறக் கலந்திருப்பவளே சக்தி. இறைவன் எவ்வெவ்வுருவம் தாங்குகின்றானோ அவ்வவ்வுருவத்துக்குத் தக்கபடி சக்தியும் மாறி மாறிக் காட்சியளிப்பாள். "எத்திறம் நின்றானீசன் அத்திறன் அவளும் நிற்பாள்" என்று கூறுவதனால் இதனையறியலாம். சக்தியின்றேல் சிவமில்லையல்லவா!

இறைவன் வேறொன்றையும் கருதாது தன்னிலையில் தானிருக்கும் போது ஒருவனாய்சிவம் என்ற நிலையிலிருக்கும் போது அவனுக்கொரு செயலுமில்லை. எனவே செயல் செய்வதற்கு வேண்டிய உருவம் முதலியனவும் இல்லை. செயலொன்றும் செய்யாது சும்மா இருப்பவனைப் பார்த்து "உனக்குச் சக்தியில்லாவிட்டால் சிவனே என்று சும்மா இரு" என்று கூறுகின்றோ மல்லவா! இவ்வாறுள்ள சிவன் தனக்கேயுரிய தனிப்பெருங் கருணையினாலே. உயிர்களுக்காக ஏதேனுமொரு செயலைச் செய்ய ஆரம்பிக்கும் போது தானும் சக்தியுமாக சிவனும் சக்தியுமாக இரு கூறாக விளங்குகின்றான். சிவமும் சக்தியும் இரண்டாகிய போதும் இரண்டும் தனித்தனிப் பொருளல்ல. எனவே சிவமென ஒரு பொருளாக இருந்த இறைவன் சிவம் சக்தியென இருகூறாக இயைந்து நிற்கும் நிலையைக் காட்டுவதே "அர்த்த நாரீஸ்வரர்". "மாதொரு பாகன்" என்னும் வடிவங்கள். இறைவன் ஒரு பகுதியும் இறைவி ஒரு பகுதியுமாக ஒன்றாகத்தோன்றும் உருவமே இது. நெருப்பில் சூடு போல் இணைபிரியாதிருப்பதே இச் சக்தி. கவிச்சக்கரவர்த்தி காளிதாசன் "சொல்லும் பொருளும் போல இணைந்துள்ள பார்வதி பரமேஸ்வரர்களை வணங்குகிறேன்" என்று கூறுகிறான். "அறிவினில் அருளால் மன்னி அம்மையோடப்பனாகி நின்ற சிவனடி சென்னி வைப்போம்" என்று சிவஞான சித்தியார் கூறும். இவ்வாறு இணைபிரியாதுள்ள சிவமும் சக்தியும் அகில உலகினையும் இயக்குகிறார்கள். மேலும் இறைவன் ஆருயிர்களின் இன்னல்களை நீக்கி அருள்புரிவதற்காக அடியார்களின் மனபரிபக்குவ கலைகளுக்குத் தக்கபடி பல வடிவங்களில் தோன்றி அருள்பாலிக்கின்றான்.

> "யேரு யேரு ஹி ரூபேண சாதகஸ் சமஸ்மரேத் ததா!
> தஸ்ய தந்மயதாம் யாதி சிந்தாமணி ரிவேஸ்வர!!"

சிந்தாமணி என்று ஒரு இரத்தினமுளது. அது கற்பகவிருட்சம் எப்படி நாம் வேண்டியதை விரும்பியதை அவர்களின் தக்க நிலைகளுக்கேற்ப விளங்குகின்றதோ! அதே போல் சிந்தாமணியும் விளங்கும். இவை போலவே இறைவனும் சாதகன் ஒருவன் எந்தஎந்த வடிவத்தில் சிந்தித்துதியானித்து வழிபடுகின்றானோ, அந்த அந்த உருவத்தில் தோன்றி அருளுவான் என்பது மேலுள்ள ஆகமப்பாடலின் பொருள். இதனையே திருநாவுக்கரசநாயனார்.

> "ஆரநவ வுள்குவார் உள்ளத்துள்ளே
> யவ்வுருவாய் நிற்கின்ற உருவத்தோன்றும்"
>
> என்று கூறுகின்றார்.

மேலும் நாம் ஆலயத்துக்குச் செல்கின்றோம். அங்கு பல திருவுருவங்களைத் தரிசிக்கின்றோம். விநாயகராக -ஷண்முகராக - சதாசிவ மூர்த்தியாக நான் முகனாகப் பல திருமேனிகளைக் காணுகின்றோம். இத் திருவுருவங்களை காணும்போது பல மாறுபட்ட உருவங்கள் அங்குள்ளன. அவற்றின் தலைகள் ஒன்றாக - நான்காக - ஐந்தாக - ஆறாகப் பல

எண்ணிக்கைகளில் இருப்பதைக் காணலாம். பிரமனுக்கு நான்கு தலைகள், சதாசிவ மூர்த்திக்கு ஐந்து சிரசுகள் முருகனுக்கு ஆறு தலைகள். இது போல கைகளும் கண்களும் இரண்டு முதல் முகங்களுக்குத் தக்கபடி இருப்பதனையும் அவதானிக்கலாம். இவற்றின் தலைகள் கண்கள், கைகள் பலவாக அமைந்த போதிலும் ஒரு அவயம் மட்டும் மாறாமல் ஒரே நிலையில் ஒரே எண்ணிக்கையில் விளங்குவதனையும் காணலாம். அந்த அவயவம் தான் என்ன? அது தான் பாதங்கள் – திருவடிகள்.

மேலே கூறிய உருவங்கள் எல்லாவற்றையும் பார்க்கும் போது எல்லாவற்றிற்கும் திருவடிகள் இரண்டாகவே இருப்பதைக் காணலாம். இதனை நாம் சற்றுச் சிந்திக்கும் போது ஒருவர் தான் பல வடிவங்களில் – வேடங்களில் வருகின்றார் என்பது புலனாகும். யாவரும் அறிந்த மிகச் சாதாரண உதாரண மூலம் இதனை விளக்குவதானால் – ஒருவர் இராணவனனாக நடிக்கும் போது பத்துத் தலைகள், இருபது கைகள் பிரமனாக நடிக்கும் போது நான்கு தலைகள் முருகனாக வரும் போது ஆறுதலைகளும் பன்னிரு கரங்களும், பிள்ளையாராக நடிக்கும் போது யானை முகமும் நான்கு கரங்களும் துதிக்கையுடன் இருக்கும். இவ்வாறு முகங்களும் கைகளும் வேடத்துக்குத் தக்கபடி மாறுபட்ட போதும் அவரின் கால்களைப் பார்த்தால் இரண்டு தானே உள்ளது. பின் அவர் வேடத்தைக் களைந்துவிட்டு வெளியே வரும் போது ஒரு தலை இரண்டு கைகளுடன் காட்சி தருகின்றார் அல்லவா! ஒருவரே பல வேடங்களில் இடம் – தேவை ஆகியவற்றுக்கு தக்கவாறு நடித்துள்ளார் எனக்கொள்கின்றோமல்லவா! இதனைப் போலவே இறைவனும் எந் நோக்கத்துக்காக எதனைச் சாதிப்பதற்காகத் தோன்றுகின்றாரோ, அதற்குத் தக்கபடி பல உருவங்களில் தோன்றி அருள் பாலிக்கின்றான் என்ற பேருண்மையினைத் திருவடிகள் விளக்குவதாக கொள்ளலாம்.

ஆகையினால் தான் திருமுறைகளிலும் பல இடங்களில் திருவடிகள் பெரும்பான்மையாகப் போற்றப்படுவதனைக் காண்கின்றோம். உதாரணமாக ஈசனெந்தை இணையடி நிழலே. 'ஈசனடிபோற்றி எந்தையடி போற்றி' முதலியன இதனை சுட்டுகின்றன. அவர் கால்களைப் பிடி யாவும் நடக்கும் என்ற பழமொழியும் இதனையே திருவடியின் பெருமையினையே விளக்குகின்றது. இறைவனின் திருவடிகளை சரணகமலங்களைச் சரணடைந்தால் இடையறாது சிந்தித்து வணங்கினால் நாம் விரும்பிய பேறுகளைப் பெறலாம்.

எனவே நாமும் இறைவனின் நமது இஷ்ட தெய்வத்தின் குல தெய்வத்தின் பாத கமலங்களை திருவடிகளை இறுகப் பற்றி மனம் மொழி, மெய் எனும் திரிகரண சுத்தியுடன் வணங்கினால் விரும்பிய பேறுகளைப் பெறலாமன்றோ!

உஷாந்தி சுந்தரலிங்கம்
1ம் வருடம் முகாமைத்துவம்
முகாமைத்துவ நிதிப்பீடம்

## Vilanagar



This temple lies 6 kms to the east of Mayiladuthurai (Mayuram ) . This temple falls under a special type of temples called "Gnazhar koil".Great sculptures

# Members of Hindu Society

## FACULTY OF MEDICINE

### 2000 / 2001 1st Year

K. Mayurathan
M. Anomilan
M. Gnanarooban
S. Kumuthini

### 1999 / 2000 2nd Year

V. Bhanugoban
M. Logini
P. Nirojini
D.Sharmugapriya
M.C. Shivanthan
Vengadesh
A. Komakal
S. Gayathiri
J. Dinesh
K. Guruparan

### 1998 / 1999 3rd Year

S. Sutharsan
T. Suhitharan
N. Rajaganesh
S. Selvaganesh
S.D. Suthagar
B. Renuka

### 1997 / 1998 4th Year

K. Sairam
J.D. Arudchelvam
V. Priyadharshini
S. Shreevithiya
K. Kalaichelvan
A. Ajini
T. Shanmugapriya

### 1996 / 1997 Final Year - juniors

K. Sutharshan
M. Pradeepan
Y. Ruthra
A.A.D. Aravinthan
K. Kalaichelvan
R. Rameshanker
T. Rohan
D. Venoden
T. Gunasegarum
M. Senthilkumaran

## FACULTY OF SCIENCE

### 1st Year (juniors)

Sutharsan.N
Sivaparan.S
Gajendra.P
Jeyamathan.J
Partheepan.B
Kandeepan.S
Chenthooran.K
Saathveegan.K
Maithili.S
Kirishanth.S
Gowri.N
Julie.U.R
Shiyamala.G
Mayooran.C
Mirathan.S
Kumarathasan.M
Filex.R.G
Nadeshkumar.S
Gaianathan.K
Murugathas.E
Senthooran.R
Premkumar.R
Nirmalan.N
Panchardcharam.Z
Jeyanathan.T
Ananthan.Y
Ranjithkumar.S
Ajinthan. S

### 1st Year

Gobidharan.N
Ragulan.P.K
Thiruchelvum.P
Nimalraj.P.C
Selvendra.S
Nalinda.S
Senthilvel.S
Kuhajeyan.G
Jehan.G.W.D
Nagarupan.R
Anuraj.S
Asokan.R
Bernard.P.R
Suthan.V
Dharmeehan.D
Prakash.V
Gananathan.K
Sathyan.S
Inpan.I.R
Yogendirakumar.K
Karunakaran.R
Kuruparan.M
Mohana.N
Vithuna.S
Sayanthy.K
Abarna.R
Kalaimathy.P
Shanthini.K
Nishotha.N

### 2nd Year

Prasanna.B
Luxshme.B
Vydehi.B
Rajanihanth.V
Rajanihanth.P.A
Sutharsaraj.S
Tharsini.S
Vithuvanu.P
Thiruketheeswaran.A
Govarthanan.N
Kugatharmini.T
Jeyanthy.T
Rodrigo.M.A
Thangaraj.L.R
Roshan.F.N
Jegatheesh.Y
Angayatcanny.V
Dakshayini.S
Kugavathy.K
Sivakanthan.S
Prabalini.S
Chandrahasan.N
Jeyanthan.N.S
Chendooran.T
Aravindhan. V

### 3rd Year

Balakumar.Y
Bhavan.S
Chenduran.T
Gayathiri.S
Girvani.G
Ithayavani.A
Jehan.M
James.S
Janani.R
Jenitha.E.M
Jeyatharshini.V
Kiruban.S

| | | |
|---|---|---|
| Mahilnancai.T | Muralitharan.K | Nandaupan.P |
| Navaneethan.S | Nirojan.N | Parthipan.V |
| Piradeepan.V | Prashanthan.W.V | Ramanan.A |
| Sasipraba.S | Sasitharan.P | Satheeskumar.S |
| Senthuran.S | Subajini.S | Sutharshan.N.C.V |
| Suthagar.P | Sutharsan.K | Thankarajah.M.S |
| Thayanithy.T | Vakeesan.T | Vanitha.K |
| Varni.S | Vijitha.S | |

**Final Year**

| | | |
|---|---|---|
| Mayurika.A | Manoharie.S | Ramaneetharan.M |
| Vasuki.S | Kundhavi.B | Sugeeva.A |
| Sobana.R | Ravindran.K | Nishan.J |
| Santhakumaran.S | Shanthini.R | Pushpakaran.K |
| Sugeevan.T | Kannan.P | Jeyakumaran.S |
| Chithrakaladevi.R | Sivendran.N | Juberdhas.M |
| Tangavel.T | Jeyathevan.V | Premila.N |
| Thanenthran.S | Pathmakulasingam.K | Kariharan.T |
| Giriya.S | Geethanjali.S | Sreegowri.S |
| Dileepan.D | Ananthapragash | |

**Final Year (Special)**

| | | |
|---|---|---|
| Dharini.W | Noel.N.N | Reginald.J.E |
| Manojkumar.M | Suthakaran.S | Rupa.T |
| Sugantha.S | Sudharshana.S | |

## Faculty of arts

**1st year**

| | | |
|---|---|---|
| M.Sutharshini | Anjena | S. Sangeetha |
| Shamini | Karunanithy | Sugirthamalar |
| Sugumar | N. Sathiyalingam | |

**2nd year**

| | | |
|---|---|---|
| Gowsala.K | Paranitahri.K | Navarangini.R |
| Kavittha.J | Rajeswary.A | Yalini.J |
| Thibamala | Amutha | Nirupa. |
| Devahela | | |

**3rd year**

| | | |
|---|---|---|
| Mathumai.S | Vasuki.M | Sutharshini.S |
| Rajalingam.T | Kesawamoorthy.N | Santhapillai.A |
| Vincent | | |

**Final year**

| | | |
|---|---|---|
| Gowry.K | Ganesan.T | Bamini.S |
| Nalini.S | Vathsaladevi.V | Sutheshana.K |

## FACULTY OF LAW

### First Year

| | | |
|---|---|---|
| A. Arumala | M.M. Arullhas | P. Rathini |
| G.C. Ranitha | M. Tharany | T. Janakan |
| S. Sivagowri | C. Carmalita | A.S. Mirulhini |
| M. Kirulhiga | | |

### Second Year

| | | |
|---|---|---|
| S. Sulhamathy | T. Chithraleka | P. Aatheepan |
| T. Thusyanthan | N. Partheepan | A. Judeson |
| V.S. Vigneswary | R.C. Chowmikka | T.I. Rajanikanth |
| V.D. Selvasutharsan | S. Satheeswaran | G. Rajan Nirubesinga |

### Third Year

| | | |
|---|---|---|
| T. Karunakaran | A. Gracian Alexrajah | K.C. Rajitha |
| J. Verjini | B. Jasmine Isashella | B. Deniswaren |
| T. Subarajini | T. Karikala | J. Aruran |
| V. Priyanthi | K. Vasavan | T. Kesavarajan |
| S. Jebanesan | | |

### Final Year

| | | |
|---|---|---|
| S. Shamini | K. Sivathanuyal | K. Nauaneetha |
| T. Sasilala | N. Shiyamini | N. Sutharjini |
| S. Subajini | J.N. Rajanayrgam | S. Sutherjanan |
| P. Pradeepkumar | S. Koklarany | T. Vinayagaroothy |
| A. Alhavan | Primas Siriva | |

# FACULTY OF MANAGEMENT AND FINANCE

**1st year**

| | | |
|---|---|---|
| Arullendran.M | Gowri.G | Hanitha.J |
| Janarthanan.S | Kirubananthan.S | Maran.M |
| Nagunthan.N | Naleena.N | Pradeeban.S |
| Prasanthan.K | Radhika.V | Raguram.J |
| Kalani.R | Rathisan.R | Kayathri.R |
| Saimathavan.V | Kasthuri.S | Gayathri.S |
| Sutharshini.S | Srigowri.S | Supaskaran.K |
| Valambikai.T | Venugoban.K | Vickneshana.S |
| Allikkumar.V | Annshobana.A | Arunprassath.K |
| Jerovanya.P | Jeyagowry.J | Kandeepan.A |
| Kavitha.K | Lalithasorubini.K | Bavani.M |
| Mathiyalagan.P | Nanthakumar.T | Jananee.P |
| Birentha.P | Prabashini.S | Dharmadeepa.R |
| Kokilavathani.R | Selvapriya.S | Selvasundaram.P |
| Senthoran.S | Seralingam.N | Shanthakumar.G |
| Sivaarulraj.K | Sivakumar.N | Kavitha.S |
| Sivaruban.S | Kishanie.S | Sobaram.N |
| Usshantha.S | thamaraichchelvan.S | Thirukumaran.M |
| Thiyahini.P | Varusha.V | Vidhayashankar.S |
| Vithiyaruby.M | Karthiga.V | Aruna.Y |
| Rajeshkumar.R | Sarvana.T | Jamuna.G |
| Prabakaran.S | | |

**2nd year**

| | | |
|---|---|---|
| Tharany.G | Jamuna.J | Kavitha.V |
| Kethees.M | Pramila.M | Mayuran.T |
| Mayooran.K | Mythile.T | Thirumagal.R |
| Shoba.P | Sivakumar.S | Divya.S |
| Sutharsan.S | Thinesh.S | Thirulogajeyanthi |
| Udayaseelan.T | Veerasivaram.P | Vanajah.V |
| Elankeeran.R | Gopika.P | Bakithara.K |
| Kanthanesan.T | Karunakaran.M | Naburtha.N |
| Jenitha.P | Pradeepan.C | Pulandiran.S |
| Ponithawathy.K | Suganthi.P | Puwnalogini.T |

Kalpana.R
Ramashwaran.K
Shivaskantha.M
Sivachandran.K
Sivarajah.M
Sivaruban.S
Sriselvakanthan.S
Thusidamala.S
Sutharsan.P
Anuratha.T
Thivya.V
Ushanthan.T
Rajkumar.S

**3rd year**

Ananthakumar.K
Nithyakala.A
Baskaran.S
Chandrika.M
Geethanjali.S
Vasuki.K
Kannan.M
Kumutha.K
Sughanthini.V.R
Mohanlal.P
Pathmaviji.P
Thurga
Sivajothinathan.R
Sivanathan.R
Usha.S
Rathipriya.T
Lakshmi.M
Suganya.S
Sarangan.S
Nandajothy.L.A
Nadarajah.S
Pottramarai.P
Ranjini.S
Sasikala.S
Sudravel.J
Valarmathi.M
Vasikaran.E
Veeriah.V
Canijude.B
Sivagnanam.K
Arulanandam.D
Arunthanathan.P
Jeyabalan.B
Katpakanthan.
Ponmalar.M
Sabesan.S
Satkunakaran.J
Sanmugam.K
Sivasubramanium.S
Thiyagarajah.M
Uthayarani.S
Visvanathan.M
Yarleny.A

**Final year**

Arikaran.S
Gowreesan.K
Janarthanan.P
Jeyadeepan.A
Jeyanth.Y
Krishnaleela.H
Mithily.S
Piratheepan.K
Ragavan.M
Rajakumaran.S
Sasikumar.S
Sasikumar.M
Menaga.S
Surendren.N
Twinda.S
Varatharaj.S
Vijaya.K
Nagaratna.S
Uthayashankar.S
Parameswaran.S
Paraneethanam.V
Suseenthera.K
Baskar.P
Dineshkumar.K
Ebenzer.P
Inpakeethan.M
Jemilgulal.P
Muguntharaj.S
Anpuarsan.M
Sugathargini.S
Thavakumaran.T
Abirami.T
Thivakarn.P
Jegapriya.T
Vanitha.K
Vinothini.G
Sivasoruban.S
Babu.P
Vijaya.K

## Faculty of Medicine....

### 1996/1997-Final juniors...

| | | |
|---|---|---|
| Thivakaran.T | Kugapriya.K | Vanitha.N |
| Mehala.R | Rajani.M | Shironee.A |
| Sivamala.S | Nagenthira.S | |

### 1995/1996-Final Year Seniors

| | | |
|---|---|---|
| Sutharshan.V | Srishankar.S | Gnanachandran.C |
| Sivapriyan.S | Ksivakumar.K | Kirupalar.V |
| Kavitha.A | Janaki.P | Murugathas.S |
| Nirantharakumar.K | Reginald.K | Norman Rosanth.S |
| Mathanakumaran.S | Anselm.M.V | Sorubini.T |
| Revathi.T | | |




*With Best Compliments*

**New Ranjanas**
**Jewellery Mart**

116V, Sea Street,
Colombo-11.
Tel: 074-712597

*With Best Compliments*

**Arul Study Circle**

*Head Office:*
*111, Bonjean Road,*
*Kotahena.*
*Colombo - 13.*

*Branch:*
*344/17,*
*Jampettah Street,*
*Colombo - 13.*

*Phone: 327524, 331495*

*With Best Compliments*

*From*

**Global Publications**
**Global Printer (Pvt) Ltd.**

*Publishers, Printers & Cartons Makers*

195, Wolfendhal Street,
Colombo - 13.
Tel : 334557, 458273
Fax : 330588
E-mail : globje@sltnet.lk

"Thankfulness is always a better investment"

We wish to express our deep gratitude and our sincere thanks to.....

# Our Vice Chancellor Prof. Mrs. Savithiri Gunasekara for all her encouragement and support

# Our Senior treasurer Prof. Y. Rasanayagam for all her ready guidance, encouragement, support and her unstinted help to us.

# Our Chief Guest Prof. Uma Kumaraswamy for being so thoughtful and so kind as to spend her precious time with us and honours with her presence.

# All religious heads and genius writers for inspiring messages and articles.

# All Deans of faculties, Lecturers and all other academic staff for their kind concern, inspiring guidance and invaluable support in our endeavours.

# All distinguished guests and invities for with your kind presence. "Hope, you enjoyed the programme"

# All other non academic staff and contributors in various ways.

# All participants who took part in various programmes.

# All light, sound and stage personnel for a marvellous job, well done.

# All fellow undergraduates for their help efforts and their harmonious cooperation which went to make this event as a beautiful one.

# All advertisers, well wishers, donors and passed out students from all faculties to whom we are indebted greatly for the patronable, whole hearted generosity and invaluable support which made this event and souvenir success.

# Mr. V. Amuthan, for his musical melodies and generosity.

# Mr. N. Sathiyasuthan & Mr. Thavabalan who helped to design the Cover page.

# The management of Saraswathi Hall for their continuous co-operation towards our society.

# Our printer R.S.T. Enterprises for doing such an excellent job by printing the souvenir and invitation card.

# Last but not least we thank all others who made numerous invaluable contributions, to whom we are grateful

Hindu Society
University of Colombo

*With Best Compliments*

*From*

**UNION**

**CONSTRUCTION**
**ENGINEERING LTD.**

8 B/2, York Arcade Building,
Leyden Bastian Road,
Colombo 1,
Sri Lanka.

Tel : 434742, 336333, 348305
Fax : 336333
E-mail : union@eureka.lk

இந்து மன்றம் வளர்க.......

கலைகள் வாழ்க.........

DevVon

KITCHEN SINK

PIONEER MANUFACTURERS OF STAINLESS STEEL AND ALUMINIUM KITCHEN SINKS IN SRI LANKA

RAJASINGHAM
INDUSTRIES (PVT) LTD.

PIONEER MANUFACTURERS OF STAINLESS STEEL & ALUMINIUM KITCHEN SINKS.
MANUFACTURERS OF KITCHEN UTENSILS
DEALERS IN GENERAL HARDWARE & GOVERNMENT SUPPLIERS

*HEAD OFFICE:*
105, MESSENGER STREET, COLOMBO - 12.
TEL : 435680, 441223 FAX : 94 - 1 - 421491
E - MAIL : rajasin@eureka.lk

*FACTORY:*
190 C, IHALAYAGODA,
GAMPAHA.
TEL : 033 - 60816 - 8

www.asiabusiness.com/rajasinghamind